கம்பன் மணி மலர்

1985

27)

ரக்தாட்சி பங்குனி 20உ முதல் 23உ வரை

1985 ஏப்ரில் 2 முதல் 5 வரை நிகழ்ந்த

47-ஆவது கம்பன் திருநாள் வெளியீடு

.ம்பன் கழகம், கம்பன் மணி மண்டபம், காரைக்குடி-2.

உள்ளுரை

முன்னுரை

கம்பன் ஓர் உலக மகாகவி; கவிச்சக்கரவர்த்தி.காப்பிய வானில் கதிரவனாய் நின்று ஒளிர்பவன். இவன் கல்லாத கலையும் வேதக்கடலும் உலகில் இல்லை எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் நம் தந்தை பிரான் கம்பன்.

முத்தரையரிடமிருந்து தஞ்சைப் பகுதியை மீட்டுச் சோழப்பேரரசை நிறுவிய விஜயாலயன் காலத்தில் மிளிர்ந்தவன் கம்பன். விஜயாலயன் மகன், கோதண்டராமன் எனப் பெயர் சூடிக் கொண்ட ஆதித்தன் (கி.பி. 871—907) காலத்தில், அவனால் பெரிதும் மதிக்கப் பெற்றவனாய் விளங்கியவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனை,பெற்ற தந்தையினும் பேணிக் காத்து நின்றவர் சடையப்ப வள்ளல். இன்று கதிராமங்கலம் என விளங்கும் வெண்ணெய்நல்லூர்தான் சடையப்பர் வாழ்ந்த வள நகர். கம்பனின் பல்துறைப் புலமையும், எல்லையிலாக் கவிதா சன்னதமும் கற்றோரை யெல்லாம் ஈர்த்து நின்றன. முடியுடைத் தார்வேந்தர்களும், ரசிகப்பெருமக்களும், கம்பனைப் பெரிதும் மதித்துப் போற்றுவாராயினர்.

கம்பனின் போற்றற் பெரும்புலமைக்கு என்றும் கட்டியங் கூறிக்கொண்டு விளங்குவது அவன் அருளிய இராமாவதாரம் என்னும் இராம காதை! தமிழ் மொழியின் வளத்திற்கும், தமிழர் தலை நிமிர்வுக்கும், ஒப்பற்ற உதவியாய் நின்று நிலவுவது கம்பராமாயணம். தமிழ் மொழியின் தனிப்பெரும் காப்பியத்தை எம்மப்பன் கம்பன், சடையப்பன் பதியாம், வெண்ணெய் நல்லூரில் அரங்கேற்றினான். மன்னர்களும், மறையோர்களும், ரசிகப் பெரு மக்களும், அறம் பேணும் பொதுமக்களுமாக நிறைந்திருந்த கண்ணியம் நிறைந்த அவைக் களத்திலே அரங்கேற்றம் நடைபெற்றது. பவித்திரமான அக்காப்பியம் அரங்கேறிய புனிதவிழா ஒரு பெரும் திருவிழாவாக,''நாவலோ, நாவல்!''என்று நடந்திருக்க வேண்டும்.

சகாப்தம் 807: கலியாண்டு 3986க்குச் சரியான விசுவாவசு—பங்குனி 4ந்தேதி (கி.பி,886 பெப்ருவரி 22) புதன்கிழமை அத்த நட்சத்திரமே இராமாவதாரம் அரங்கேறிய பெருநாள் அன்றுதான் நம்முடையவன் கம்பனை கவிச்சக்கரவர்த்தி என்று அறிவுடையுலகம் மனமாரப் பாராட்டி விருதளித்து மகிழ்ந்தது.

கம்பன் பிறந்த நாளை நாமறிய எவ்வகைச்சான்றுகளும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், கவிச்சக்கரவர்த்தி பிறந்த நாளை நாம் நன்கறிவோம். பங்குனி-அத்த நாளில் தானே கவிச்சக்கரவர்த்தி பிறந்தான்! எனவே, இராமாவதாரம் அரங்கேறியதும் 'கவிச்சக்கரவர்த்தி' என்று விருதுப்பெயரைக் கம்பன் ஏற்றருளியதுமான அந்தப் பங்குனி அத்த நாளையே கம்பன்

திருநாளாக-ஜன்ம நட்சத்திரமாக-ஏற்று, விழா எடுத்து வருகிறோம். மகம், பூரம், உத்தரம் ஆகிய முதல் மூன்று நாள்களில் காரைக்குடியில் உள்ள கம்பன் மணிமண்டபத்திலும், பங்குனி அத்த நாளில் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி சமாதி கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் கம்பன் பள்ளிபடை திருக்கோயிலிலும், தூய இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது கம்பன் கழகம்.

இவ்விழா எவ்விதமான சாதி, சமய, மொழி, கட்சி, பால் வேறுபாடின்றி யாரும் கலந்து மகிழும் அருமையுடையதாகும். புலவர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், திறனாய் வாளர்களும், ரசிகர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் வந்து புகழ் பாடியும், கம்பன் புகழ் பருகியும் பெருமை செய்கின்றனர்.

அமரர் சா. கணேசன் அவர்கள் காரைக்குடியில் 46 ஆண்டுகளுக்கு முன்பு எந்த நல்ல நோக்கங்களோடு கம்பன் கழகத்தைத் தோற்றுவித்தார்களோ, அவை இப்பொழுது கனிந்து முழுப்பயனை அளித்து வருகின்றது என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்கள் பலர் தம்முள் இகல் இலராகக் குழுமியிருந்து தமிழிச்சுவையையும், அதிலும் சிறப்பாகக் கம்பனை ஊன்கலந்து உயிர்கலந்து தாம் கலந்து-தேன்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற சுவைநலத்தை உம்பர் உறைவார் பதி இன்பமும் இச்சுவைக்கு அடுத்த சுவைதான் என்றுபோற்றும் அளவிற்குப் பருகி வருகின்றார்கள்.

தமிழகமெங்கும், கடல்கடந்தும் தோன்றி நடந்து வருகின்ற கம்பன் கழகங்களின் எண்ணிக்கை 49. கம்பன் அடிப்பொடியவர்கள் தொடக்கத்தில் இவ்வளவு கிளைக் கழகங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் காரைக்குடியில் கால்கோள் செய்திருக்க முடியாது. அப்பொழுதைக்கு அந்த எண்ணம் அவரது உள்ளத்தில் எழுந்திருக்கவும் இயலாது. ஆனால், அவர் காரைக்குடியில் கம்பன் விழாவை நடத்தி வந்த பாங்கையும், புலவர் பெரு மக்களின் உயர்தரமான பேச்சையும் கண்டவர்களும், கேட்டவர்களும் பேரார்வத்தால் உந்தப்பட்டுத் தங்கள் பகுதியிலும் இது போன்ற கம்பன் கழகத்தை ஏற்படுத்திக் கம்பன் பணி செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணங்களின் பிரதிபலிப்பே தமிழ் மண்ணெங்கிலும் 49 கழகங்களின் தோற்றமாகும். கம்பன் அடிப்பொடியவர்களின் மாசற்ற உள்ளத்து உவகையும் இவற்றால் ஆல்போல் தழைத்து அருகதுபோல் வேரூன்றியுள்ளதன்றோ!

ஆங்காங்கு கம்பன் கழகங்கள் தோன்றி வருகின்ற நிலையைக் கண்ட போது அவர்கள் மாதம் ஒரு மாவட்டத்தில் கம்பனுக்கு விழா நடைபெறும் வகையில் அமைய வேண்டும் என்று கருதினர்.

ஆனால், வளர்ந்துள்ள கழகங்களோ 49 என்றால் ஒவ்வொரு மாதத்திலும் பல இடங்களிலும் கம்பனுக்கு விழா எடுத்து மகிழும் அளவிற்கு அவர் இட்ட விதை வளர்ந்து விரிந்து பல்லாயிரம் விழுதுகளைக் கொண்ட பேரால விருட்சமாக நின்று இலக்கியம், பக்தி, சமயம், பண்பாடு, மொழிப்பற்று என்ற பல்வேறு கிளைகளுடன் கப்பும் கவருமாக நிற்பதை உணரும்பொழுது உள்ளம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

இதற்கு மேலாகத் தமிழக அரசும்-கவிச்சக்கரவர்த்தி கம்பன் அவதரித்த புண்ணிய ஸ்தலமாகிய தேரெழுந்தூரில் பெரும் பொருட்செலவில் நினைவாலயம் அமைத்து விழாக் கொண்டாடுகின்றது. கம்பன் திருநாள் ஓர் அரசு விழாவாகக் பொண்டாடும் அளவிற்குக் கம்பன் புகழ் பரவியுள்ளது என்ருல் அது கம்பன் அடிப்பொடியவர்கன் தனி மனித சாதனை என்பது எள்ளளவும் மிகையாகாது.

இது மட்டும் அல்ல. பல கழகங்கள் நூலாராய்ச்சிகள், வெளியீடுகள், பேச்சாளர்களைத் தயாராக்குதல்- மாணவ சமுதாயம் கம்பன் கவிதைகளை மனனம் செய்தல்-இசைப் போட்டிகள் நடாத்திப் பரிசளித்துத் தமிழ் ஆர்வத்தையும், கம்பனிடத்து இளைஞர் உலகில் ஒப்பற்ற பக்தியையும் பரப்பி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க தொன்ருகும். இப்பணியை நாம் தொடர்ந்து செய்வதுதான் கம்பன் அடிப்பொடியவர்களுக்குத் தமிழினம் செய்யும் ஒப்பற்ற கைம்மாருகும்.


இத்தகு நல்ல நோக்கங்களோடு காரைக்குடியில் நடைபெற்று வரும் கழகத்தின் சார்பில் 47 வது ஆண்டு கம்பன் திருநாள் வெளியீடாக இந்த மலர் நறுமணத்துடள் உங்கள் கரங்களை அலங்கரிக்கின்றது.

இம்மலர் அனைத்து வகையிலும் அழகுடன் வெளிவருவதற்கு விளம்பரங்கள் அளித்தும், கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் வழங்கியும் உதவிய அனைத்துப் பேருக்கும் பணிவார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் செலுத்திக்கொள்கின்ரேம்.

இம்மலரை மிக்க சிரத்தையுடனும் உரிய காலத்தில் அச்சிட்டு உதவிய காரைக்குடி விஜயலெட்சுமி அச்சகத்தார்க்கு எங்கள் உளமார்ந்த நன்றிகள்.

கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி-623 002
2...4...1985

அன்பும் பணிவுமுள்ள,
ஜி. கே. சுந்தரம்,
தலைவர் கம்பன் கழகம்



''நின்னாவார் பிறரன்றி நீயே ஆனாய்;
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்.''

"Who can say more than this rich praise that
you alone are you ?"

त्वमेव माता च पिता त्वमेव,
त्वमेव बन्धुश्च सखा त्वमेव,
त्वमेव विद्या द्रविणं त्वमेव,
त्वमेव सर्व मम देव देव ॥

''நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் இதுஅல்லால்
என்னை அடியோம் செயற்பால ?''

கனவை நனவாக்குவோம்.....

அன்னையாக, அத்தனாக, அருளும் நல் ஆசானாக, தன்னை ஆண்டுகொண்ட பெரும் தெய்வமாகவே கவிச் சக்ரவர்த்தி கம்பன் பாதங்களை என்றும் தன் உச்சியில் வைத்து, மனங்களிக்க, நா இனிக்க, வாய் மணக்க கம்பன் புகழைப் பாடிப் புகழ்ந்து, பரவிப் போற்றி, கன்னித் தமிழை வளர்ப்பதையே தம் ஜீவிய வேள்வியாய் நடத்தியவர்கள் அமரர் கம்பன் அடிப்பொடி அவர்கள்.

அது கம்பன் அடிப்பொடியின் கலை. ஆனால் கணேசனையே அடியொற்றி வந்த எங்கள் நிலை?

அலகிலா விளையாட்டுடைய அவன் திருவருள்,
நம்பிரான் கம்பன் நல்லாசி,
உங்கள் எல்லோருடைய நல்லாதரவு - இந்த மூன்றுமே

எங்கள் பலம்; பற்றுக் கோடு. இந்த மூன்றின் துணையாலேயே கம்பன் அடிப்பொடி அவர்கள் வழியில் கடந்த இரண்டாண்டுகளாய் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணமே இம்மியும் பிசகாது கம்பன் திருநாளை நடத்தி வர முடிந்தது.

இருந்தாலும் எங்களுக்கு ஒரு மனக்குறை. சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய நேரத்தில் கொட்டிவிட வேண்டுமல்லவா? கம்பன் திருநாள் மட்டும் தானா அவர்கள் வாழ்நாள் நோக்கம்? இதோ, இன்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இம்மணி மண்டபக் கால் கோள் விழாவில் அவர்கள் உரையாற்றியதைக் கேளுங்கள்:

''இந்த மணி மண்டபம் நாப்பண் நனி விளங்க, இதன் தெற்கில் உலகத் தவிசில் ஓங்கியிருந்தருளும் கன்னித் தமிழ்த் தாயின் திருக்கோயில் திகழவும், வடக்கில் பன்னரும் பெரும் புகழ்ப் பழந்தமிழ்க் கலைகள் பயன் பிலிற்றும் கூடங்கள் மிளிரவும், நாற்புரமும் தமிழ் மணம் கமழவும் வேண்டும் என்பது பெரு நோக்கம்.''

இத்தூய பெரு நோக்கத்தின் முதற் கட்டமான மணி மண்டபமே பூர்த்தியாகாத நிலையில் உள்ளது. அடுத்த கட்டமான தமிழ்த் தாய் திருக்கோயில் அரசின் பெரும் உதவியோடு தொடங்கப் பெற்றும் பூர்த்தியடையாது உள்ளது. இதற்குக் கால மாறு பாடும், அதனால் விளைந்த பொருளாதார, விலை உயர்வுமே காரணம்.

''என்ன இவள் காலம்'' என யாரும் இன்னும் கணிக்க ஒண்ணா அன்னைத் தமிழ்க் கோயில் திருப்பணி இப்படி நிற்கலாமா? கம்பனடியார்கள், கணேசன்

அன்பர்கள், கம்பன் கழகங்கள், கொடைஞர்கள், அறவோர்கள், ஆளும் அரசினர் இவர்களை எல்லாம் சிரந் தாழ்த்தி, கரம் கூப்பி, நிலந் தோய்ந்து வேண்டிக் கொள்ளுகிறோம் — கம்பன் அடிப்பொடியின் கனவு நனவாகச் செய்யுங்கள்; கன்னித் தமிழ்த்தாய் கோயிலை எடுத்த பெருமையைப் பெற்று உய்ந்து மகிழுங்கள்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் உங்கள் திருச்செவியில் சாற்ற விழைகிறோம். பொன்னும் பொருளும்தான் தர வேண்டும்; அது ஒரு சில அறவோர், கொடைஞர், செல்வர் காரியம் என்று ஏனையோர் ஒதிங்கியிருக்க வேண்டாம். உங்களால் முடிந்தது ஒரு ரூபாயானாலும் அன்னைத் தமிழுக்குக் காணிக்கை செலுத்துங்கள். தொகை பெரிதல்ல; தொண்டுள்ளமே பெரிதென மதிக்கிறோம். இது தெய்வத்திருப்பணி. பாமரர்களே பகவான்; மக்களே மகேசர்; ஆகவே எல்லோரும் பங்கேற்க வேண்டும். அதைப் பொன்னாகவோ, பொருளாகவோ மட்டுமல்ல--இந்த நூற்றாண்டின் இணையற்ற தேசீய மகாகவி சொன்னானே, அப்படி--உங்கள் உழைப்பாகவும் நல்குங்கள்.

உங்கட்குத் தெரிந்தவர்களையும் உதவச் செய்யுங்கள். அரசியலாளர்கள், அமைச்சர் களிடமும், அரசிடமும் எடுத்துச் சொல்லுங்கள். முன்னை மொழி யாவுக்கும் மூத்த தமிழன்னையை, திருக்கோயிலில் அருளாட்சி செய்ய எழுந்தருளச் செய்யுங்கள்.

தண்டமிழ்ப் பணிக்கு தன்னேரில்லாது வாரி வழங்கும் தமிழக அரசு தொடங்கிய இப்பணி, இப்போது இப்படி நிற்கலாமா?

ஊர் கூடி இழுத்த தேர் போல, அரசின் உதவியுடன் நாமும் நம்மாலானதை வழங்கி, தேர் நிலைகொள்ளச் செய்ய வேண்டும்! தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கட்கு ஆண்டவன் அனைத்து நலன்களையும் அருள அவன் அருளைப் பிரார்த்திக் கின்றோம். சங்கை முழங்கி விட்டோம்; இனி வேறென் செய்ய வல்லோம்? செயற் களத்தில் சந்திக்க கம்பன் அருள்வானாகுக!

உங்கள்,
அன்பும் பணிவுமுள்ள,
மு. மெ. முத்துராமன்
பழ. பழனியப்பன்
செயலாளர்கள்.

கம்பன் கழகம்
கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி,
2 — 4 — 85.

கம்பன் கழகத்தின் நடப்பு ஆண்டு உறுப்பினர்கள்;

தலைவர் :

திரு. ஜி. கே. சுந்தரம்.

உபதலைவர் :

திரு. க. கு. கோதண்டராமன்.

செயலாளர்கள் :

திருவாளர்

மு. மெ. முத்துராமன், பழ. பழநியப்பன்

உதவிச் செயலாளர் :

திரு. ச. கம்பராமன்

பொருளாளர் :

திரு. அள. திருநாவுக்கரசு.

உறுப்பினர்கள் :

திருவாளர்கள்

1. மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி
2. சா. நா. அ. சொ. அ. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி.
3. என். ஏ. மாரிமுத்து பிள்ளை, காரைக்குடி
4. ராம. கண்ணப்பன், நாட்டரசன் கோட்டை
5. மு. சிதம்பரம், காரைக்குடி
6. எம். எஸ். சுந்தரம் பிள்ளை, பாளையங்கோட்டை
7. ந. கோவிந்தசாமி, புதுவை.
8. ஆர். கே. சுப்பிரமணியன், காரைக்குடி
9. பெ. மு. சுப்பையா செட்டியார். ஆத்தங்குடி.
10. பழ. சண்முகம், காரைக்குடி.
11. நா. மெய்யப்பன், காரைக்குடி
12. அரு. நாகப்பன், ஓ. சிறுவயல்
13. அள. சுப்பையா, காரைக்குடி.
14. அள.வீரப்பன், காரைக்குடி.
15. ராம. தெ. முருகப்பன், காரைக்குடி
16. ப. மு. சித. பழநியப்பன், காரைக்குடி
17. எஸ். ஏகப்பன், நாட்டரசன்கோட்டை
18. ராம. சொக்கலிங்கம், காரைக்குடி
19. ப. சு. ராம. அண்ணாமலை செட்டியார் காரைக்குடி.
20. அரு. ராம. முத்துராமன், காரைக்குடி
21. ராம. மீனாட்சிசுந்தரம், காரைக்குடி
22. சுப. சித. சுப்பிரமணியன், காரைக்குடி
23. எஸ். தனகோடி, காரைக்குடி
24. ஆ. ம. ஸ்ரீதரன், இரெகுநாதபுரம்.
25. சா. நா. நாராயணன், காரைக்குடி.
26. பழ. முத்தையா, காரைக்குடி.
27. வெ.பழநியப்பன், காரைக்குடி.
28. வீர. முருகப்பன். காரைக்குடி.
29. எஸ். முனுசாமி, காரைக்குடி.
30. அரு. லெட்சுமணன், காரைக்குடி.
31. நா. பழனியப்பன், காரைக்குடி.
32. லெ. கணேசன், காரைக்குடி.
33. கலைமகள் ராமனாதன், கோவை.
34. மெ. காந்தி, காரைக்குடி.
35. சரசுவதி இராமநாதன், பள்ளத்தூர்.
36. அ. கிருஷ்ணசாமி,கோவை
37. வை. கண்ணுச்சாமி, தஞ்சை.
38. சித. ஆதப்பன், வடலூர்
39. பி. முக்கையா ஆசாரி, காரைக்குடி.

கம்பன் கழகங்கள் - முகவரியுடன்

1. கம்பன் கழகம்,
கம்பன் மணி மண்டபம்
காரைக்குடி-623 002
தொலைபேசி: 2600

2. கம்பன் கழகம்,
கம்பன் அருட்கோயில்,
நாட்டரசன்கோட்டை
623 556.

3. கம்பன் கழகம்.
கீழ வீதி,
தேரழுந்தூர்-609 808
மாயூரம் வழி

4. கம்பன் கழகம்,
சீராம விண்ணகரம்,
கள்ளிப்பட்டி-638 505
தொலைபேசி: 44 (கோபி)

5. கம்பன் கழகம்,
நாமக்கல்-637 001.
சேலம் மாவட்டம்.

6. கம்பன் கழகம்,
சீதா கல்யாண மண்டபம்,
கோபிச்செட்டிப்பாளையம்-
638 452.
தொலைபேசி எண்: 84

7. கம்பன் கழகம்,
116, முத்துமாரியம்மன் கோவில் தெரு,
புதுச்சேரி-605 001.
தொலைபேசி: 509

8. கம்பன் கழகம்,
10, பெரிய அக்ரகாரம்,
ராசிபுரம்-637 408.
சேலம் மாவட்டம்.

9. கம்பன் கழகம்,
மணி பீடர் பள்ளி,
கோயம்புத்தூர்-641 037
தொலைபேசி: 35851

10. கம்பன் கழகம்,
4-பி, சாலை ரோடு,
சேலம்-636 001.
தொலைபேசி: 3501.

11. கம்பன் கழகம்,
கற்பகச் சோலை,
1.வெள்ளையன் செட்டியார் சாலை,
கோட்டூர்புரம்,
சென்னை 600 085
தொலைபேசி: 411110.

12. கம்பன் கழகம்,
சித்ரா ஜவுளி ஸ்டோர்ஸ்,
புதுக்கோட்டை-622 001.
தொலைபேசி: 560.

13. நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,
கம்பராமாயண மண்டபம்,
1, பெருமாள் தெற்கு மாட வீதி
பாளையங்கோட்டை-627 002.

14. மலேசியா கம்பன் கழகம்,
64, Jalan Hang Jebot,
Malacca,
(Malaysia)
Phone: 23206

15. கம்பன் கழகம்,
120, காந்தி சாலை
திருவாரூர்-610 108.

16. கம்பன் கழகம்,
அன்பு நிலையம்,
பெரிய தெரு,
பட்டுக்கோட்டை-614 601
தொலைபேசி: 102.

17. கம்பன் கழகம்,
62, காமராஜ் சாலை
திருப்பத்தூர்-635 601.
வடஆர்காடு மாவட்டம்,
தொலைபேசி: 29026.

18. கம்பன் கழகம்,
1, மாணிக்கம் பிள்ளை தெரு
சிவகெங்கை-623 560.

19. கம்பன் கழகம்,
2/370 அய்யாத்துரை தெரு
பரமக்குடி-623 707.

20. கம்பன் கழகம்,
13, இ.பி. காலனி,
காந்தி நகர்,
வேலூர்-632 006.
வட ஆர்காடு மாவட்டம்.

21. கம்பன் கழகம்,
8, சிங்கார முதலி தெரு,
நல்லியக்கோடன் நகர்,
திண்டிவனம்-604 002.

22. கம்பன் கழகம்,
22, ஞானதிக்கம் பிள்ளை தெரு
கல்லுக்குழி,
திருச்சி-620 020.

23. கம்பன் கழகம்,
பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி கட்டிடம்
காஞ்சிபுரம்-631 501.
தொலைபேசி : 2487.

24. கம்பன் கழகம்,
தியாசாபிகல் சொஸைட்டி,
தஞ்சாவூர்-613 001.

25. கம்பன் கழகம்,
98, அறிஞர் அண்ணா நகர்,
மதுரை-625 020.
தொலைபேசி : 32872.

26. கம்பன் கழகம்,
அவிநாசி-638 654.

27. கம்பன் கழகம்,
C/o. நியு சீதாராம விலாஸ்
கடை வீதி,
கவுந்தப்பாடி-638 455
வழி ஈரோடு. R M S.

28. கம்பன் கழகம்,
23, காமராஜர் ரோடு,
பொள்ளாச்சி-642 002.

29. கம்பன் கழகம்,
23, 24, அன்னதான விநாயகர்
கோவில் தெரு,
பேட்டை,
திருநெல்வேலி-627 004.

30. கம்பன் கழகம்,
5, சந்நிதித் தெரு,
தென்திருப்பேரை-623 623
திருநெல்வேலி மாவட்டம்.

31. கம்பன் கழகம்,
வாழியூர்-623 315.
ஒண்ணுபுரம் வழி,
வட ஆர்க்காடு மாவட்டம்.

32. கம்பன் கழகம்,
திண்ணப்பா திரையரங்கம்,
சேலம் சாலை,
கரூர்-639 002.
தொலைபேசி: 747.

33. கம்பன் கழகம்,
4-A, Dr. Sarat Banerjee Rd
Calcutta-700 029

34. கம்பன் கழகம்,
68, இராசாராம் தெரு,
சவகர் நகர்,
திருமங்கலம்-626 706.

35. கம்பன் கழகம்,
6, பேராசிரியர் குடியிருப்பு
கிழக்கு தாம்பரம்-600 059.
தொலைபேசி: 48581.

36. கம்பன் கழகம்,
57, பஜார்-தெரு,
பெரம்பலூர்-621 212.

37. கம்பன் கழகம்
மேலரத வீதி,
நாட்டரசன்கோட்டை
623 556.

38. கம்பன் கழகம்,
10, கர்ண கொல்லை அக்ரஹாரம்,
கும்பகோணம்-612 001.

39. கம்பன் கழகம்,
ஆலடிப்பட்டி நல்லூர்-627 853.
தென்காசி வட்டம்,
நெல்லை மாவட்டம்.

40. கம்பன் கழகம்,
9, வர்த்தகர் தெரு,
ராமேஸ்வரம்-623 526.
தொலைபேசி: 24.

41. கம்பன் கழகம்
''சோலை''
6, தாண்டல் கந்தசாமி தெரு,
ராஜபாளையம்-626 117.

42. கம்பன் கழகம்,
கலா தனிப்பயிற்சிக் கல்லூரி
சேரிங் கிராஸ்,
உதகமண்டலம்-643 001.

43. அகில இலங்கைக் கம்பன் கழகம்,
108, அரசரடி ரோடு,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம். Srilanka

44. கம்பன் கழகம்,
பி, 11, சந்தன மர வீதி,
வட்டம்-9,
நெய்வேலி-607 801.

45. கம்பன் கழகம்,
வையப்ப மலை,
திருச்செங்கோடு வட்டம்,
சேலம் மாவட்டம்-637 410

46. கம்பன் கழகம்,
90, மருத்துவமனைத் தெரு,
திருத்துறைப்பூண்டி - 614713
தஞ்சை மாவட்டம்.

47. கம்பன் கழகம்,
7, சி. எச். பி. காலனி 5வது தெரு.
திருச்செங்கோடு-637 211.
சேலம் மாவட்டம்.

48. கம்பன் கழகம்,
கற்பகம் உணவு விடுதி மேல் மாடி,
பெங்களூர் சாலை.
கிருட்டிணகிரி-635 001

49. கன்னியாகுமரி மாவட்டக் கம்பன் கழகம்,
9, ஏ, ஆசாரிமார் வடக்குத் தெரு
நாகர் கோவில்-629 001

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு!

திரு. பி. சி. சீதாபதி

வாழ்வியல் இலக்கணம் தொகுத்தார் திருவள்ளுவர். அதனையொட்டி வாழ்வியல் இலக்கியம் படைத்தான் கம்பன். முன்னவரின் பாக்களை, பாவரிகளை, பாச்சொற்களை, பாக்கருத்துக்களை எவ்வாறெல்லாம் கம்பன் மறைமுகமாகவும் நேரிடையாகவும் கையாண்டுள்ளான் என்பதைச் சென்ற மலரில் பதம் பார்த்தோம், இத்தலைப்பில். இம் மலரில் வேறுவகையில் சுவைத்துப் பார்ப்போம்.

யுகம் யுகமாக இருந்து வரும் இராமாயணத்தைச் சொல்வடிவிலிருந்து எழுத்து வடிவில் அமைத்தனர் மூவர் வடமொழியில். அவற்றுள் ஒன்றான, வான்மீகியின் நூலை அடிப்படையாகக் கொண்டு கம்பன் தமிழில் யாத்தான் புதியதொரு இராமாவதாரக் காப்பியம்.

அவ்வாறு, வான்மீகியைத் தழுவினாலும் தமிழர் நாகரிகத்திற்கு ஏற்ப, பண்பாட்டிற்கு ஏற்ப, நெறிமுறைகளுக்கு ஏற்பக் கம்பன் பன்னூறு மாற்றங்களைச் செய்துள்ளான். பால காண்டத்திலேயே நூற்றுக்கும் அதிகமான மாற்றங்கள் செய்துள்ளான் என்பதை ''வான்மீகி கம்பன் மாற்றங்கள் - பாலகாண்டம்'' என்னும் தலைப்பு நூலுள் அலசியுள்ளேன். (கோவை கம்பன் கழகம் 1984ல் வெளியிட்ட நூல்). இங்கு, அயோத்தியா காண்டத்தின் ஒரு சோற்றினைப் பதம் பார்ப்போம்.

வான்மீகி : ஸர்கம் 72 - கம்பன் பாடல் : 348 / 61-62.

(சென்னை கம்பன் கழக இராமாயணப் பதிப்பு எண்.)

சீதையொடும் இலக்குவனொடும் இராமன் காட்டிற்குச் சென்றுவிட்டான் என்று பரதனிடம் தாய் கைகேயி கூறினாள்.

உடனே, வான்மீகியின் பரதன், 'இராமனைக் கானகத்திற்கு அனுப்பக் காரணம் என்ன ? ஏதாவது குற்றம் செய்தாரா ? எந்தப் பிராம்மணருடைய தனத்தையாவது இராமன் அபகரித்தாரா? குற்றமில்லாத எந்தத் தரித்திரனையாவது ஹிம்சை செய்தாரா? பரஸ்த்ரீகளைக் கைப்பற்றினாரா ? வேதங்களை அறிந்த பிராம்மணரைக் கொன்றவனைப் போல், இராமனைத் தண்டகாரண்யத்திற்கு ஏன் துரத்தி விட்டார்கள்?' என்று கைகேயியைக் கேட்கின்றான். கைகேயி மேற்குறிப்பிட்ட குற்றங்கள் ஒவ்வொன்றையும் திரும்பச் சொல்லி 'இல்லை-இல்லை-இல்லை' என்று விடையிறுக்கின்றாள்.

கம்பனின் பரதனோ, 'இராமன் வனம் போனது தீங்கு இழைத்ததனாலோ? தெய்வம் சீறியோ? ஓங்கிய விதியினாலோ? யாதினால்?' என்று கேட்கின்றான். ஆனால், (தாயின்

விடை வரும் முன்பே) உடனே 'இராமன் அப்படி ஏதாவது தீங்கு செய்திருந்தாலும், அது இப்பூதலத்தில் உள்ளவர்க்கு எல்லாம் நன்மை பயக்கக் கூடிய தாயன்பின் செயலாகத் தானே இருக்கும்' என்று தானே பதில் கூறிக்கொண்டு, 'அவன் சென்றது தந்தை இறப்பதற்கு முன்பா, அல்லது பின்பா?' என்று கைகேயியினிடம் கேட்கின்ருன்.

உடன் பிறப்புக்களுள் இருந்த ஒற்றுமையையும், இராமன் வீணுன தவறு செய்யவே மாட்டான் என்ற பரதனின் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டும் உயரிய சகோதரத்துவ மனப்பாங்கை வலியுறுத்தும் இம்மாற்றத்தைக் கம்பன் செய்திருப்பது போற்றத் தகுந்ததன்றே !

'தெய்வம் சினந்தோ, விதியினுலோ?' என்ற கேள்விகளைக் கேட்ட கம்பனின் பரதன் இராமன்பால் இருந்த பெருமதிப்புப் பற்றின் காரணமாக அவற்றை மறந்தே விட்டான் என்ருலும் கைகேயி, 'ஒரு தெய்வத்தாலும் அன்று' என்று சொன்னுளேயன்றி, 'விதி'யைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை! ஆனுல், குருக்களை இகழ்தலின் அன்று; கூறிய செருக்கினுல் அன்று' என்றும் தன் பதிலில் சேர்த்துக் கூறுகின்ருள், பரதனுடைய வினுக்களில் இவையில்லையென்ருலும். எனவே, கம்பன் பாக்களில் மாற்றங்கள் இருப்பினும் வான்மீகியின் பரதனுடைய கேள்விகளுக்கும் விடைகள் புகுந்துள்ளன!

வான்மீகி : ஸர். 72 கம்பன் பாடல் : 348/63&64

வான்மீகியின் கைகேயி, பரதன் கேட்ட கேள்விகளுக்கு இராமன்மேல் குற்றம் இல்லை, இல்லையென்று சொல்லி விட்டுத் தொடர்ச்சியாகத் தயரதனிடம் தான் கேட்ட வரங்கள் பற்றியும், அதனில் ஒன்றின்படி இராமன் முதலியோர் கானகம் சென்றிட, அவனைப் பிரிந்த ஏக்கத்தால் தயரதன் இறந்தான் என்றும் தானே கூறி விடுகின்ருள்.

கம்பனின் கைகேயி பரதன் கேட்ட கேள்விக்கு நேர்விடையாக, 'அரசன் இருக்கும் போதே இராமன் கானகம் போயினுன்' என்று சொல்கின்ருள். இதைக் கேட்டபின், பரதன் மறுபடியும் அதற்குக் காரணம் கேட்கின்ருன். அதன்பிறகு கைகேயி தான் கேட்ட வரங்கள் பற்றியும் அதனுல் இராமனின் பிரிவாற்ருமை தாங்காது தயரதன் உயிர் துறந்தான் என்றும் கூறுகின்ருள்.

பரதனுக்கு இருக்கும் ஆர்வ வேகத்தினை இம்மாற்றம் சற்றே தடை செய்கின்றது என்ருலும், படிப்படியாகப் பரதனிடம் நடந்தவற்றைப் பகர்ந்தால் தன் பெருமை பரதனுக்குப் புரியும் என்று மூடத்தனமாக அவள் நினைந்திருந்தாள் என்பதை இம்மாற்றம் நிலைநாட்டுகின்றது.

வான்மீகி : ஸர். 72 கம்பன் பாடல் : இல்லை.

வான்மீகியின் கைகேயி தயரதன் இறந்ததையும் இராமன் முதலானுேர் கானகம் சென்றதையும் கூறி விட்டுப் பரதனிடம், 'நான் உனக்காகவே இவையாவையும் செய்தே னல்லவா? துக்கப்படாதே; சோகத்தை விடு; தைரியமாக இரு...............'என்றெல்லாம் சொல்கின்ருள்.

கம்பனின் கைகேயி அவ்வாறெல்லாம் கூறுவதில்லை.

தான் எவ்வளவுதான் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதாக ஒரு பெண்

நினைந்து கொண்டிருந்தாலும் தன் கணவனின் இழப்பிற்காகத் தானே வருந்தியிருத்தலே இயற்கை; இல்லையென்றாலும் ஊரார் காணவருந்தி இருப்பவள்போலே பாவனையிலாவது இருப்பாள். இதனையும் விடுத்துத் திடீரென இந்த அவலச் செய்திகளைக் கேட்டுத் திடுக்கிட்டு நிற்கும் மகனிடம், 'நீ வருந்தாதே' என்றெல்லாம் சொல்வது இயற்கைக்கு, மனோதத்துவத்திற்கு, உலகியல்நடை முறைக்கு மாறானது. ஆகவே, கம்பன் இக்கருத்துள்ள பேச்சினை விட்டுள்ளான்.

வான்மீகி: ஸர். 74: கம்பன் பாடல்: இல்லை.

கைகேயியைத்திட்டும் வான்மீகியின் பரதன், தன் பாட்டியின் செயற் குற்றத்தையும் குத்திக் காட்டி, 'உன் தாய் செய்த அக்கிரமத்திற்காக என் பாட்டனார் அவளை இராஜ்யத்தை விட்டுத் துரத்தினதுபோல் நீயும் இந்த இராஜ்யத்தை விட்டு ஓடிப்போ' என்கின்றான்.

கம்பனின் பரதன் இந்த விதமான கருத்து ஒன்றையும் வெளிப்படுத்தவில்லை

வான்மீகி, கம்பன் இருவர் படைப்பிலும் பரதன் தன் தாயைப் பலபடத் திட்டுகின்றான் என்பது உண்மை. ஆனால், அவளுடைய வம்சமுன்னோரைச் சுட்டிக்காட்டி வான்மீகியின் பரதன் தான் ஏசுகின்றான். அதனைத்தானும் கையாண்டால், கைகேயி தன் வம்ச பரம்பரைப் பண்பால் குற்றம் செய்துவிட்டாள் என்று தான் கொள்ளத் தோன்றுமே யன்றி, தூமொழி மடமானாகிய கைகேயி,

''அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க, நல் அருள் துறந்தனள் (கம். 254/86)''

என்ற மறை பொருள் உண்மை தோன்றாதாகிவிடும் என்று நினைந்து கம்பன் அக்குறிப்பிட்ட குறையைச்சுட்டிக்காட்டவில்லை!

பதம் பார்த்தது போதுமன்றோ? பானைச்சோறு விரைவில் தயாராகிவிடும்! அப்பொழுது இத்தகைய மாற்றங்கள் நூறினுக்கும் மேல் சுவைப்போம்!

★★★

கம்பர் எந்த ஜாதி?

டி. கே. சி.

உலகத்தில் தலைச்சிறந்த ஜாதியைச் சேர்ந்தவர் கம்பர். அதாவது கவிச் சக்ரவர்த்தி ஜாதி. வால்மீகி, காளிதாஸர், டாகூர், ஷேக்ஸ்பியர், ஹோமர் இவர்களுடைய ஜாதி தான் கம்பன் ஜாதி. இதற்கு மேலான ஜாதி இருக்க முடியுமா? கம்ப ராமாயணத்தில் அருமையான பாடல்கள் ஆயிரக்கணக்காக அல்லவா இருக்கின்றன. அவைகள் தமிழ் மக்கள் பூமியில் தோன்றிய ஆதிகாலத்திலிருந்தே அவர்கள் மனத்தில் எழுந்த உணர்ச்சித் தத்துவங்கள் எல்லாமே நிறைந்து பரிமளிக்கிற பாடல்கள். ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயர் ஏகோபித்து அனுபவிக்கிறது போல நாமும் ஒன்றுபட்டுக் கம்பர் பாடல்களைத் தமிழ் வழங்கும் நாடு எங்கும் தீவகம் எங்குமே பாடி அனுபவிப்போமானால் தமிழுலகம் வானுலகமாக மாறாதா?

உலகில் ஒரு கவி

அமரர் கம்பன் அடிப்பொடி

இலக்கியச் சோலையைப் பெற்றிருப்பதில் தமிழ் மொழி எம்மொழிக்கும் குறைந்ததில்லை. இலக்கியத்தை ஆன்ம ஈடுபாட்டுடன் ரசித்து, ருசித்து துய்த்து மகிழ்வதிலும் தமிழர்கள் ஒப்பற்றவர்கள். தாலாட்டு முதல் ஒப்பாரி வரை அனைத்தையும் கவிதையாக - இலக்கியமாக ஆக்கிக் கொண்டவர்கள் அல்லவோ தமிழர்கள்!

தமிழ் இலக்கியச் சோலையில் அறம் அரும்பும்; பொருள் மலரும்; இன்பம் மணக்கும். நீதி, தத்துவம், சமயம், மருத்துவம், சோதிடம். கட்டிடம், சிற்பம், போன்ற எண்ணற்ற இலக்கியச் செடி கொடி மரங்களாகத் திகழும். இலக்கியச் சோலையின் வேலியான இலக்கணம்கூட. முள்ளுக் கம்பியாயில்லாமல் கவிதையாக-கம்பன் கூறுமாப் போலே-மாதவி மலர்க்கொடி வேலியாகவே திகழும். அச்சோலையிலுள்ளே நுழைந்துவிட்டால் பலப் பல கதைகள், வரலாற்று இலக்கியங்கள், சிறுகாப்பியங்கள், பெருங்காப்பியங்கள் என்றெல்லாம் எத்தனை எத்தனையோ தாவரங்கள்.

குளிர் நிழல் தருவன; நறுமனம் பரப்புவன; அணிநிறம் நிரப்புவன; செவிநுகர் கனிகள் சொரிவன என்று இப்படி இருக்கும் அந்தச் சாவா மூவா இலக்கியச்சோலை. ஆம் காலமும் அழிக்க மாட்டாக்கனகக் கற்பகச்சோலை அது! இத்தகைய பெருமை மிக்க இலக்கியச் சோலையின் மத்தியில் முள்ளைப் பெருமரங்கட்கும், பிள்ளை வளர் செடிகட்கும் நடுவே அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து போகக் கனிகளை உதிர்த்துக்கொண்டேயிருக்கும் பரந்து வளர்ந்துசிறந்து நிற்கும் ஒரு மரந்தான் இராமாவதாரம். அப்பயன் மரத்தே இலக்கியச் சோலையின் நாப்பண் நட்டுப் பயிராக்கி வளர்த்து நம்மிடம் விட்டுச் சென்றிருக்கும் பாட்டாளி ஒரு பெருங்கருணைத் தடங்கடல். அவனைத்தான் ஆயிரம் ஆண்டுகளாகக் ''கவிச்சக்கரவர்த்தி'' என்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் பாராட்டி வருகிறது.

அவன் அருளிய இராமாவதாரத்தைக் ''கம்ப ராமாயணம்'' என்றே பெரும்பாலோர் கூறுவர். பெருங்காப்பியத்திற்குக் கம்பன் வகுத்த வழியே இன்றுவரைக் கட்டளையாக அமைந்து நிற்கிறது. 'தண்டியலங்காரம்' போன்ற இலக்கண நூல்களே சான்று.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே இராம காதை தமிழ் மக்களின் மனத்தைக் கவர்ந்து தமிழகத்தில் நிலைபெற்றுவிட்டது. கம்பனுக்கு முன்னே குறைந்தது மூன்று இராமாயணங்களாவது தமிழ் மொழியில் இருந்திருக்க வேண்டும். அவற்றில் ஒருசில செய்யுள்களே, தொகைநூல்களாலும், உரையாசிரியர்களின், மேற்கோள்களாலும் இன்று நமக்குக் கிடைக்கின்றன. தொல்காப்பிய உரையாசிரியர்கள், யாப்பருங்கல உரையாசிரியர், வீர சோழிய உரையாசிரியர், முதலியோர் தமது உரைகளில் ஆசிரியப்பா வெண்பாக்களில் அமைந்த இராமகாதைச் செய்யுள்களை எடுத்துக்காட்டுவர். ஆசிரிய மாலையிலும் சில பாடல்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. ''இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்'' என்று நச்சினார்க்கினியரும், தொன்மை என்னும் வனப்பிற்கு ''பாரதம், இராமாயணம் முதலானவும் கொள்க'' என்று யாப்பருங்கல உரையாசிரியரும் கூறியுள்ளனர்; இவை கம்பனுக்கு முந்திய இராமாயணத்தையே குறிப்பனவாகும்.

அன்றியும் அகநானூற்றில்

''வெல்போர் இராமன் அருமறைக்கவித்த
பல்வீழ் ஆலம் போல''

என்றும்

புறநானூற்றில்

''கடுந்தெறல் இராமனுடன்
புணர் சீதையை
வலித்தகை அரக்கன்
வெளவிய ஞான்றை
நிலம்சேர் மதர் அணி
கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை
இழைப் பொலிந்தாங்கு''

என்றும் உவமையாகக் கூறலின் இராமகாதை நாட்டில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த மைக்குச் சான்ருகும்.

மேலும் சிலப்பதிகாரத்தில் இராமகதை பல இடங்களில் உணர்த்தப்படுகிறது. அக் காலத்திலும், ஆழ்வார்கள் காலத்திலும் இராமன் திருமாலவதாரமாகக் கருதப்பட்டு விட்டமை தெளிவாகப் புலப்படுகிறது

தாதை ஏவலின் மாதுடன் போகி,
காதலி நீங்கக் கடும் துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ? (அஃது)
நெடுமொழியன்றோ!

எனவும்

மூவுலகும் ஈரடியால்
முறைநிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி சேப்ப,
தம்பியொடும் கான் போந்து
'சோ' அரணும் போர்மடியத்
தொல் இலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத
செவி என்ன செவியே!
திருமால் சீர்கேளாத
செவி என்ன செவியே!

எனவும் இளங்கோ கூறுவதால் இராமன் திருமால் அவதாரமென்பதும், இராமகாதை நீண்ட காலமாகவே தமிழகத்தில் நின்று நிலவுவது என்பதும் தெளிவாகப் புலப்படும்.

சங்க காலத்திற்குப் பின்னே, வள்ளுவனுக்குப் பிறகு இளங்கோ காலத்திற்குப் பின்னர், ஆழ்வார்கட்கும் பிற்பட்டுத் தோன்றியவன் கம்பன். இவன் காலம் ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதி

கி.பி. 9-ம் நூற்ருண்டில் அதாவது 871 முதல் 907 வரை சோழ மண்டலத்தை ஆண்ட கோதண்டராமஞன ஆதித்தன் கம்பனிடம் பெரு மதிப்பும், அருநட்பும் கொண்டவன். வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் கம்பனைக் கண்மணியாய்க் கருதிப் பேணிக் காத்தவர். இவை எல்லாம் நூலுட் காணப்பெரும் குறிப்புகளால் புலப்படுகின்றன.

கம்பன் தனது இராமாவதாரத்தை கி.பி. 886, பெப்ருவரி, 23-ஆந் தெய்திக்குச் சரியான விசுவாவசு—பங்குனி 4-ஆந் தெய்தி புதன் கிழமை அஸ்த நட்சத்திரத்தில் வெண்ணெய் நல்லூரில் அரங்கேற்றினுன்.

இளங்கோ சேர-சோழ-பாண்டிய மண்டலங்கள் மூன்றையும் தமிழ் நாடென்னும் ஒரு நாடாக்கும் கதையை ஏற்று, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தை அருளினுர்.

கம்பன் அகில இந்தியாவையும் ஈழம் உள்பட ஒரு நாடாக-பாரத-தேசமாக-ஆக்கும் கதையை ஏற்று, அற்புதக் காப்பியத்தை வடித்தருளினுன்

வள்ளுவன் அறமே அவன் மனத்தைப் பெரிதும் ஈர்த்து நின்றது. மனிதன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதில் வள்ளுவமே சிறந்தது என நம்பியவன் கம்பன். வள்ளுவன் அறத்தை மூர்த்திகளாக்கி அவன் எடுத்த மணிக்கோயிலே இராமாவதாரம் எனலாம்.

இந்த மெய்ம்மையை,

வையம் என்னை இகழவும்,
மாசு எனக்கு
எய்தவும், இஃது இயம்புவது
யாது? எனில்,
பொய் இல் கேள்விப்
புலமையினேர் புகல்
தெய்வ மாக்கவி
மாட்சி தெரிக்கவே!

''சாதாரண மக்கள் என்னைப் பழிக்கவும், என் புலமைக்கு இழுக்குஏற்படவும் இக்காப்பியத்தை நான் ஆக்கக் காரணம் என்ன என்ருல், சிறந்த

கேள்வி ஞானம் உள்ள அறிஞர்களெல்லாம் பாராட்டிப் பேசும் தெய்வப்புலவன்-அதாவது-திருவள்ளுவன் மாண்பினை உலகிற்கு உணர்த்தத்தான்.'' என்று, தெளிவாக வெளிப்படுத்துகிருன்.

இராமன் அறத்தின் மூர்த்தியாகவும், இராவணன் பிறன் மனை கவர்ந்த பாவியாகவும் விளங்குகின்றனர். இராமன் படைபலம், கருவிகள், அரண் முதலிய வாய்ப்புக்கள் உடையவனல்லன். இராவணனே முக்கோடி வாழ்நாள், முயன்று பெற்ற பெரு வரங்கள்; ஒப்பற்ற அரண்; அளவிலாப் படைபலம், பேரறிவு, பெருஞ்செல்வம், உடல் வளம், அறிவுக் கூர்மை எல்லாம் நிரம்பியவன். பிரமனுக்குக் கொள்ளுப்பேரன்; வேதம் வல்லவன்; நிரம்பிய தெய்வ பக்தி உடையவன். சுருக்கமாகச் சொன்னுல் சுவைப் பால்நிரம்பிய பொற் குடம்!எல்லாம் இருந்தும் அறம் மட்டுமில்லை. பிறன்மனை நயந்த பேதமை என்னும் ஒரு சொட்டு விஷம் அத்தனை பாலையும் அழித்துத் தொலைத்துவிட்டது!

''அறம் வெல்லும்-பாபம் தோற்கும்'' என்ற உண்மையை உணர்த்த இராமகாதை நல்ல சிறந்த-ஒரு கட்டுக்கோப்பு என்று கருதியே கம்பன் வான்மீகி வழங்கிய, தமிழகத்தில் காலூன்றிவிட்ட, கதையைத் தன்காப்பியத்திற்கு மூலமாக, வித்தாக எடுத்துக்கொண்டிருக்கிருன்.

அன்றியும் தமிழகத்தில் பிறன் மனைநயத்தலே பெரும் பாபமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. எனவேதான் உச்சபட்சத் தண்டனையான கழுவேற்றல் இக் குற்றவாளிகட்கு அளிக்கப்பட்டும் வந்திருக்கிறது.

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் கம்பன் அருளிய காப்பியத்தின் அருமையும், பெருமையும், பயனும் நன்கு புலப்படும்.

எனவே, கம்பன் காப்பியத்தை மட்டும் அல்ல, இராமகாதையையே மாநில-இனக்கண்கொண்டு பார்க்கலாகாது. இந்த நெறி எல்லாக்காப்பியங்களுக்குமே பொருந்தும்.

இராமன் அறப் பாத்திரம்; இராவணன் மறப் பாத்திரம். இராமன் அறத்தைச் சார்ந்திருந்தான். இராவணன் ஆணவச் செருக்கால் அறத்தை மறந்திருந்தான். அறம்வென்றது; பாபம் எத்துணை ஆற்றலோடு கூடியிருந்தாலும் இறுதியில் தோற்றது. இதுதான் கதைக் கூறு.

அதற்கெல்லாம் மேலாக, காப்பியக்கட்டுக்கோப்பு, கதை ஓட்டம், பாத்திர இயக்கம், கவிதைச்சுவை, பொருளமைதி, ஓசை இன்பமாகிய இழுமை, ஆகியவை ரசனை உள்ளத்தை மகிழ்விக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அன்புள்ளம் அறத்தாற்றில் செல்ல அறிவூட்டும் ஓர் இலக்கியமாத் திகழ்கிறது.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கிச் செம்மையாக வளர்ந்து வரும் அறநெறியுணர்வின்-தமிழ்நாகரிகத்தின்-மனிதப் பண்பாட்டின் சிறந்த ஓவியமாகவே இக் காப்பியத்தைக் கொள்ளவேண்டும்.

கதை எங்குத் தோன்றியது? யார்தந்தது? எம்மொழியில் மலர்ந்தது என்றெல்லாம் பார்த்தால் இலக்கிய நோக்கிற்கோ, அன்றி அற உணர்வுக்கோ ஒவ்வாதது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்''என்ற பண்பாட்டுத் தத்துவத்திற்கும் முரணானது. நல்ல சிற்பி ஒருவன் சிறந்த மூர்த்தியை உருவாக்குவதற்குக் கல்லையோ செம்பையோ தேர்ந்தெடுக்கும்போது அது இத்தாலிக் கல் என்றோ, தூரக்கிழக்கு நாட்டில் கிடைத்த செம்பென்றோ, ஒதுக்க மாட்டான். தான் அடித்து அல்லது வடித்து உருவாக்குவதற்கு ஏற்றதா?காலகாலத்திற்கும் தாக்குப் பிடித்து நிற்குமா? என்றுதான் கணித்துப் பார்ப்பான்.

அப்படித்தான் சிறந்த கவிஞனும் கதைக் கரு எங்குத் தோன்றியது என்பதைப் பற்றிக்கவலைப்படாமல் தன்படைப்பிற்கு ஏற்றதா? கால வெள்ளத்திற்கு ஈடு கொடுத்து நிற்குமா? தன் நாட்டு மக்கள் நல்வாழ்வுக்கு உதவுமா? என்றுதான் பார்த்துத் தேர்ந்துகொள்வான்.

ஆதிகவி என்று அகிலமெலாம் பாராட்டும் வான்மீகி படைத்தளித்த காப்பியக் கதையை முன்னைத் தமிழ்ப்புலவர்களைப் போலவே கம்பனும் போற்றி மகிழ்ந்தவன். அப்பாத்திரங்களை மனமார நேசித்தவன். தன் திறமையைக் கவிதா சன்னதத்தை முழுதும் காட்டத் தக்கதொரு பெருங் கதை என மனங்கொண்டான். காலம், இடம்,

மக்கள், பண்பாடு, மரபுகளுக்கேற்பக் கதையை அமைத்துக்கொண்டான். சில நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் நீக்கினுன்; சில நிகழ்ச்சிகளை யும் பாத்திரங்களையும் சேர்த்தான். வேண்டிய மாற்றங்களை மேற்கொண்டான்.

தான் பயின்ற பல கலையறிவும், வேத உப நிடதக் கருத்துக்களும், அகத்தியம் முதலான இலக்கணங்களும், சங்க காலம் தொடங்கி மலர்ந்துள்ள தமிழ் இலக்கியங்களும் கை கொடுத் துதவத் தமிழ்த் தாய்க்கு மணி முடிபோன்ற ஒப் பற்ற காப்பியத்தை அருளிச் செய்துள்ளான்.

''கல்லாத கலையும் வேதக் கடலுமே இல்லாத உலகத்து எங்கும்'' என்று பாராட்டத் தக்க பேராற்றலும், பேரறிவும், பெரு நம்பிக்கையும் உடையவனுகத் திகழும் கவிச்சக்கரவர்த்தி ''செவிக்குத் தேன்'' என, இராகவன் புகழினைத் திருத்திய கவிக்கு நாயகனுகவும் விளங்குகிறுன்.

இவன் படைத்த அற்புதக் காப்பியம் மேலை நாட்டுத் திறனய்வுக் கருவியால் அளக்கும் போதும் எந்நாட்டுக் காப்பியத்திற்கும் ஈடுகொடுத்து நிற்கும் அருமையை எண்ணித் தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது.

இனி கம்பன் சமைத்த மாமணிக்கோயிலான இராமாவதாரமென்னும் மகோன்னதக் காப்பியத் தின் உள்ளே சென்று பல்வேறு அழகுகளையும் கண்குளிர மனம் களிப்பக் காண்போம்.

கம்பன் ஒரு நல்ல கவிஞன்; மகாகவி; கவிச்சக் கரவர்த்தி. செந்தமிழ்-ஆரியம் இரு மொழிகளி லும் கரைகண்டவன். வேறு சில மொழிகளும் அறிந்திருந்தான் என்று தெரிகிறது. வேதம், உப நிஷதம் முதலாக உள்ள பல சம்ஸ்கிருத நூல்களை யும், அகத்தியம் முதலாக உள்ள தமிழ் நூல்களை யும் ஐயம் திரிபு அறக் கற்றுத் தெளிந்திருக் கிறுன். இசை, பரதம், சிற்பம் முதலிய கலைகளிலும் வல்லவனுக இருந்திருக்கிறுன். சுருக்கமாகச் சொன்னுல் அவன் காலம்வரைத் தோன்றிய பல நூல்களிலும் தோய்ந்து கற்றுத்தேர்ந்திருக் கிறுன்.

இந்த உண்மையெல்லாம் கம்பன் காப்பியத்தில் பரக்க வெளிப்படுகிறது. இத்தகைய பேராற்றலே ஒப்பற்ற காப்பியம் தோன்றத் துணைபுரிந்தது. வான்மீகி அருளிய ஆதி காவியத்தைப் பலமுறை ஆய்ந்திருக்கிறுன். தனக்கு முன் தமிழில் தோன் றிய ராமகாதை நூல்களையும், திவ்வியப் பிரபந்தம் முதலான பாசுரங்களையும் தோய்ந்து படித்திருக் கிறுன். அதன்பிறகே தான் ஆக்கியராமாவதாரத் திற்குச் சட்டகம் வகுத்துக் கொண்டிருக்கிறுன்.

எடுத்த எடுப்பிலேயே உத்தரகாண்டம் பாடு வதில்லை என்று முடிவுசெய்து கொண்டுவிட் டான் என்பதே என் கருத்து. வண்ணுன் பேச் சைக்கேட்டு மாமன்னன் மாசற்ற மனைவியின் தூய்மையை மனங்கொள்ள மறுப்பதை, கம்பனின் அறநிறம்பிய அன்புடை, அறிவுள்ளம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது போலும்!

அப்படித்தான் மாயா ராமப் படலத்தை முற் றிலும் நீக்கியதும், மனத்துவம் உணர்ந்த மகா கவி சீதையின் முன்னே ராமனைக் கொண்டுவந்து நிறுத்துவது என்பது அசம்பாவிதமாகும். ராவ ணன் ஆட்சியில் 'ராம' என்றஒலி இலங்காபுரி யில் முற்றிலும் தடை செய்யப் பெற்றுள்ளது. அதைக் கம்பன் சீதை வாய் மொழியால் நமக்கும் புலப்படச் செய்கிறுன். ''வந்தாராம்'' ''போனு ராம்'' ''செய்தாராம்'' என்றுகூட அரக்கர்கள் பேசமாட்டார்களாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் போலி உருவில்கூட ராமனைச் சீதை முன் கொணர்வது பொருந்தாததன்ருே? எனவேதான் மாயாராமப்படலத்தை ஒதுக்கிவிட்டான் கம்பன்.

இரணியன் வதைப் படலம் ஓர் அற்புதமான படைப்பு. கதைக்குப்புறம்பானதாகத் தோன்றி னும் கதைக்கும்'' அறமே வெல்லும்,'' ''புண்ணி யம் ஒன்றே நிலைக்கும் பொருள்'' என்ற தத்துவத் திற்கும் ஊட்டம் தருகிறது. பொருந்தாத மாயா ராமப் படலத்தை நீக்கிய கம்பன் மிகப் பொருத்த மாக மாயாஜனகப் படலத்தைப் படைத்துக் காப் பியத்தின் தரத்தை உயர்த்தியிருக்கிறுன்.

இப்படிப் பெரிய மாற்றங்கள் மட்டுமின்றி அங் கங்கே எண்ணற்ற சிறுமாற்றங்களும் செய்து காப்பியச் சிறப்பை வளர்த்திருக்கிறுன். பாத்தி ரங்களின் குண இயல்பிலும் மாற்றம் செய்து பாத் திரங்களின் தன்மையையும் தரத்தையும்

உயர்த்தியிருக்கிருன். குறிப்பாகச் சீதையின் பண்பை எவ்வளவோ உயரத்திற்குஏற்றிவைத்து,

" சோகத்தால் ஆய நங்கை
கற்பினல், தொழுதற்கு ஒத்து
மாகத்தார் தேவி மாரும்.
வான்சிறப்பு உற்ருர்; மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள்; மாயன்
ஆயிரம் மெளலி மேலாள் "

என்று பெண்குலமே பெருமையால் ஓங்கச் செய்துவிடுகிருன்.

இறைவணக்கம் செய்தே நூலைத் தொடங்குவது நமது மரபு. கம்பனும் முன்னேயோரைப் பின்பற்றிக் கடவுள் வணக்கம் செய்கிருன். எந்தச் சமயத்தவரும் மறுக்க மாட்டாத முறையிலன்ரே கடவுள் வாழ்த்தைச் செய்கிருன்!

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலை பெறுத்தலும், நீக்கலும்,
நீங்கலா-அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே!

எவ்வுருவும், எப்பெயரும் கூருது, எங்குமாய் யாவுமாய் இலங்கும் ஒரு தனிப்பொருளை, திணை, பால், எண், இடம் ஏதும் சுட்டாது, வாழ்த்தும் அருமைப்பாடே கம்பனின் மேலான மெய்யறிவுக்கு ஓர் எடுத்துக் காட்டன்ரே ?

காப்பியஅங்கத்தில்ஆற்றுப் படலத்தைமுதலாவதாக ஆக்கிய பெருமகன் அப்படலத்தில் நீரை வைத்துக் கொண்டே கடவுள் தத்துவத்தை அருமையாக- அழகாக உணர்த்தி விடுகிருன்.

மலையில் தோன்றி, வழிநெடுக ஓடிக்கடலில் சங்கமமாகிற ஆற்றை நாம் பலகாலும் கண்டுகொண்டுதானிருக்கிரேம். இந்த ஆறு எங்கிருந்து வருகிறது என்ருல், ஓஹோ,இது காவிரி நதியல்லவா? இது சைய மலையிலிருந்து வருகிறது என்று கூறுவோம். இது கங்கையன்ரே? இது இமயமலையில் உற்பத்தியாகிறது என்போம். பூகோள முறைப்படி இவ்விடைகள் முற்றும் சரியே! ஆனல் உண்மை என்ன? எங்கும் பரந்து கிடக்கிறது நீர்; அதைக் கடல் என்போம் நாம்; அதுதான் முதல் அல்லது மூலம்; சூரியன் காய்கிறது; கடல் நீர் ஆவியாக எழும்புகிறது: மேகமாகப் பரவுகிறது: மழையாகப் பொழிகிறது; கால்களாகப் பாய்கிறது; அருவியாகக் குதிக்கிறது; ஆருக ஓடுகிறது இறுதியில் தான் எங்கிருந்து வந்ததோ அங்கு, அந்தக் கடலுக்கே, சென்று கலந்து ஒன்றிவிடுகிறது. இடையில் பெற்ற காவிரி, கங்கை போன்ற பெயர்களும் மறைந்துவிடுகிறது. இந்த உண்மையைக் கவிஞன் எவ்வளவு அருமையாக உணர்த்துகிருன் என்பதைக் காண்போம் இனி;

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லை இல் மறைகளாலும்
இயம்ப அரும் பொருள் ஈது என்ன,
தொல்லையில் ஒன்றே ஆகி
துறைதொறும், பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல், பரந்தது அன்றே!

"கல்லிடை, அதாவது மலையிடத்தே தோன்றி நீளச் சென்று கடலிடத்தே ஒன்றிவிட்ட நீராறு இருக்கிறதே அது வரம்பில்லாத வேதங்களாலும் சொல்ல முடியாத பரம்பொருள்தான் இஃது என்னும்படி ஆதியில் ஒன்றே ஆகி எல்லா இடங்களிலும் விரவிச் சூழ்ந்துள்ள நிலையைப் பார்த்தால் பல பெரிய மதங்களும் கூறும் பரம்பொருளைப்போல அல்லவா பரந்து கிடைக்கிறது " என்று எவ்வளவ எளிதாக அரிய தத்துவப் பொருளையே கூறிவிடுகிருன்! அவனுள் ஊறிக் கிடந்த உபநிஷத ஞானமன்ரே அரிய கவிதையரக மலர்ந்து மணக்கிறதென்று வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிரேம்.

கடவுள் தன்மையை விளக்கும் இடங்கள் பல. அங்கெல்லாம் வேதகால ரிஷியாகவே காட்சி தருவான், கம்பன்.

தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து தன் அகத்திருந்தே உலகங்கள் அனைத்தையும் மலரச் செய்கின்ருனும்; *அவை தன்னுள்ளே நின்று* அப்படித் தன்னுலே தரப்பெற்ற

அவ்வுலகங்கள் ஒவ்வொன்றினுள்ளும், தனித் தனியாய் நிற்கின்ருனும்; *தான் அவற்றைத் தாங்குவான்*, தானே அந்த உலகங்கள் அனைத்தையும் சுமந்து கொண்டிருக்கிருனும்; அவன் யார்? *பின் இலன்* இவனுக்குப் பின்னே யாரும் இல்லாதபடி கடையூழியில் தானுகவே இருப்ப வன்; *முன் இலன்* அப்படியானுல் அவன் பிற் காலத்தில் தோன்றியவனே என்ருல் இவனுக்கு முன்னே தோன்றியவர் எவரும் இல்லையாம்; இவன்தான் ஆதி முதல்வனும்; *ஒருவன்* அவன் தனியனும்; *பேர்கிலன்* அழிவு, மாற்றம், அசைவு கூட இல்லாதவனும்; *தொல்நிலை ஒருவ ரால் துணியற் பாலதோ?* அத்தகைய தனிப் பரம்பொருளின் உண்மையான நிலை இதுதான் என்று எந்த ஒரு ஞானியாலும்கூட வரையறை செய்துவிட முடியுமா? முடியாது என்று வரை யறை செய்து காட்டும் அருமையை அவன் வாக்காகவே கேட்போம்.

'' தன்னுளே உலகங்கள்
எவையும் தந்து, அவை—
தன்னுளே நின்று,
தான் அவற்றைத் தாங்குவான்;
பின் இலன்; முன் இலன்;
ஒருவன்; பேர்கிலன்;
தொல் நிலை ஒருவரால்
துணியற் பாலதோ?

ஒரு நல்ல கவிஞன் முடிந்தவரைத் தான் வெளிப்படாமல், பாத்திரங்களைக் கொண்டே கதையை நடத்திச் செல்ல வேண்டும். அப் பொழுதுதான் கதைருசிக்கும்; பாத்திரங்களின் தனித்துவமும் வெளிப்படும். அது கம்பனுக்குக் கைவந்த கலை. ஆகவேதான் ''கம்பநாடகம்'' என்றும் கம்பன் காப்பியத்தை மேலோர் கூறுவர். அத்தகைய பல நிகழ்ச்சிகளுள் ஒன்றை மட்டும் இப்பொழுது காண்போம்.

இராமன் வனத்துள் இருக்கிருன்; சீதை இராவணனல் தூக்கிச் செல்லப் பெற்று இலங் கையில் சிறையில் இருக்கிருள்; சுக்கிரீவன் வாக்களித்த வண்ணம் குரங்குப் படைகளுடன் வரவில்லை; இலக்குவனைக் கிஷ்கிந்தைக்குத் தூது அனுப்புகிருன், ராமன். இலக்குவன் கிஷ் கிந்தைக்குச் செல்லுகிருன். அங்கே நிகழ்ந்தவை ஒரு அருமையான நாடகமாக அமைகிறது. அதில் ஒரு பகுதி பல நாட்களாய் நடந்து வருவது. அதைக் கம்பன் முன்னே கூறியிருக் கலாம். ஆனுல் சொல்லவில்லை. காரணம் ஒரு பாத்திரத்தின் மூலமாகவே தெரிவிக்க வேண்டும் என்று கருதியிருக்கிருன். தக்க வாய்ப்புக் கிட்டியது. செயல்படுகிருன்.

சீதை உடனிருந்தவரை கீரை, கிழங்கு, காய். கனி முதலியவற்றை ஆய்ந்து, திருத்தி வெகு பக்குவமாக ராமனுக்குப் பரிமாறியது சீதையே. அவன் பிரிவுக்கு அப்புறம் அப்பணியையும் தம்பி இலக்குவனே ஆற்றி வருகிருன். அப் படிப்பட்ட செய்தி இங்குதான் நெடுநாட் கட்குப் பின்னர் புலப்படுத்தப்படுகிறது.

இலக்குவனை நோக்கி, ''தாங்கள் குளித்து முழுகிவிட்டு உணவு, கொள்ள வேண்டும்!'' என்று சுக்கிரீவன் வேண்டுகிருன். அதற்கு இலக்குன் கூறும் விடையில் செய்தி புலப்படு கிறது.

கீரை, கிழங்கு, காய் முதலியவற்றில் இராமன் உண்டு மீந்ததைத்தான் நான் உண் பேன்; வேறு ஏதும் விரும்ப மாட்டேன். அப்படி ஏதும் விரும்பினுல், அது நாய்தின்ற எச்சிற் பண்டமே!

அல்லாமலும் மற்ருெரு காரணமும் உள்ளது. நான் திரும்பிச் சென்று அதன்பின் உணவுப் பண்டங்களைச் சேகரித்துக் கொண்டுவந்து சீவி, நறுக்கிப் பக்குவம் செய்ய வேண்டும். அதுதான் ராமனுக்கு உணவு. எனவே இன்று சிறிதும் காலம் தாழ்த்தப்படாதென்று கூறிப் புறப்படுகிருன்.

''பச்சிலை, கிழங்கு,
காய் பரமன் நுங்கிய
மிச்சிலை நுகர்வது;
வேறுதான் ஒன்று
நச்சிலேன்; நச்சிலேன்
ஆயின் நாயுண்ட
எச்சிலே அஃது;
இதற்கு ஐயம் இல்லையால்!

''அன்றியும் ஒன்று உளது;
ஐய! யான் இனிச்
சென்றனென் கொணர்ந்து
அடை திருத்தினல் அது
நுன்றுணைக் கோமகன்
நுகர்வது; ஆதலான்
இன்று இறை தாழ்த்தலும்
இனிது அன்றும்''

என்றான்

இப்படி அருமையாகக் காப்பியத்தை அமைக்கும் திறமையை எண்ணும்பொழுது, கம்பனின் மேதா விலாசம் நமக்கெல்லாம் புலப்படுகின்றதன்றோ?

கவிச்சக்கரவர்த்தி கம்பன் விருத்தக் கவிச் சிற்பி என்பது உலகறிந்த உண்மை; எனவே தான் பழம் புலவர் ஒருவர்

''விருத்தம் என்னும் ஒண் பாவிற்கு உயர் கம்பன்'' என்று பாராட்டியுள்ளார். கம்பன் அருளிய இராமாவதாரத்தில் பதிணாயிரத்திற்கு மேற்பட்ட கவிகள் காணப்படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கிச் சிறந்த கம்பனன்பர்கள் கூடிப் பாடம் தேர்ந்து, பாடல்கள் தொகுத்துப் பதிப்பித்த மர்ரே ராஜம் பதிப்பில் கொள்ளப்பெற்ற பாடல் தொகை 9,972 ஆகும். அவற்றுள்

இருசீர்க்- குறளடி நான்குள்ள வஞ்சி விருத்தம்	14
முச்சீர்ச்- சிந்தடி நான்குள்ள வஞ்சி விருத்தம்	119
நாற்சீர் அளவடி நான்குள்ள கலி விருத்தம்	4981
ஐஞ்சீர்- நெடிலடி நான்குள்ள கலித் துறை	1697
அறுசீர்க் கழிநெடிலடி நான்குள்ள ஆசிரிய விருத்தம்	2974
எழுசீர்க் கழிநெடிலடி நான்குள்ள ஆசிரிய விருத்தம்	181
எண்சீர்க் கழிநெடிலடி நான்குள்ள ஆசிரிய விருத்தம்	6
ஆக மொத்தம்	9,972

மொத்தம் சீர் அளவால் ஏழு வகையாகக் கொண்டாலும் சந்தம், யாப்பமைதி, அளவியல், முதலான கணிப்பால் நூற்றெட்டு வகையாக விளங்குகின்றன. இவற்றுள் பாதிக்கு மேற்பட்ட கவிகள் அளவியல் சந்த விருத்தமாகும்; அடி தோறும் ஒத்த எண்ணிக்கை எழுத்து அமைவதாகும். ஓரடிக்கு 7 முதல் 22 எழுத்து அமைந்த விருத்தங்கள் அவை. அப்படிச் சற்றேறக்குறைய 5000 விருத்தங்கள். அன்றியும் பல்வேறு சூழ்நிலைகட்கும், மெய்ப்பாடுகட்கும், ஏற்பச் சந்தம் வேறுபடுகிறது. தேவாரம் முதலிய பாசுரப் பாடல்களின்சந்தப் பண்ணிற்கு ஏற்பவும் பல பாடல்கள் அமைந்திருக்கின்றன. அவற்றைக் கருவியால் இசைத்தால் தெய்வப் பாசுரமா? கம்பன் கவியா? என்று இனம் பிரித்துக் காணல் இயலாது. அப்படிப் பலப்பல உள்ளன. அவற்றுள் ஒன்றிரண்டைப் பார்ப்போம்.

சம்பந்தர் பாடியது; எழுசீர்;

தேமா-கூவிளம்; தேமா-கூவிளம்;
தேமா-கூவிளம்; கூவிளம்.

மானி நேர்விழி மாத ராய்வழு
திக்கு மாபெருந் தேவிகேள்!
பானல் வாயொரு பாலன் ஈங்கிவன்
என்று நீபரி வெய்திடேல்;
ஆனை மாமலை ஆதி ஆயஇ
டங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேனலேன்திரு
ஆல வாயரன் நிற்கவே.

இது கொல்லிப்பண்ணில் பாடுவது.

இதேபோல எழுசீர் அளவியல் சந்த விருத்தம்; அடிதோறும் பதினெட்டு எழுத்துக்கள் அமைய யாப்பது. எல்லாவகையிலும் இதனை ஒத்த பாடல்கள் சில கம்பனில் காணப்படுகிறது. ஒன்றைக்காண்போம்;

சேணு லாவிய நாளெ லாமுயிர்
ஒன்று போல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளி னானிடர்
எய்த ஒன்றுமி ரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல்
கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணி னானென ஏகி னான்நளிர்
கங்கு லாகிய நங்கையே!

இங்ஙனமே மற்றொரு வகைப் பாடலையும் ஒப்பு நோக்கி விட்டு மேலே செல்வோம். அதுவும்

சம்பந்தர் அருளிய பாசுரமே. அது தேமாங்கனி -புளி மாங்கனி- புளி மாங்கனி - புளிமாவாக அமைவது; அடிதோறும் நான்கு சீர்கள் பதினேழு எழுத்துக்கள் கொண்டது; அளவடி நான்குள்ள கவிமுடுகு விருத்தம். நட்டபாடைப் பண்ணில் பாடப் பெறுவது.

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவணம் அறுமே!

இதை அப்படியே ஒத்தொளிரும் கம்பன் கவிதையைக் கண்டு மகிழ்வோம்.

என்னடி விழுவானையும்
இகழாளரி விழியா
பொன்னார்கலை அணிவானெதிர்
புகுவானிலை உணரா
தன்னலொரு செயலின்மையை
நினையா உயிர் தளரா
மின்னலயர் வுறும்வானர
வெனவெந்துயர் உறுவான்.

இப்படிப் பண்ணடைவு தாளக் கட்டமைய, எத்தனை எத்தனையோ பாடல்களை ஆக்கியுள்ளான். பிற்காலக் கீர்த்தனை வடிவு எளிதிற்கிடைக்குமாறு எண்ணற்ற பாடல்கள் கிடைக்கின்றன. ஒன்றை மட்டும் பார்ப்போம்.

பல்லவி

செம்மைசேர் நாமம் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்

அனுபல்லவி

இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும்
(செம்மைசேர்)

சரணம்

மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
(செம்மைசேர்)

ஓர் எழுத்தைக் கூட மாற்றாமல் கீர்த்தனை வடிவம் அழகாக அமையும் பாடல்கள் பல வற்றுள் இஃது ஒன்று. இது சங்கராபரண ராகத்தில் மிச்ர சாப்பு தாளத்தில் பாடப்பெற்று வருகிறது.

இஃதன்றிப் பரதநூல்தனையும் பாங்குறப் பயின்ற அருமை பல இடங்களிற் பளிச்சிடக் காண்போம்.

விசுவாமித்திரனோடு இராம- லட்சுமணர்கள் மிதிலையுட் செல்கின்றனர். பல்வேறு காட்சிகளும் இவர்கள் கண்ணிற் படுகின்றன; அவற்றுள் ஒன்று நாட்டிய அரங்கம்; அதையும் கண்டார்கள். இது வழிநடைக் காட்சி பற்றிய ஒரு சாதாரணச் செய்திதான். அதைக் கூறும் முறை அருமையாகவுள்ளது. ''ஆடக அரங்கு கண்டார்'' அதாவது பொன்போன்று ஒளிரும் மேடையைக் கண்டார்களாம். ''ஐயநுண், இடையார் ஆடும் ஆடக அரங்கு''. உண்டோ இல்லையோ என்று சந்தேகப்படும்படி, அவ்வளவு சிறுத்த இடையோர்- இளம்பெண்டிர்- ஆடும் அரங்கு'' என்று பரத நடனம் ஆடத் தக்கார் தோற்றத்தையும், உடல் அமைப்பையும் உணர்த்துகிறான். அப்படிப் பட்ட மெல்லியலார் ஆடும் முறையை எத்துணைக் கச்சிதமாகப் புலப்படுத்துகிறான் தெரியுமா? ''நெய் திரள் நரம்பில்தந்த மழலையின் இயன்ற பாடல்'' அதாவது தேன் ஒழுக்குப் போன்ற நிறமுடைய விரைப்பான நரம்புக் கருவியால் இசைக்கப்பட்டது போன்ற சன்னமான இனிய குரலில் பாடப் பக்கவாத்யங்களாக வீணையும் தண்ணுமை என்னும் மிருதங்கமும் பாடலோடு ஒன்றிப் பிணைந்து நிற்க, மகளிர் ஆடவேண்டும்; எப்படி ஆட வேண்டுமாம்? கைவழி நயனம் செல்ல- முத்திரை பிடித்த கை எப்படி, எங்கெல்லாம் செல்லுகிறதோ அங்கெல்லாம் சென்று கண் லயிக்க வேண்டும்; கண்வழி மனமும் செல்ல-கண் சென்ற வழி மனமும் சென்று முத்திரையின் பொருளில் பதிய வேண்டும். அப்படி ஆடுகிற அரங்கினைக் கண்டார்கள் என்கிறான். பரதக் கலையின் அடிப்படையாய் அமைந்த இலக்கணத்தை எவ்வளவு கணக்காகக் கூறுகிறான்!

யதோ ஹஸ்தஸ் ததோ த்ருஷ்டி:
யதோ த்ருஷ்டிஸ் ததோ மன:''

எனப் பரத சாஸ்திரம் கூறுவதைக் கம்பன்

''கை வழி நயனம் செல்ல,
கண்வழி மனமும் செல்ல''

என்று எவ்வளவு எளிதாக, தெளிவாகப் புலப் படுத்திவிடுகிறுன்?

பரத சாஸ்திரத்தையும் நன்கு பயின்று ,பல அரிய பரத நாட்டியத்தையும் கண்டு மகிழ்ந் திருக்கிறுன் கம்பன். எனவேதான் பல இடங் களில் பரதநூல் பற்றியும் பேசுகிறுன்.

அனுமனிடமிருந்து, இராமனின் மோதிரத் தைப் பெற்று, இராமன் வந்து கொண்டிருக் கிறுன் என்ற செய்தி கேட்ட பரதன் எல்லையில் லாத மகிழ்ச்சியால் ஆடிப் பாடி ஆனந்தத் தாண்டவம் புரியத்தொடங்கி விடுகிறுன். அதைச் சித்திரிக்கிறுன் கவி கம்பன். சொல்லால் தீட் டிய அந்த ஓவியம் பரதக் கலை வல்லவனுக்குத் தான் சாத்தியமாகும். இருபாதத்தையும் ஒரு சேர வைத்து, கால்கள் இருபக்கமும் விரிய, ஒரு டைமன் சதுர வெளியேற்படுமாறு நின்று உந்திக் குதிக்கும் முறையை நாட்டிய மொழியில்,

''குஞ்சித அடிகள்
மண்டிலத்தில் கூட்டுற
அஞ்சனக் குன்றின் நின்று
ஆடும்; பாடுமால்''

என்று சுருக்கமாக — ஆனுல் — தெளிவாக உணர்த்துகிறுன் என்றுல் கம்பனுக்குப் பரதக்கலை யின் அறிவு அப்படிக் கைகொடுத்து உதவுகிறது!

இனி, கம்பனுக்குள்ள உயிர்நூல் அறிவில் ஒரு கூறைப்பார்க்கலாம்! மலர் நிறைந்த கூந்தல் மாதர்கள் பலர் பெண் யானை மீது அமர்ந்து செல் கின்றுர்கள். அம் மலரில் தேனுக்காகப் பலவகை ஈயினம் அவர்கள் தலைக்குமேல் மொய்த்துப் பறந் துகொண்டே செல்கின்றன. அவை அம் மக ளிர்க்கு ஒரு பந்தர் இட்டது போல இருக்கிற தாம். இதுதான் செய்தி. ஆனுல் கம்பன் அந்த ஈக்கூட்டத்தை நான்கு பெயரிட்டு அழைக்கிறுன்.

''தேனெடு மிஞிறும், வண்டும் தும்பியும்'' என்கிறுன். தேன் என்பது பெண் தேனீ; மிஞிறு என்பது ஆண் தேனீ; வண்டு என்பது பெண் வண்டு; தும்பி என்பது ஆண் வண்டு; பால காண்டத்தில் கூறும் இந்த வேறுபாட்டை, கிஷ்கிந்தாகாண்டத்தில் ''பேடையும் ஞிமிறும்'' என்றும், ''துணை வண்டு'' என்றும் பால் பகுத்துக் கூறல் கம்பனுக்கு உயிரியல் அறிவு சிறந்திருந்தமைக்குச் சான்ருகும்.

இப்படியே பூத பௌதிக அறிவும் நிரம்பிய வனுய் விளங்கினுன் கம்பன். அதையும் ஓரளவு காணலாம்.

இக்காலத்தை 'அணுயுகம்' என்பது மரபாகி விட்டது. இன்று விஞ்ஞான வளர்ச்சியால் அணு அறிவு தழைத்துள்ளது. நாற்பது ஆண்டுகட்கு முன் வரை 'அணு' என்பதே கடைசித் தனிமம்; அது பகுக்கப்பட முடியாத ஒன்று என்பதே விஞ் ஞானிகளின் — ஆம், நவீன விஞ்ஞானிகளின்- முடிவு. ''atom'' என்பதற்கு முற்கால ஆங் கில அகராதிகளில் ''last Particle which cannot be cut or devided'' என்றே பொருள் விளக்கம் செய்யப்பட்டிருக்கும். இன்று, ''The atom may be considered as the smallest particle into which matter can be broken up by chemical means'' என்று பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. ஆனுல், கம்பன் காலத்தில் அணுவைப் பற்றிய அறிவு எப்படியிருந்திருக் கிறது என்பதைப் பார்க்கலாம். ''எங்கடா இருக் கிறுன் நீ சொல்லும் இறைவன்?'' என்று உரு மும் இரணியனுக்கு விடை தரும் பிரகலாதன்:

''அணுவினைச் சத கூறிட்ட கோணிலும் உளன்'' என்று உணர்த்துகிறுன். 'கூறு' என்றுல் ஒன்றனுக்கொன்று தரத்திலும், அள விலும், ஒத்தது. அப்படி அணுவினை நூறு பங் காகக் கூறிடுதலைப் பற்றிச் சொல்வதுடன், அப் படிக் கூறிட்ட அணுவின் நூற்றெருபாகத்திற்குக் ''கோண்'' என்று பெயர் என்பதையும் இந்தக் கவிஞன் அறிந்து வைத்திருக்கிறுன். அதை நமக்குக் கற்பிக்கும் நல்லாசானுகவும் விளங்கு கிறுன்.

ஒரு மகாகவி எத்தனை எத்தனை கலைகளை, துறைகளையெல்லாம் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்குக் கம்பன்தான் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, இல்லையா?

சுமார் 1100 ஆண்டுகட்கு முன்னேயே தமிழர் அணு அறிவினை உடையவர்கள் என்ப தற்கு இ:.தே ஒரு நல்ல சான்று என்பதில் தமி ழர்கள் பெருமிதம் கொள்ளலாம்தானே?

தமிழர்களின் இலக்கிய நோக்கம் மிக்க விழுமியது. 'கலை கலைக்காகத்தான்' என்பது தமிழர்க்கு உடன்பாடானதன்று! எல்லாக் கலையும் இறைவனை அடைவிப்பதற்கே என்பது தமிழர் கொள்கை. உலகில் வாழ்வாங்கு வாழவும், இறுதியில் இறைவன் அருளைப் பெற்றுய்யவும், வழிகாட்டுவதே இலக்கியத்தின் பெருநோக்கம் என்பது தமிழர் கொண்டமுடிவு. எனவே,

''அறம்பொருள், இன்பம், வீடு,
அடைதல் நூற் பயனே!''

என, விதி செய்தனர் இலக்கண நூலோர்.

அறநூல்களும், நீதி நூல்களும், செய்வன இன்ன, செய்யத்தகாதன இன்ன என்பனவற்றை வரையறை செய்து கூறும். அது பலருக்குக் கசப்பான மருந்து போன்றிருக்கும். எல்லோரும் அவற்றை மனத்திற் பதித்துக் கொள்வதும் கடினம். ஆனால் அந்தக் கருத்துக்கள் கதையோடு கலந்து வருமேயானால் யாவரும் நெஞ்சில்இருத்தி நெடும் பயன் பெறக்கூடும். சுவைமிக்க கனிச்சாற்றோடு கலந்த கசப்பு மருந்தும் மகிழ்வுடன் பருகப்பட்டு உள்ளே சென்று நற்பயன் தருவது நாமெல்லாம் அறிந்த ஒன்றுதானே?

அதனால்தான் இராமாயணம், பாரதம், பெரிய புராணம் முதலான அரிய நூல்கள் பல நூற்றாண்டுகளாக மக்களிடையில் பெரும் செல்வாக்குப்பெற்று விளங்குகின்றன. கற்றோரிடையில் மட்டுமின்றிக் கல்வியறிவு இல்லாதவர்களிடையிலும் ராம காதை முதலியன பரம்பரையாக வந்த கேள்வியறிவாலே நிலைத்து நின்று பயன் தந்து வருகின்றன.

தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும் கம்பராமாயணம் அறியப்பெற்றுப் போற்றப்பெற்றது. மலேயா, ஜாவா, சுமத்ரா, செயாம் போன்ற வெளிநாடுகளிலும் கம்பராமாயணம் செல்வாக்குப் பெற்றது. சிற்பங்களும், மொழி பெயர்ப்பு வழிநூல்களும் அங்கெல்லாம் காணப்பெறுகின்றன.

கதையின் சிறப்பும், பாத்திரங்களின் உயர்வும், அவற்றுள் உணர்த்தப் பெறும் அறத்தின் மாண்பும், எல்லாவற்றிற்கும் மேலாகக் காப்பியத்தை அமைத்து நடத்திச் செல்லும் உத்தியுமே கம்பனுக்கு இத்துணைப் பெருமை ஏற்படக் காரணங்களாகும்:

இத்தகைய பெருங்காப்பியத்தில் நீதியுள்பட்ட அறம் எப்படிப் புகுந்து வேலைசெய்கிறது என்பதை இனிப்பார்க்கலாம். பழச்சாறு தன்னுள் கசப்பான மருந்தை அடக்கிக் கொண்டிருந்தாலும் மருந்து நமக்குக் கட்புலனாகாது. ஆனால் உள்ளே சென்றதும் மருந்து தன்பணியைச் செய்யத் தொடங்கிவிடும். அது மருந்தின் இயல்பு அல்லது ஆற்றல் இல்லையா?

அதைப் போலத்தான் *காப்பியம் என்னும் கனிச்சாற்றில் அறம் என்னும் மருந்து தன்னை இனம் காட்டாமல் ஒன்றிக்கிடக்கிறது. அது கண்வழியும், காது வழியும் சென்று கருத்தில் சார்ந்து மன, மொழி, மெய்யை ஆட்கொள்ளுகிறது.* இந்த வித்தையை எம்மான் கம்பன் அற்புதமாகச் செய்துள்ளான்.

அப்படி மறைந்துள்ள அறக்கூறுகள் சிலவற்றைக் கண்டு மகிழ்வோம். வள்ளுவப் பேராசான் வகுத்த அறம்

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்
உடுப்பதூஉம் உண்பதூஉம்
இன்றிக்கெடும்''

என்று சட்டம் போல உணர்த்தும்.

இக்கருத்தை, நேரடியாக நமக்கு உணர்த்தாமல் கதையோடு கலந்து பாத்திரத்தின் உரையாடலில் நாடகஅலங்காரத்துடன் வெளிப்படுத்தி நம் நெஞ்சில் நிலை பெறச் செய்துவிடுகிறான் கம்பன். கருத்து மட்டுமின்றிச் சந்த அமைதியும் சேர்ந்து விஷயத்தை எவ்வளவு அழுத்தமாக வெளியிடுகிறது என்பதைப் பார்ப்போம்.

மகாபலிச் சக்கரவர்த்தி வாமனனாக வந்த திருமாலுக்கு மூன்றடி மண் தர இசைந்து தாரைவார்த்துக் கொடுக்கப்போகிறான். அதை முக்காலமும் உணர்ந்த சுக்கிரரச்சாரியார் தடுக்கிறார். அப்பொழுது மாவலி சினந்து கூறுகிறான்:

எடுத்து ஒருவருக்கு ஒருவர்
ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கு அழகிதோ?
தகைவில் வெள்ளி!

என விளித்து,

கொடுப்பது விலக்கு கொடியோய்!
உனது சுற்றம்,
உடுப்பதுவும், உண்பதுவும்
இன்றிவிடு கின்றாய்!

என்று பேச வைப்பதன் மூலம் கொடுப்பதைத் தடுப்பது எத்துணைப் பாபம் என்பதை எவ்வளவு உணர்ச்சியோடு வெளிப்படுத்துகிறான்! மாவலி கதையுடன் இந்த அறமும் ஒன்றி நின்று மக்கள் மனத்தைக் கவ்விப் பிடித்துக்கொண்டு விடுகின்றதல்லவா?

கானகத்தில், ''சீதை, இலக்குவன் இருவருடன் இராமனையும் விட்டுவிட்டு வெறுந் தேரோடு எப்படி அயோத்தி செல்வேன்? தயரதன் முதலியோர்க்கு என்ன பதிலை எப்படி உரைப்பேன்?'' என்று தயங்கி மயங்கும் சுமந்திரனை நோக்கி இராமன் கூறும் அறிவுரை அறவுரையாக மட்டுமின்றி அறங்கடைப் பிடிக்கும் ஆண்மைக்கேயன்றோ வரையரை கூறுகிறது!

நிறப் பெரும் படைக்கலம்
நிறத்தின் நேர்உற
மறப் பயன் விளைத்திடல்
வன்மை அன்றரோ!

ஒளிமிக்க கூரிய பெரிய ஆயுதம் நெஞ்சுக்கு நேர் வரும்பொழுது அஞ்சித் தளராமல் வீரச் செயல் புரிவதுதான் ஆண்மை என்பது சரியல்ல! ஆனால் எது ஆண்மையாளனுக்கு மிகச் சிறந்தது என்று கூறுகிறான் பின் இரண்டு அடிகளில் இராமன்:

இறப்பினும், திருஎலாம்
இழப்ப எய்தினும்,
துறப்பிலர் அறம் எனல்
சூரர் ஆவதே!

உயிரே போயினும், எல்லாச் செல்வங்களையும் பறிகொடுத்தாலும், அறத்தை — தரும நெறியை-கைவிடமாட்டார் என்பதே ''ஆற்றல் உடையோர்'' என்பதற்கு மெய்யான இலக்கணம் என்று கூறுவது எவ்வளவு அழகாகவுள்ளது பார்த்தீர்களா! இனி, மற்றொன்று:—

இராமன்பால் உள்ள மெய்யன்பால், பக்திப் பரவசத்தால், கள்ளமில் உள்ளத்தனான குகன், நல்ல மீனையும், நறுந்தேனையும் காணிக்கையாகக் கொண்டுவருகின்றான். இராமனைச் சுற்றியுள்ள முனிவர்கள் எல்லாம் அவன் கொண்டு வந்த பொருளைக் கண்டு அருவருப்புற்று நோக்க,

குகனின் உள்ளத் தன்பின் மேன்மையையும், தன்பால் உள்ள பரிவு (Sympathy)ப் பெருக்கத்தையும் பார்த்து,

''உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமிர்தினும் சீர்த்த அன்றே!''

என்று கூறிய இராமன், முனிவர்கள் உள்ளக் கிடக்கையையறிந்து அவர்க்கு அறிவுறுத்துவான் போல,

''பரிவினில் தழீய என்னில் பவித்திரம்''

பிறர் படும் துன்ப - துயரங்களில் தங்களையும் ஆட்படுத்தி அவர்கள் மாட்டுக் கொள்ளும் பரிவு இருக்கிறதே அந்தப் பரிவினால் சூழப்பட்ட எந்தப் பொருளும் பவித்திரம்; அதாவது புனிதத்தினும் பல மடங்கு மேம்பட்ட தன்மை என்கிறான்.

''பரிவினில் தழீய என்னில் பவித்திரம்''

என்ற அருமைக் கணிப்பு நமக்குக் கண்ணப்ப நாயனாரையும், அவன் செயல்களையும், அதற்கு மகிழ்ந்த காளத்தியப்பனையும் நினைவு கொள்ளச் செய்கிறது, இல்லையா?

இன்று உலகம் முழுவதும் எதை ஒழித்தாலன்றி மக்கட் சமுதாயம் அமைதியாக வாழமுடியாதென்று கருதுகிறதோ அந்தப் போர் அகன்று உலகம் உய்ய அருமையான வழிவகுக்கும் அறம் கூறுகிறானே அதைப் பார்ப்போம், இனி!

தமிழகத்தில் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் போர் செய்தலும், வெற்றி கொள்ளலும், வாகை சூடிப் பெருமிதத்தோடு நகர் வலம் வருதலுமே பெரும் பெருமை எனக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

''எண்கொண்ட தொண்ணூற்றின்
மேலும் இரு மூன்று
புண்கொண்ட வென்றிப்
புரவலன்''

என்றும்,

அடுத்தடுத்துச்

''சீறும் செருவில் திருமார்பில்
தொண்ணூறும்
ஆறும் படுதழும்பின்
ஆகத்தோன்''

என்றும்,

''தொழும்புடைய ஆகத்துத்
தொண்ணூறும் ஆறும்
தழும்புடைய சண்டப்ர
சண்டன்''

என்றும்,

பலவாறாக வியந்து பாராட்டப் பட்ட மாமன்னன். விஜயாலயன் என்னும் சோழப் பேரரசன் காலத்தில் வாழ்ந்தவன் கம்பன். அவன் பொருதிவென்ற போர்களால் விளைந்த நாசங்களையெல்லாம் கண்டும், கேட்டும் பெரிதும் உள்ளம் நைந்து புழுங்கி யிருக்கிறான். போர் வெறிக்கு மூல காரணம் புகழ் பெறும் ஆர்வமே! என்பதையும் கண்டுள்ளான்.

எனவே, போர் ஒன்றுதான் புகழுக்கு வித்து என்பதை மாற்ற வேண்டும்; போரையும் தடுக்க வேண்டும்; இதை ஒரு தக்க வேளையில் தக்க பாத்திரத்தின் மூலம் உலகுக்கு உணர்த்த முயல்கிறான், கம்பன்.

இராமனுக்கு முடிசூட்டு விழா; அதற்கு முந்திய தினம், குல குருவான வசிட்டன், மனித அறம் முதலாக மன்னன் கடைபிடிக்க வேண்டிய உறுதிப் பொருள்களை இராமனுக்கு உணர்த்துகிறான். அவற்றுள் ஒன்றை மிகவும் வலியுறுத்திக் கூறுகிறான் வசிட்டன்.

முதலில் கவியைப் பார்ப்போம்;

''யாரொடும் பகை
கொள்ளலன் என்றபின்
போர் ஒடுங்கும்;
புகழ் ஒடுங்காது; தன்
தார் ஒடுங்கல் செல்லாது;
அது தந்தபின்
வேரொடும் கெடல்
வேண்டல் உண்டாகுமோ?''

எவருடனும் பகைமை கொள்ளா விட்டால் போர் அற்றுப்போகும்; அதனால் புகழ் மங்கிப் போகாது! ஒரு மன்னனின் ஆட்சியும் அவன் வாழ்வும் குறைவுபடாது. அந்த நிலை ஏற்பட்டு விட்டால் எந்த ஒரு மன்னர் குலத்தையும் அடியோடு அழிய வேண்டுமென்று எவரும் சபித்துக்கொண்டிருக்கவும் மாட்டார்கள்.

எத்தகைய அறவுரை! அறிவுரை! அருளுரை! ஆயிரம் ஆண்டுகட்கு முன்னேயே காந்தியுகம் பிறந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது!

போர் ஒழிந்து உலகெலாம் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவ நாமும் ஆண்டவனை வேண்டி நிற்போமாக! வாழ்க கம்பன்! வாழ்க உலகம் எல்லாம்!

இயல்பும் இலட்சியமும்

திருமதி. சரசுவதி இராமநாதன்

பாத்திரப் படைப்பில் கம்பனுக்கு நிகர் கம்பனே. அவன்படைத்த எந்தப் பாத்திரத்தையும் அவன் மெருகேற்றிச் செம்மைப்படுத்தாமல் விடவில்லை. ஒரு காட்சியிலேயே தோன்றும் நீலமாலை, சபரி முதலிய சிறுபாத்திரங்களாயினும் சரி, காப்பியம் முழுதும் நடைபயிலும் காவியத்தலைவன் இராமன், தலைவி சீதை, எதிர்நிலைத்தலைவன் இராவணன் போன்ற பெரிய் பாத்திரங்களாயினும் சரி, அவ்வவற்றில் தன் தனி முத்திரை பதித்தவன், முத்தமிழுக்கொரு கவிஞன், முழுதுணர் கம்பன்.

உலகியலில் பார்க்கும் போது ஒருபெண்ணுக்குத் தாய் என்ற நிலையில் இதுதான் இயல்பு; மனைவி என்ற நிலையில் இதுதான் இயல்பு- என்று கூறுவதுண்டு. ஆனல் அதே பெண்மையை இலக்கியத்தில் பார்க்கும் போது ''இதுதான் இலட்சியப் பெண்மை''- என்று புகழ்வதும் உண்டு. கம்பன், இயல்பு, இலட்சியம் இரண்டையும் காப்பியத்தில் காட்ட மறக்கவில்லை. இராமன் முடிசூடிக் கொள்ளாமல் வந்துநிற்கிறுன். கோசலை, தாய்க்கே உரிய பாசம் என்ற இயல்பான பண்புடன், ''நினைந்தது என்? இடையூறுஉண்டோ நெடுமுடிபுனைதற்கு?'' என்று தவிக்கிருள். மகன் உரைத்த மாற்றம் கேட்டபின் இலட்சியப்பெண்மை தலைதூக்கவே, தன் மாற்ருள் மகனுக்குப் பட்டம் என்பதெல்லாம் கருதாமல், ''மும்மையின் நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனல்;'' என்று வேற்றுமை மாற்றுகிருள். கமபனுக்கு நாமும் ஒரு ''சபாஷ்'' போடுகிறேம்.

பரதன், தசரதன் மறைவு குறித்து அறிந்ததும் கதறிப்பதறிக் கோசலை பாதத்தில் வந்து விழுகிறுன். தாய்மையின் இயல்பு தோன்ற, 'இவன் தாய் செய்த வஞ்சனை இவனுக்குத் தெரியாதா, என்று எண்ணி

''கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐயநீ அறிந்திலை போலுமால்? '' என்று

கேட்டு விடுகிருள். பரதன் விம்மிப்பொருமித் தான் குற்றமில்லாதவன் என்று கூறிப் பலவாறு சபதம் செய்கிறுன். இலட்சியப் பெண்மை தலை தூக்குகிறது. கானகம் சென்ற தன் மகன் இராமன்வேறு, இப்பரதன் வேறல்லன்; என்று வேற்றுமை மாற்றிக் கொண்டு பாராட்டுகிருள்.

''முன்னைநும்குல முதலுளோர்கள் தாம்
நின்னை யாரே நிகர்க்கும் நீர்மையர்?
மன்னர் மன்னவா!''

என வாழ்த்தவும் செய்கிருள். இது இலட்சியப் படைப்பு என்று போற்றுகிறேம்.

தேவியர் இருவர்

இயல்பான பெண்மை மகன்மீது பாசம் காட்டுவது. கணவனைவிட மகன்மீது அதிக அன்பு கொள்வது சாதாரணப் பெண்ணின் நிலை. இலட்சியப் பெண்மை என்னும் கற்புநிலையில் அது எல்லாவற்றையும் விடக் கணவனையே பெரிதாக மதிப்பது. இந்த இருநிலைகளையும் சித்திரிப்பதில் கம்பனின் கவனம் செல்கிறது. தசமுகனுடைய அந்தப்புரத்தில் எத்துணையோ பெண்கள்! ஆம், சித்தர்கள், இயக்கர்கள், கந்தருவர்கள், தானவர் என்று பல இனத்திலும் பிறந்த பெண்கள்! ஆனல் இரண்டுதேவியர் பெயர்களே காவியத்தில் பயின்று வருகின்றன. பட்டத்தரசியான (மயன்மகள்) மண்டோதரியும் தானியமாலை எனும் தானியமாலினியும் தான்!

தேவையான களங்களில் மட்டுமே இன்றியமையாமை கருதிப் பாத்திரங்களை உலவ விடுபவன் சிறந்த கவிஞன். கம்பன் திறமறிந்து பாத்திரங்களை வரவும் போகவும் வைப்பான்.

அனுமன், இலங்கை சென்று, பொழிலிறுத்து, பஞ்ச சேனுபதிகள், சம்புமாலி முதலானேரைக் கொன்றதுடன் நில்லாமல், தசமுகனின் அருமை மகன் அட்சகுமாரனையும் தேய்த்துக்கொன்றுவிடுகிருன். மகனை இழந்த மண்டோதரியின் துயரம் பெரிதுதான். பெற்ற வயிறு உற்றதுயர் கூறமுடியுமா? இந்த இடத்தில் அவள் துயரத்தை அதிகமாகக் கூறவோ, அவளைப்பற்றி அதிகம் பேசவோ- கம்பர் நினைக்கவில்லை.

'அயன்மகன் மகன்மகன் அடியின்
வீழ்ந்தனள்
மயன்மகள், வயிறுஅலைத்து,
அலறி மாழ்கினள்!

(5 - 10 - 48)

என்பதோடு நிறுத்திவிட்டார்.

முதல்நாள் இராமனுடன் இராவணன் போர் நடத்திவிட்டுத் தோற்றுத் திரும்பியபோது கூட அவனுடைய உரிமை மனைவியரைச் சந்தித்ததாகக் கம்பர் காட்டவில்லை. இராவணனுடைய அன்புமகன் அதிகாயன் போரில் உயிர் கொடுத்துப்புகழ் கொண்டபின்னும் தசமுகனுக்கு இவையெல்லாம் தன்காமத்தின் விளைவு என்பது புலப்படவில்லை. அந்தவேளையில் தானியமாலினியைக் கம்பர் களத்தில் காட்டுகிருர்.

இயல்பான தாய்மை

''தருவனம் அனைய தோளான்
தன்எதிர் தானிமாலி
இரியலிட்டு அலறி, ஓயாப்
பூசலிட்டு, ஏங்கிவந்தாள்.''

(6-17-265)

இரண்டு, மூன்று சொற்ருெடர்களுள் ஒரு தாயின் புத்திரசோகத்தை அடக்கிவிட்டார் எனலாம். மலைக்குவட்டில் இடிவிழுந்தாற் போல வளைக்கரத்தால் முலைக்குவட்டில் எற்றும் கையாள்; உலையில் உருகும் செம்புபோல் உதிரம் ஒழுகும் கண்ணாள்; தசகண்டன் தாளில் விழுந்து பெரும்பாம்பு என்னப்புரண்டு பொருமிப் பொங்கித் துடிக்கிருள். ''சூழ்ந்தனை; கொடியாய்'' என்று ஆருத்துயர் வெள்ளத்தில் ஆழ்ந்து புலம்புகிருள். அவள் பிறர் அழக் கண்டும் அறியாதவள்! எத்தனைபேர் அவனுக்கு அறிவுரை சொன்னுர்கள். கேட்டானு?

''கேட்டாய் உணர்ந்திலையோ?
என் உரையும் கேளாயோ
காட்டாயோ, என்னுடைய
கண்மணியைக் காட்டாயோ!''

(6-17-268)

எனக்கு இந்தமகனுல் வந்த பூரிப்புத்தான் எவ்வளவு! 'இந்திரற்கும் தோலாத நன்மகனை ஈன்ருள் என்று அந்தரத்தவர் போற்ற வாழ்ந்தனன்; அவனை மானிடன் பகழியால் இழந்தேனே!'

அங்கன் உலந்தான்;
அதிகாயன்தான் பட்டான்
மிக்க திறத்துள்ளார்கள்
எல்லாரும் வீடினர்;
மக்கள் இனி நின்றுள்ளான்
மண்டோதரி மகனே
திக்கு விசயம், இனி,
ஒருகால் செய்யாயோ?

(6-17-270)

இனிஉனக்குப் பிள்ளை என்று எச்சமாய் நிற்பவன் மண்டோதரி மகன் இந்திரசித்து ஒருவன்தானே! என்று புலம்பலில், மாற்ருளுக்காவது ஒருமகன் மீதமிருக்கிருன்; எனக்கு யார் இருக்கிருர்? என்ற இயல்பான தாய்மை உணர்வின் ஏக்கம் தெரிகிறது.

கணவன்,கண்டார் இகழ்வனவே செய்தாலும், அவனைத் தெய்வமாகப் போற்றுவது இலட்சியப் பெண்மைதான்; ஆயினும் இயல்பான பெண்மை (தானியமாலினி இடத்தில் நின்று பார்த்தால்) இப்படிச் செய்தது தவறில்லை! இதற்குமேலும் கோபத்தால் கணவனை ஏசுகிருள் தானியமாலினி .

''ஏதையா சிந்தித்து இருக்கின்ருய்?
எண் இறந்த
கோதைஆர் வேல்அரக்கர்
பட்டாரைக் கடவாயோ?
பேதையாய்க் காமம்
பிடிப்பாய் பிழைப்பாயோ?''
சீதையால் வருவ
இன்னும் சிலவேயோ?''

தானியமாலினியின் இந்தக் கடுமொழிகள் மகனைஇழந்த நிலையில் ஆத்திரத்துடன் ஒரு தாய் பேசுகிற இயல்பான பேச்சுத்தான். இது ஒரு

வகை அழகு! சிலபேர் குறிப்பிடுவது போலத் தானியமாலினி பொல்லாதவளோ, வாயாடியோ, கற்பில்லாதவளோ அல்லள்! இயல்பான தாய் அவள்! 'சீதையால், இந்த அளவோடு நிற்கப் போகிறதா துன்பங்கள்!' என்பது பொருள் பொதிந்த புலப்பம்!

மயன் மகளின் மாண்பு

இதே மாதிரியான சூழல் மறுபடி நிகழ்கிறது. இந்திரசித்தன் வீரமரணம் அடைந்த செய்தி கேட்டு மண்டோதரி மறுகிவருகிருள். மலை யின்மேல் மயில் வீழ்ந்ததுபோல மகன்மீது விழுகிருள். உயிர்த்திலள்; ஒன்றும் பேசலள்; உயிர் இல்லள் கொல்லோ என்னப் பெயர்த் திலள்யாக்கை;

பலவாறு புலம்புகிருள். முத்தாய்ப்பு வைத் தது போல அரற்றுகிருள்;

'பஞ்செரி யுற்றதென்ன
அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல
விளிந்ததே மீண்டதில்லை;
அஞ்சினேன்; அஞ்சினேன்;
அச்சீதை என்ற அமுதால் செய்த
நஞ்சினுல் இலங்கை வேந்தன்
நாளை இத் தகையன் அன்றே!'
(6-28-53)

இதைக்கேட்டானே இல்லையோ, இராவணன் வியக்கத்தகு மனமாற்றம் கொள்கிருன். அர சவையில் அனுமன் அறிவுரை சொன்னபோது வராத மனமாற்றம்-அமைச்சர்களும், தம்பியரும் சூழ்ந்த மந்திராலோசனை சபையில் வராத மனமாற்றம் - அங்கதன் தூதுரைத்தபோது வராத மனமாற்றம் - கும்பகருணனும், இந்திர சித்தனும் எடுத்துக்கூறி வராத மனமாற்றம்- மகோதரன், மாலியவான் இவர்கள் சொல்லியும் வராத மனமாற்றம் - ஏன், இராமனிடம் முதல் நாள் போரில் தோற்று உயிர்ப்பிச்சை பெற்று வந்தபோது கூட வராத மனமாற்றம் - தானி யமாலை அரற்றிய போது வராத மனமாற்றம் இப்போது வந்தது என்ருல், அதுவும் மகனின் மரணத்தாலும் அன்று, மனைவியின் புலம்பலால் வந்ததென்ருல் வியத்தகு மாற்றம்தானே!

மகன் இறந்ததைவிட, நாளை மணாளனுக்கு இந்தநிலை வருமோ என்று அஞ்சி அழுவதாகக் கம்பன் அமைத்தது அற்புதம்! அந்தஉரை கேட்டதால்தான் தசகண்டன் மனமாற்றம் அடைந்திருக்கிருன். பலரால் செய்யமுடியாத திருப்பத்தை, மனமாற்றத்தை இலட்சியப் பெண்மை செய்து சாதித்து விட்டது!

கொண்டானை அல்லால் அறியாக்
குலமகள்
நினைந்ததும் மறந்ததும் அறியாத
நெஞ்சினள்,

கற்பரசி, கணவனைக் 'காமுகன்' என்ற பழி யினின்று நீங்கித் தூய்மையுடையவனுக, 'வீர மரணம்' அடைந்தவனுகச் சாக வழிவகுத்துப் பெருமை பெறுகிருள். நாயன்மார்கள் திருவாக் காலும் புகழப் பெறுகிருள். இலட்சியமனைவி யாக என்றும் இலங்குகிருள்.

ஆக, இருவேறு உலகத்து இயற்கையாக, இயல்பையும், இலட்சியத்தையும் காட்டி நிற் பதில் கம்பன் வெற்றி பெறுகிருன்! *பிள்ளையே பெரிது* என்றெண்ணும் *இயல்பான தாய்மை எல்லாவற்றையும் விடக் கணவனே பெரி யவன்* என்னும் *இலட்சியப் பெண்மை* இரண்டிற்கும் இத்தேவியரை எடுத்துக்காட் டாக்கி விட்டார் கம்பர்!

கம்பனில் ஒரு யோகக் காட்சி

திரு. அ. அறிவொளி

''என் சொல்லினுல் சுடுவேன்''- என்று தன் கற்பு வலிமையை அறிந்தும், புகழ்ந்தும் சீதை கூறுவாள்,

'நகரமே சீதை கற்பால் வெந்தது' - என்று வீடணன் கூறுவான்.

தன்வாலில் ஊட்டிய தீயே குளிர்வதை அனுமன் நினைந்து பார்த்து 'சீதையால் நிகழ்ந்தது'- என்று உணருவான்.

'கற்புத் தீயினுல் என்னையே சுட்டுவிட்டாள்' என்று தீயின்கடவுளே இராமனிடம் சீதைக்குச் சாட்சிகூறுவான்.

'இவையெல்லாம் நடந்திருக்குமா?' இருபதாம் நூற்ருண்டில் இளைத்துப்போன அறிவின் கேள்விக்கணை இது!

'இவையெல்லாம் இயற்கை இறந்த செயல்'- திறனுய்வாளர்கள் காரணம் தெரியாத இடங்களில் காரணம் கூறி விட்டதாகத் தமக்குள்ளே தம்மை ஏமாற்றிக் கொள்ளும் ஆய்வுரை இது!

'கற்பு, ஆடவர் பெண்களுக்கு இட்ட ஆன்ம விலங்கு! அது ஊரைச்சுடும் என்பது பொன் விலங்கு! பெண்களை ஏமாற்றக் கட்டிவிட்ட கானல் நீர் இது! இதைத்தேடும் மானின் இலட்சியம் ஒரு கனவு. இது சமுதாய ஒழுங்கைச் சமுதாயச் சீர்திருத்தத் தேவதைக்குப் பலியிட்டு விட்ட சாகசமான வீரவாதம்!

கம்பன் வெறும் கற்பு என்ற சொல்லால் மட்டும் புகழாமல் இருப்பது இந்த ஐயங்களுக்குத் தெளிவு தரும்.

''எத்தவம் எந்நலம் என்னகற்பு நான்
இத்தனைக் காலமும் இழைத்த...''
''தவம் செய்த தவமாம் தையல்''
''மங்கையர் மனநலம் உணர வல்லரோ''

இவை முதலான இடங்களில் கற்பு என்பதைத் தவம் என்று சொல்லுவான்.

''பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பு என்னும்
திண்மை உண்டாகப் பெறின்''

என்ற திருக்குறளும், கற்பு என்று கூருமல் கற்புவழிப் பட்ட திண்மை என்று கூறும்.

தவமே பெண்கள் செய்யத் தேவையில்லை என்பது பெண்ணுக்குப் புறக்கணிப்பு அன்று- அவள் கற்பு மூலம் தவசியாகி விடுவது கூடும் என்ற கணிப்பே.

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
''பெய்யெனப் பெய்யும் மழை''

என்ற இடத்திலும் கற்பு, தவமாகையால் பெய்யாத மழையைப் பெய்விக்கும் என்பதாகும். கணவனைத் தொழுதல் என்ற பெண்ணடிமை இதுவன்று. சொல், உருவம், சக்தி, என யாதாவதொன்று மட்டுமே நீளநினைத்தல், மறவாதிருத்தல், அதை மதித்தல், முதலிய மன ஒழுக்கத்தால் ஒருவன் யோகி ஆகி விடலாம் என்று யோகநூல் கூறும். இதே வழியில் தெய்வம் எதையுமே கூட வணங்காது தெய்வமற்ற கணவனை (பெயர், உரு, சக்தி, அன்பு) மட்டுமே இவ்வகையில் இடைவிடாது சிந்தித்துப் போற்றினுல் அது கற்பும் ஆகி விடும்; யோகமும் ஆகிவிடும். இராமனைப் பிரிந்த சீதை அவன் பெயரையும், உருவையும், சக்தியையும், அன்பு, அருள், தொண்டு முதலியவற்றையுமட்டுமே கொண்டு அனுப்போதும் நீங்காமல் நினைத்தாள்; உண்டி உறக்கம் முதலிய இல்லாமலும் இருந்தாள்.

இப்படி ஓர் எளிய கணவனை ஓர் எளிய பெண் எண்ணியிருந்தாலும் அது தவமே!

யோகமே! கற்புத் திண்மையே! அவளேகூட இறைவன் இயற்றும் ஐந்து தொழிலும் செய்ய முடியும். இதுவே யோகநூல் கூற்று. எளிய வர்க்கே யோகமாகும் ஒன்று இராமனையே நினைக்கும் சீதைக்கு ஆகுமென்பது சிறுபிள்ளைகளும் ஏற்கும் அனுமானம் ஆகிவிடும்.

வீடணன் ஒருயோகி - 'பாம்பறியும் பாம்பின் கால்' போல சீதை கற்பே ஊரைச்சுட்டதென உணர்ந்தான். யோகத்தால் இவன் உணர்ந்ததை இவன் சிரஞ்சீவி என்பதாலும் அறியலாம். ஆகையால் கம்பன் பெரிதாக இதற்கு ஓர் ஆதாரம் காட்டாமல் சிறிதிலேயே விளக்குகிறான்

''ஆனவள் கற்பினால்
வெந்தது அல்லதுஊர்
வானரம் சுட்டது என்று
உணர்தல் மாட்சியோ''

என்று மந்திரி சபையில் இராவணனுக்கு வீடணன் எடுத்துக்கூறுவான். இதில் அனுமனை உயர்த்தாமல் ஆனால் உயர்த்தி இருக்கிறான். வெறும் வானரம் அன்று என்று கூறுவதால் சிறந்தவானரம் என்பது உயர்த்தியது. வானரம் என்ற சொல் அளவில் உயர்த்தாதது மதியூகம்.

''சுட்டது,'' ''வெந்தது'' என்ற சொற்களில் ஒரு நயம் உள்ளது. விளக்கைத் தொட்டால் சுட்டது எனலாம். இது நொடிநேரச் சூடு மட்டும் விளக்கும். சோறு வெந்தது என்றால் இருபது மணித்துளியாகிய சூடு என்பதும் அரிசி, சோறாக உருமாறிக் குழையும் என்பதும் வெளிப்படும் எனவே, வானரத்தின் வாலில் கட்டிய தீயாகமட்டுமிருந்தால் அஃது ஓர் வைக்கோல் போரைச்சுடுமளவே இருந்திருக்கும். நகரையே வேகவைத்ததென்றால் அது மதுரைக் கண்ணகித்தீ என்றாகிவிடுகிறது. இச்சொல்லாட்சி அவன் யோகத்தால் யோகப்பயனாகிய கற்புத்தீயைப்புரிந்து கொண்டான் என்பதைக் காட்டும்.

''...நிற்பினும் சுடாதுநின்ற நீர்மையை
நினைவின் நோக்கி
அற்பின்நார் அறுதஉள்ளத்து
அனுமனும் சனகன்பாவை
கற்பினால் இயன்றது என்பான்
பெரியதோர் களிப்பன்ஆனான்''

வாலைச் சுடாத சுவாலையை நினைத்துப் பார்த்துப் புரிந்து கொண்ட அனுமனைக் கம்பன் காட்டுமிடமிது. அனுமனே யோகியாகையால் நினைத்ததுமே உண்மைபுரிகிறது. யோகத்தை யோகத்தால் அறிந்தான் என்பது காட்ட 'சீதை' என்று கூறாமல் சனகன்பாவை என்றான்; சனகன் பெரிய தவமுனிவன். ஆகையால், அவனைக்கூறி அவன் மகள் என்ற காரணத்தால் யோகத்தை வல்லவள் என்றும் காட்டியதாகக் கொள்ளலாம்.

''தாயே அனைய கருணையான்
துணையே யேதும் தகவில்லா
நாயே அனைய வல்லரக்கர்
நலியக் கண்டால் நல்காயோ?''

தீயைச் சுடாதிருக்குமாறு அனுமனுக்காகத் தீக்கடவுளைச் சீதை வேண்டுமிடம் இது.

வாயுவின் பிள்ளை அனுமன்; வாயுக்கு அக்னி நண்பன்; எனவே, தாயாக உலகுக்கு மூச்சுக் காற்றுதரும் வாயுவுக்குப் பிள்ளையானவனைப் பிறர் நலியச் செய்யலாமோ என்று கேட்பதாகப் பொருள் எழுதியுள்ளனர் பெரியோர். அப்படியானால் 'துணை' என்ற சொல் மகன் என்ற பொருளில் அனுமனைக் குறிப்பதாகும். ஆகவே அனுமனைப் (துணையை) பிறர் வருத்தலாமோ என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் ''துணையே''. என்று பாட்டிருக்கிறது; இதுவும் இலக்கணப் பிழையன்று. ஆனால் இது ஏன் என்று ஆராய்ந்தால் வேறு பொருள் கிடைக்கும்.

'தாயே அனைய கருணையான்' என்பதை வாயு என்று பொருள் செய்யாமல் இராமன் என்று கொண்டு 'துணையே' என்பதை அனுமன் என்று பொருள் செய்யாமல் துணை என்று மட்டுமே பொருள் செய்தால் 'இராமன் துணை' என்றுவரும்; கணவனைத் தவிரப் பிற தெய்வத்தை வணங்காத சீதை அக்னிக்குத் தான் கட்டளை இட இராம நாமத்தைத் துணைக்

கொண்டாள் என்று ஆகும். தானே யோகி யானவள், இராம மந்திரமும் சொன்னபின் தீயும் குளிராதோ?

கற்பு-தவம்-சித்தி- ஐந்து பெருந்தொழில் செய்யும் பயன்- வாலில் தீ குளிர்ந்தது- இது வரை சீதையின் முயற்சி. குளிர்ந்த வால் தீயாலே ஊர் கொளுத்துவது என்பது அனுமன் முயற்சி- ஊர்முழுதும் வேக முடியும் என்பது யோகத் தீயியல்பு என ஆகிவிடுகிறது.

இதுவரை இது நடந்திருக்குமா? என்று கேட்ட மனங்களுக்குத் தோல்வி கொடுத்து விட்ட காரணத்தால்- இனி வேறு வினவரும்! அதாவது யோகத்தால் 'இது சாதிக்க முடியுமா?' என்பதே அக்கேள்வி. 'முடியும்' என்கிறது யோகநூல்! அதைப் பயின்று பார்ப்பது அப் படி ஐயப்படுவோர் கடமை. இப்படி நாம் சொல்வது தப்பிக்கும் முயற்சியன்று. இங்கே அதை ஒரு நூலளவு எழுதி நிரப்ப இடம் இல்லை என்பதேயாகும்.

இப்படி யோகத்தால் முடியும் என்று கூறிய யோகநூல் 'என்கூறுகிறது?' எப்படிக் கூறுகிறது என்பதையும் கம்பன் விளக்கியிருப்பதால் அது மட்டும் செல்லலாம்

"முன்னிப் பல என்?
வேலை வடவனல் புவியளாவிய
கற்றையங் கனலி, மற்றைக்
காயத்தீ, முனிவர் காக்கும்
மூன்று மும்மைச் செந்தீ
முப்புரம் முருங்கச் சுட்ட
சொற்றவன் நெற்றிக் கண்ணின்
வன்னியும் குளிர்ந்த வன்றே"

-என்ற இப்பாடல், வாலில் தீயைக் குளிரச் செய்த போது வேறு எந்த எந்தத் தீயெல்லாம் குளிர்ந்தது என்று பட்டியல் காட்டுகிறது. ஊழிக் காலத்து வரும் வடவாமுகாக்னியும், பூமியின் அடியில் கனன்று இருக்கும் தீயும் (அறிவியல்படி), பிற உயிர் உடம்புகளின் உடலில் உள்ள குண்டலினி என்னும் காயத் தீயும், முனிவர் யாகம் வளர்க்கும் மூன்று வகைத்தீயும், இறைவன் முப்புரம் எரித்ததற்கு ஏற்ற நெற்றிக்கண் தீயும் குளிர்ந்தன. ஏன் குளிர்ந்தன? இவை யாவும் தொடர்புடைய ஒரே பொருள் தான்! ஒரு பொத்தானை அமுத்த எல்லா மின் விளக்கும் அணைதல்போல இறை வன் முதலாக உயிரினம் ஈருக உள்ளவற்றுள் இருக்கும் தீயெல்லாம் ஒரே தொடர்பின. எனவே, ஒன்று குளிரவே ஏனைய வெல்லாம் குளிர்ந்தன என்றான் கம்பன்.

யோகிகளாகிய அனுமனும் விடணனும் தம் குண்டலினி நெருப்பே குளிரக் கண்டதும் இதன் காரணம் இங்கே சீதைதான் என்று உணரவும் முடிந்தது என்பதையும் உணரலாம். யோக நூலின்படி ஐந்து பூதமும் அண்டத்தில் உளது போல் நம் உடம்பாகிய பிண்டத்திலும் உண்டு. வீட்டு விளக்கை அணைப்பதுபோல் சீதை தீயைக் குளிர வைத்தாள்; கண்ணகி ஊரை வேக வைத்தாள்.

பட்டினத்தார் தம் தாயார் ஈமக்கடனுக்குத் தம் யோகத்தீயாகிய குண்டலினி நெருப் பையே மூட்டினார்; ஆதி சங்கரரும் தம் தாயின் கடனுக்கு இப்படியே செய்தார்.

"முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையில்
அன்னை இட்டதீ அடி வயிற்றிலே..."

என்று பட்டினத்தார் சிவபெருமானின் நெற்றிக் கண் நெருப்பு, அனுமனைச்சுடாது இலங்கையை மட்டும் சுட்ட நெருப்பு, அனைவர்க் கும் அடிவயிற்றின் கீழே உள்ள குண்டலிநெருப்பு மூன்றை இணைத்துக்காட்டியதும், யோகத்தால் முடியும் என்பதைக் காட்டியது — யோகம் என்பது பிரபஞ்சம் முழுதையும் கைக்கொண்டு இயக்குவது என்பதையும் காட்டுகிறது. இது கம்பன் கூற்றுக்கு இணையாதலறிக. எனவே, யோகத்தால் பெற்ற சாதனை யாராலும் பெறத் தக்கது எனின் சீதையால் முடியாதுபோகுமா?

இங்கு இறுதியாகக் காட்டிய கம்பன் பாடலில் காயத்தீ என்பதை ஆகாயத்தீ என்று கூறியுள்ளனர் பெரியோர். சிலர் பசித் தீ என்று கூறுகின்றனர்; இவை சொல்லாமலே அடங்கும்; காயம் என்பது உடம்பு; அதை ஆகாயம் என்று வலிந்து கொள்ளத்தேவை இல்லை. மேலும் குண்டலினியே உலகின் தீ யாவற்றோடும் தொடர்புடையதாக யோக நூல்

கூறுவதால் காயத்தில் உள்ள தீ என்றே கூற வேண்டியுளது.

புவியளவிய தீ என்பது நாம் பயன்படுத்தும் எளிய தீயை மட்டுமன்றி பூமியின் நடுவே உள்ள காந்த சக்தியான தீப்பிழம்பையே குறிக்க வேண்டும்; அதுபற்றியே கற்றையான கனலி என்று கூறுகிறுன். இதை ஆயிரம் மீட்டர் பாதாளத்தில் 3000 பெருடிகிரி வெப்பம் இருப் பதைச் சோவியத்தில் வெளிப்படையாகச் சோதித்து நிறுவியுள்ளனர்.

ஆன்மராகமாகக் கவிபாடும் கம்பனுக்கு இவ்வுலகின் மெய்ஞ்ஞான விஞ்ஞான மரபுகள் அவனுக்குள் ஐக்கியமாகி விடுவது இயல்பு. வெளிநாட்டினர் யோக சாதனத்தை அறிவிய லாக்கிக் கொண்டு நம் முன்னேரை வியக்கும் இக்காலத்தில், குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருப்போர் சிலர் யோகத்தையும் நம் காப்பிய புராண ஐயங்களையும் கேலி பேசுவது குறைவது நல்லது.

நம் நூலுண்மைகளைப் படித்தல், ஆய்தல் பயிலுதல் முதலியன செய்தால் அது பகுத்தறி வுக்கு ஒத்து வருவதாகும் என்று பணிவோடு நாம் நிமிர்ந்த மனத்தோடு கூறலாம்.

கவி உலக பேரரசர்

அமரர். வ. வெ. சு. ஐயர்

கவிதா லோகத்தின் பேரரசர் என்று சொல்லத் தகுந்த வர்களெல்லாம் கம்பனுடைய சந்நிதியில் முடிசாய்த்து வணங்க வேண்டியதுதான். மேல் நாட்டாருக்குள் கவி சிரேஷ்டர்கள் என்று கருதப்படுகிற ஹோமர், விர்ஜில் தாந்தே, ஷேக்ஸ்பியர், மில்டன், மோலியேர், கதே ஆகிய இவர்கள் கவிதையின் உயர்ந்த அம்சங்களில் கம்பனுக்குக் கீழே தானிருக்கிறுர்களே ஒழிய அவனை மீறவில்லை. நமது நாட்டிலும் கச்சியப்பர், இளங்கோவடிகள், சாத்தனுர், நன்னயபட்டன், சந்தபட்டன், துளசிதாசர், காளிதாஸன் முதலிய மகா கவிகளைக் கம்பனேடு தூக்கிப் பார்த்தாலும், தராசுமுனை கம்பன் பக்கம்தான் சாயுமே ஒழிய அவர்கள் பக்கம் சாயாது.

1951-ஆம் ஆண்டு கம்பன் திருநாளில் அமரர். நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை இயற்றிய பாட்டுக்கள்

1. செம்பொருளும் சொற்பெருக்கும் தெளிந்த ஞானம்
   தேடுகின்ற இலக்கியமும் செறிந்ததாகும்
நம்பெரிய தமிழ் மொழிக்குப் பெருமை நாட்டி
   நானிலத்தின் கவிஞருக்குள் தலைவனென்றே
அம்புவியின் பல மொழிகள் படித்தாராய்ந்த
   அறிஞர்களில் பெரும்பாலோர் ஆமோதிக்கும்
கம்பனுடைத் திருநாளில் கலந்தோர்க்கெல்லாம்
   கைகூப்பி, வரவேற்போம் கடவுள் காக்கும்.

2. கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போலக்
   கவிபொழிந்து வான்மீகி உலகுக்கீந்த
திரையறியா வூட்டத்தைத் தேக்கிக்கட்டி
   திறமிகுந்த வாய்க்கால்கள் செய்து பாய்ச்சி
தரையறியா இலக்கியக்கா வனத்தைத் தந்தான்
   தனிப்புலமைக் கம்பனெனும் கவிதைத் தச்சன்
உரையறியாப் பயனளிக்க உதவும் பாட்டை
   உலகமெலாம் அனுபவிக்க உழைப்போம் வாரீர்.

3. மால்கடிந்த தவமுனிவான் மீகி யென்பான்
   வனத்திடையே தான்கண்டு கொண்டுவந்து
பால்படர்ந்து முள்ளடர்ந்து பருத்துநீண்டு
   பரிமளிக்கும் பலவின்கனி பாருக்கீந்தான்
மேல்படிந்த பிசினகற்றி மெல்லக்கீறி
   மெதுவாகச் சுளையெடுத்துத் தேனும்வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
   கம்பனென்ற தமிழ்த்தாயர் நோற்றமைந்தன்

4. வனத்திலுள்ள மலர் வகைகள் எல்லாம் கொய்து
   வாசனைவேர் பச்சிலைகள் பலவும் சேர்த்து
கனத்தவுரு பூப்பொதியாம் ராமன் காதை
   வான்மீகி எனும்தவசி கட்டோ டீந்தான்
இனத்தையெல்லாம் ஆய்ந்தறிந்து இணைத்துக் கோத்து
   இடைகிடந்த மாசுமரு யாவும் நீக்கி
தனித்தமணம் அறந்திகழும் மாலையாக்கி
   தரணிக்கே சூட்டிவைத்தான் கம்பன்தானே.

5. அன்னியர்கள் தமிழ்மொழியை அறிந்தோர் பார்த்து
அதிசயித்து ஆசைகொள்ளும் கவியாம் கம்பன்
தன்னைஇந்தத் தமிழுலகம் மறக்கலாமோ
சரியாகப் போற்ருத தவறே போலும்
என்னவிதம் எங்கிருந்தான் என்றும்கூட
ஏற்பதற்காம் சரித்திரங்கள் ஏதோ காணேம்
இன்னமும்நாம் இப்படியே இருத்தல் பாவம்
இழிவன்ருே தமிழரெனும் இனத்துக்கெல்லாம்.

6. நிதி படைத்தோர் கலை வளர்க்கும் நெறியைக்காட்டி
நீங்காத புகழினுக்கோர் நிலயம் ஆகி
மதிபடைத்த புலமையுள்ளோர் எவரும் வாழ்த்த
மங்காத பெரு வாழ்வு தமிழுக் கீந்து
துதிபடைத்த ராமகதை தோன்றச் செய்தோன்
சோழவள வெண்ணைநல்லூர் சடையன்பேரும்
கதிபடைத்த சொல்வலவன் கம்பன்பேரும்
கடல்கடந்த நாடெல்லாம் பரவக் காண்போம்.

7. கம்பனுக்கோர் பெருநிலயம் காண வேண்டும்
கவிதைகளை ஆதரிக்கும் கழகம் வேண்டும்
தம்பழைய பெருமைகளை மறந்த மக்கள்
தலைநிமிர முடியாது தரணி தன்னில்
வம்பளந்து வீண்கதைகள் பேசிப் பேசி
வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வறியராளும்
நம்பிமனத் தெளிவுடனே கடமை செய்வோம்
நமதுமொழிக் கலைவளர்ப்போம் நன்றே வாழ்வோம்

கம்பரசம் தமிழனுக்கே!

திரு. ஜி. கே. சுந்தரம்

கோவையில் சென்ற 9-2-'85 நாளில் கம்பன் விழா நடைபெற்றது. அன்றைய விழாமங்கல நிகழ்ச்சியில் கம்பராமாயண ரசனையில் டி. கே. சி. வெ. ப. சு, கம்பன் அடிப்பொடி என்ற தலைப்புகளில் பேச்சு அமைக்கப் பட்டிருந்தது.

இந்த வரிசையில் அமரர்டி. கே. சி யைப்பற்றி பேசுவதற்கு அவருடன் இருந்தவரும், அவரது ரசனைகளை நேரடியாகக் கேட்டு ரசித்துவந்த தமிழ் அன்பர் திரு. ல. ஷண்முகசுந்தரம் அவர்கள் தனக்கே உரிய பாணியில் டி. கே. சி நேரில் மீண்டும் வந்து தன் ரசனையைக் கூறினால் எப்படி இருக்குமோ அதைப் போலவேபேசிப் பாடி மகிழ்வித்தார்கள். இவரது பேச்சில் டி. கே. சி அவர்கள் கம்பனை எவ்வாறு சொல்லுக்குச் சொல், எழுத்திற்கு எழுத்து ரசித்தார்கள், என்பதைக் கேட்டு ரசித்தனர் கோவை ரசிகர்கள்.

பேச்சின் இடையே திரு. ஷண்முகசுந்தரம் அவர்கள் தனக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் ஒன்றைப் பற்றியும் கூறினார்கள். ஒருமுறை மகாத்மா காந்தியடிகள் சென்னைக்கு வந்த சமயம், ராஜாஜி, டி. கே. சி இருவருமாகக் காந்தியடிகளைச் சந்தித்தார்களாம் டி. கே. சி யைக் காந்தியடிகளுக்கு அறிமுகப் படுத்தும் பொழுது ராஜாஜி, ரசிகமணி கம்பராமாயணத்தில் ஆழ்ந்த புலமை பெற்றவர் என்று கூறினார்களாம்.

பின்பு இருவரும் தர்மம்—அஹிம்சை பற்றி உரையாடினர். அப்பொழுது டி. கே. சி அவர்கள் கம்பராமாயண அயோத்தியா காண்டப் பகுதியிலிருந்து சில பாடல்களைச் சொல்லி, தர்மத்தை இறுதிவரை ஒருவன் கடைப் பிடிக்க வேண்டுமானால் பலவகையான துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாக வேண்டும்; இருந்தாலும், அவற்றையெல்லாம் பொறுமையாகத் தாங்கிக் கொண்டும், அஹிம்சையையே கடைப்பிடிக்க வேண்டும் எனவும், தர்மவழியில் நடப்பது எவ்வளவு கஷ்டமானது என்பதையும் காந்தியடிகளுக்கு அப்பாடல்களின் கருத்தை ஆங்கிலத்தில் விளக்கினார்களாம்.

டி. கே. சி யின் வாய்மொழியாக எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த காந்தியடிகள், தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தபின்பு, ''இந்த மொழி பெயர்ப்பில் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. மூலநூலையே நான் படித்து ரசிக்கவேண்டும், அதற்கு என்னசெய்யலாம்,'' எனக்கேட்டாராம். இதற்கு டி. கே. சி. யின் வாயிலிருந்து வந்த பதில் என்னவென்றால் ''அதுமுடியாது'' என்பதே! காந்தியடிகளும் அதைக்கேட்டு ''ஏன்முடியாது?'' என்று வினவினர். இப்படிக் கேட்ட மகாத்மாவிற்கு ''நீங்கள் தமிழ் நாட்டிலே பிறந்திருக்க வேண்டும்'' என்று திட்ட வட்டமாகப் பதில் சொல்லி விட்டார்கள்.

இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால், அவ்வளவு பெரிய மகான் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபொழுது தமிழ் மொழியைக் கற்றிருக்கின்றார். ''திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை'' எனும் தமிழ்பழமொழியை நன்றாகப் புரிந்து கொண்டு 'அதைத் தமிழ் மொழியில் எழுதவும் அறிந்திருந்தார்கள் அப்படி இருந்தும் ''தமிழ் நாட்டில் பிறந்தாலல்லாமல் நீங்கள் உண்மையான கம்பனை ''ரசிக்க முடியாது'' என்று டி. கே. சி. சொல்லி விட்டார்கள் என்றால் அதில் விஷயம் இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் பிறந்துள்ள

நாம் இந்த இடத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உலகில் உள்ள எந்த மொழியில் எழுதப்பட்ட மாபெருங்காவியமாக இருந்தாலும், அதனை நன்கு ரசித்து உண்மையான இலக்கியச் சுவையையும், அழகையும் உணர வேண்டுமானல், படிக்கின்றவர்கள் அந்த மொழி பேசப்படும் மண்ணில் பிறந்தவராகவும், அந்த மொழியைத் தாய் மொழியாக உடையவராகவும், அந்த நாட்டில் வழங்கும் மரபுகளையும், பழமொழிகளையும், தர்மங்களையும் நன்குஅறிந்தவராகவும் இருக்கவேண்டும். இவையெல்லாம் இல்லையென்ருல் பிறமொழி பேசுபவரும், பிறநாட்டவரும் அந்தக் காவியங்களின் உண்மையான ரசனை முழுவதையும் நன்கு உணரவே முடியாது. ஏதோ செய்திகளைத் தெரிந்து கொண்டோம் என்ற ஒரு சாதாரணமான மனத்திருப்தியே கிடைக்கும். இந்த அடிப்படையைக் கொண்டு பார்த்தால், தமிழ் அல்லாத மற்ற மொழியினருக்காகக் கம்பன் கவிதைகளை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் ஆக்கவேண்டும் என்ற அரிய முயற்சி நடந்து கொண்டிருக்கின்றன. ஆனல், கம்பனை மொழிபெயர்த்துக் கதையாக வசனநடையாகத்தான் வெளியிடுகின்ருர்கள். இதனுல் கம்பன் கவியின் நயத்தை அவர்கள் இந்த உரை நடையிலும், வசனநடையிலும், அனுபவிக்க முடியுமா? என்பது பெரிய கேள்விக்குரிய செய்தியாகும்.

கம்பன் வான்மீகத்தில் இருந்த கதையை எடுத்துக் கொண்டான். ஆனல், இராமாயணமே தமிழ் நாட்டின் சூழலில் நடந்ததைப் போலக் கற்பனை செய்து கொண்டு பாடியிருக்கிருன் என்பது தானே உண்மை. அதனுல், அவனது கவிதை தங்கு தடையின்றி, கற்பனை, கருத்து, சொற்சுவை, பொருட்சுவை முதலியன யாவும் அமைந்த பெருங்காவியமாக இணையற்று நிற்கின்றது.

கம்பனைக் கற்கும் பொழுது பாட்டிற்குப் பாட்டு தமிழ் மண்ணின் மணம் வீசும். தமிழனுக்கே உரித்தான எத்தனை எத்தனை பழமொழிகள்; உலகநடைகள்; உவமைகள்; இயற்கை வருணனைகள். தமிழ் நாட்டு மக்களிடையே பல நெடுங்காலமாகப் பேசப்பட்டுப் பழக்கத்தில் இருந்து வரும் சொற்ருெடர் எண்ணற்றவைகளைக் காணலாம். உளம் மகிழலாம். டி.கே.சி அவர்கள் காந்தியடிகளைத் தமிழ் நாட்டில் பிறந்திருந்தால்தான் கம்பனின் பாடலை உண்மையாக ரசிக்கமுடியும் என்று கூறியதற்கு எடுத்துக் காட்டாகச் சில அகச்சான்றுகளாகச் சில தொடர்களைக் காணலாம்.

''இக்காசு இல் கொற்றத்துராமன்''

''நடையில் நின்று உயர் நாயகன்''

இந்தத் தொடர்களுக்குப் பிற மொழிகளில் எவ்வளவு விளக்கம் கொடுத்தாலும் இதில் உள்ள அழகும் பொருள் ஆழமும் கிடைக்குமா?

''நதியின் பிழையன்று நறும்புனல்
இன்மை; அற்றே,
பதியின் பிழை அன்று பயந்து
நமைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று; மகன் பிழை
யன்று; மைந்தா
விதியின் பிழை; நீ இதற்கு
என்னை வெகுண்டது?''

என்ருன்.

இந்தப் பாடலுக்கு எத்தனை சொற்களால் வேறு மொழியில் விளக்கம் தந்தாலும் இதன் ஆழ்ந்த பொருளும் பாட்டின் பாவமும் உள்ளத்தில் நிலைக்காது - உண்டாகவே முடியாது அல்லவா!

தமிழ் நாட்டு வழக்கத்தில் சத்தியம் செய்வது உண்டு. அப்படிச் செய்வதென்ருலும், உறுதியாகக் கூறுவதென்ருலும் - தம் மக்களின் மீது ஆணையிட்டுச் சொல்வது அதன் உச்சகட்டம் இதோ கம்பன் இதற்கும் ஓரிடம் காட்டுகின்ருன்.

கைகேயி தசரதனிடம் வரம் கேட்கும் கட்டம்-

வண்டு உளர் தாரவன்
வாய்மை கேட்ட மங்கை
கொண்ட நெடுங் கணின்
ஆலி கொங்கை கோப்ப,
'உண்டு கொலாம் அருள்
என்கண்? உன்கண் ஒக்கின்,
பண்டைய இன்று
பரிந்து அளித்தி'

என்ருள்,

இந்த இடத்தில் கள் அவிழ் கோதையாளின் கருத்தை உணராத மன்னன் வெள்ளம் போலப் பொங்கிடும் சுடர் மிகுந்த மின்னலைப் போல மகிழ்ச்சியால் பேரானந்தமாகச் சிரித்தான். ''கைகேயி, உன் உள்ளத்திற்கு உவகையளிப்பதைச் செய்வேன் - சிறிதும் கஞ்சத்தனம் செய்யேன்-உனக்கு லோபம் செய்யமாட்டேன்-இது பொய் மொழியல்ல - வள்ளல் உன் மைந்தன் இராமன் மேல் ஆணை இட்டுச் சொல்கின்றேன்'' என்ருன். இப் பகுதிகளைப் பிற மொழிகளில் விளக்கும் பொழுது இத்தமிழ் மண்ணின் மரபு வெளிப்படாது.

பிறநாடுகளில் ஒரு செய்தியைச் சத்தியம் செய்து கொடுக்குங்கால் வேதப் புத்தகங்களின் மீது தான் சத்தியம் கூறுவார்கள். ஆனல் பெற்ற மகன் மீது சத்தியம் கூறுதல் முழுக்க முழுக்கத் தமிழ்ப் பண்பாடுதான். அதன் உறுதியும், உருக்கமும், ஆழமும் மற்றவர்களால் உணரமுடியாது. இந்த நோக்கத்தோடு பாடலைப் பிறமொழியில் பொருள் கூறினல் இக்கருத்தின் உண்மையான-உயிரான ஜீவநாடியை உணர முடியாமையை நாம் அறியலாம். தசரதனின் உள்ளத்து உறுதியை அறிய முடியாதல்லவா ?

கைகேயி உரைத்த மன்னன் ஆணையைத் தலைமேற்கொண்டு எம்மனோரால் இயம்புதற்கரிய செப்பருங்குணத்து இராமன் ''மின் ஒளிர் கானம் இன்றே போகின்றேன்; - விடையும் கொண்டேன்'' என்ருனல்லவா? இதில் அவன் தந்தை, தாய், வாக்கியத்தைப் போற்றுவதில் உள்ள உண்மையான ஆர்வம் - பெற்றேர் இடத்துள்ள மரியாதை - பணிவு - மேலும் தாயின் ஆணையை நிறைவேற்றுவதில் உள்ள வேகம் தெளிவாகின்றன. எங்கே கால தாமதம் ஆகிவிடுமோ? என்று பயந்து பேச்சை நீடிக்காமல்''விடையும் கொண்டேன்'' என்று ரத்தினச் சுருக்கமாய்ச் சொல்லி விட்டான். இக்கருத்தையெல்லாம் என்ன முயன்ருலும் பிற மொழியில் விளக்க முடியுமா? பாருங்கள்!

இராமன் கோசலையைத் தேற்றுகின்ருன்:- இடருற்ற தன் தாயைக் கையில் எடுத்தான். அரிய கற்பு மேம்பாடுடைய என் அன்னையே, 'உண்மை பேசுவதில் திறத்துடன் இருக்கும் நம் வேந்தனைப் பொய்த் திறத்தினன் ஆக்குதியோ? புகல்' என்ருன். இத் தொடர்களில் உள்ள சோகத்தின் பாவத்தை வேறு எந்த மொழிச் சொற்கள் வெளிக் கொண்டுவரும்?

இராமன், சீதை, இலக்குவன் மூவரும் நாடு துறந்து இரவில் காடு நோக்கி வழி நடக்கின்றனர்.

'எங்கும் இருள் மண்டிக் கிடக்கிறது- மாய வாழ்க்கையை உடைய அரக்கரின் அநியாயங்களைத் தகர்த்தெரிபவர்களைத் தடுத்து, அந்தக் கொடிய அரக்கர்களுக்கு உதவுவது போல, எங்கும் கரிய மையைப்பூசி இருப்பது போல இருள் பரந்துள்ளதாம். ஆனல், அந்த மையிருட்டை அகற்ற, வானம் கை விளக்கை ஏந்தி வந்தது போல கடவுள் திங்கள்-சந்திரன் தோன்றினன்,' என்ருன்.

இந்தப் பாடலில் உள்ள நயமும், உண்மையும் என்னவென்ருல் ஓரிடத்திற்குப் போவதென்ருலும், அல்லது ஒரு சடங்கு நடக்கும் இடத்திலும் கடவுளின் திருவீதிப்புறப்பாட்டிலும் கை விளக்கு முன்னே எடுத்துச் செல்லல் தமிழ் மரபல்லவா? இந்த மரபு தெரிந்திருந்த கடவுள்மாக் கவிஞன் 'இராமன் முதலியவர்க்கு

இருளில் கைவிளக்குப் போலச் சந்திரன் வழி காட்டிச் சென்ருன்' என்ருன். இச் செய்தி தமிழ் மரபு தெரிந்தவர்க்கே நன்கு புரியும்.

நூல் போட்டுப் பார்த்துத்தொட்ட இடமெல் லாம் சுவைக்குமா ? என்பதைச் சோதிக்க ஒரு வழி - தமிழனுக்குப் புத்தகத்தில் ஏதாவதொரு பகுதியைப் பார்க்க வேண்டுமென்ருல் நூல் போட்டுப் புத்தகத்தைப் பிரித்து அந்தப் பக்கத் தில் என்ன இருக்கின்றது என்பதைக் கடவுள் சொன்ன வாக்காக ஏற்கும் பண்பு உண்டு. அந்த மாதிரி [Randan Pick] எடுத்ததில் எனக்குக் கீழ்க்கண்ட பாட்டு வந்தது. இதில் டி. கே. சி. சொன்ன உண்மை உள்ளதா என்று பார்ப்போம்.

சுந்தர காண்டம் ஊர்தேடு படலத்தில் இராவணனின் அரண்மனேயுள் புகுந்த அனுமன் சீதையின் நினேவோடு விரகதாபத்துடன் துயில் கொள்ளும் நிலேயில் இராவணனேக்காண்கின்ருன்

''சாந்து அளாவிய
கலவைமேல் தவழ்வுறு
தண் தமிழ்ப்
பசுந்தென்றல்,
ஏந்து காம வெங்கனல்
உயிர்த்து, இருமடி
துருத்தியின் உயிர்ப்புஏற,
காந்தள் மெல் விரல்
சனகிமேல் மனம் முதல்
கரணங்கள் கடிது ஓட,
பாந்தள் நீங்கிய
முழைஎன குழைவுறு
நெஞ்சு பாழ்பட்டானே''

(ஊர் தேடு - 210)

இந்தப் பாட்டில் சந்தனம் பூசிய உடம்பின் மேல் '' தண்தமிழ்ப் பசுந்தென்றல் தவழ்வுறு '' என்று சொன்ஞன் கம்பன். இந்த அனுபவம் முழுக்க முழுக்கத் தமிழனுக்குத்தான் உண்டு. மற்றவர்களுக்குத் தென்றலும் இல்லே; அதன் அருமையையும் பெருமையையும் அனுபவிக் கவும் முடியாது. அவ்வளவு அழகான மூன்று அடைமொழிகளேப் போட்டு உருக்கமாகப் பாடி யுள்ளான் கவிஞன்.

இராவணனுடைய காம வெங்கனல் உயிர்த் தது - மடித்த தோலினுல் செய்த துருத்தி காற்றை ஊதித் தீயை எரிப்பதைப் போல அந்த வெங்கனல் மேலும் மேலும் எரிந்தது. மெல்விரல் ஜானகியின் மேல் உள்ள காதல் எண்ணங்கள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. இராவணனது மனம் முதலிய அந்தக் கரணங் களும் வேகமாக ஓடின.

இந்த நிலேயில் 'ஒரு பாம்பு தனது வளேயை விட்டு வெளிவந்த பின்பு அந்தவளே சும்மா கிடப்பதைப் போல இராவணனது மனம் முதலிய அந்தக்கரணங்கள் சீதையை நோக்கி ஓடிய பின் செயலற்றுப் பாழ் பட்டு நின்றது' என்று உவமிக்கின்ருன் கவிஞன். பாம்பைப் போன்ற கொடுமையும், நச்சுத் தன்மையும் வாய்ந்த இராவணனது எண்ணங்கள் அரவிற்கும், அவை நீங்கிய அவனது உள்ளம் பாம்பு நீங்கிய வளே அல்லது கவிஞன் வாக்கில் முழை போல இருந்தது என்று பொருத்தம் காட்டியது மிகவும் ஏற்றது. இந்த இடத்தில் தன் மேல்சட்டையை உரித்து விட்டுப் போன பாம்பின் உயிரற்ற சட்டையைப் போல இரா வணனது அந்தக்கரணங்கள் அகன்ற பின் செயலற்றுப் - பயனற்றுக் கிடந்தான் என்றும் பொருள் கொள்ளுமாறு பாடல் அமைந்திருப் பதையும் அறியலாம். இது போன்ற ரசனே களேக் கம்பன் பாடல்களில் தமிழனேயன்றிப் பிறர் காணமுடியாது.

ரசிகமணி காந்தியடிகளுக்கு இவ்வாறு சொன் ஞர் என்ருல் அவருக்கு 'ரசிகமணி' எனும் சிறப்புப் பெயர் நூற்றுக்கு நூறு பொருத் தமாகும். கம்பரசனே தமிழனுக்கே என்பதில் ஐயம் இல்லே !

★

லோகோபகாரி கம்பனுக்கு ஒரு காணிக்கை

அமரர் பி. ஸ்ரீ.

நமது தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்கு இரண்டு நிகழ்ச்சிகள் இன்றியமையாதனவென்று சொல்லலாம். ஒன்று சங்க நூல்களின் பிரசுரம்; மற்றது கம்பனை மறுபடியும் கண்டு பிடித்தது. சங்க நூல்கள் வெளியிடப்பட்டதும் தமிழாராய்ச்சி புத்துயிர் பெற்றதென்று சொல்ல வேண்டும். ஆனால் சங்க நூல்களைக் கொண்டு தமிழிலுள்ள அபூர்வமான கவித்வ சக்தியை யறிந்து கொள்ள முடியாது.

சங்கப் புலவர்கள் தமிழை ஒரு நல்ல கருவியாகச் செய்துகொண்டு வீரத்தையும் காதலையும் சிறந்த முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் விசேஷமான மனோபாவத்தைப்பார்க்கமுடியாது. அவர்களுடைய பாஷையில் தமிழின் பூரணமான சக்தியையும் ஓசையின்பத்தையும் அனுபவிக்கவும் முடியவில்லை. கவிதையின் சிகரமென்று சொல்லத்தக்க கம்பராமாயணத்திலேதான் தமிழர்களின் சௌந்தர்ய உணர்ச்சியையும் மனோபாவத்தையும், கவித்திறமையையும் பரிபூரணமாகக் கண்டு அநுபவிக்கிறோம்.

''கம்பனும் புலவன்; காளமேகமும் புலவன் தான்; கம்ப ராமாயணமும் காவியம்; பாகவதமும் கூடக் காவியந்தான்'' என்றெல்லாம் போலிப் புலமை தோன்றப் பண்டிதர்கள் பேசி மகிழ்ந்துகொண்டிருந்த காலத்தில்— ''தமிழிலே ஒன்றும் கிடையாது; எல்லா அழகுகளும் ஆங்கில இலக்கியத்தில்தான் உண்டு; அடுத்தபடியாகப் பாராட்டத்தக்கது வடமொழிதான்'' என்றெல்லாம் நவீன அறிவாளிகள் விவகரித்துக் கொண்டிருந்த காலத்தில்-பழையகலைகளோடு புதிய கலைகளிலும் தக்கபயிற்சி பெற்றிருந்த மேதாவியான திரு. வ. வே. சு. ஐயர் மேலைநாட்டார்களின் இலக்கிய ஆராய்ச்சி முறையைத் தழுவித் தாம் எழுதிய கட்டுரைகளில் கம்பன் கவிதைக்கு உலக இலக்கியத்திலேயே ஓர் உயர்ந்த ஸ்தானம் உண்டென்பதை வற்புறுத்தினர். எனவே, கம்பனைத் திரும்பவும் கண்டு பிடித்தவர்களில் முதன்மையானவர் என்று திரு. வ. வே. சு. ஐயரைக் குறிப்பிடவேண்டும்.

அடுத்தபடியாகக் குறிப்பிடத் தக்கவர்கள் திரு. கே. என். குமரேசபிள்ளையும் அவர் சகோதரரான திரு. கே. என். சிவராசபிள்ளையும். இவர்களில் திரு. குமரேசபிள்ளை நாற்பதாண்டுகளுக்கு மேலாக மலையாள நாட்டில் கம்பராமாயணப் பிரசாரத்தை இடை விடாமல் செய்து வந்திருக்கிறார். திரு. சிவராசபிள்ளை கம்பனைப் பற்றியும் கவிதையைப் பற்றியும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதிக் கம்பனுடைய கலைத்திறமையையும் மேதா விலாசத்தையும் நவீன ரஸிகர்கள் அங்கீகரிக்கும் முறையில் சித்தாந்தம் செய்திருக்கிறார் .

இவர்களுடைய கூட்டுறவுதான் இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவரான திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையை முதல் முதல் கம்பராமாயணத்தில் ஈடுபடும்படி தூண்டியது. அதுமுதல் திரு. வையாபுரிப் பிள்ளை கம்பராமாயண ஏடுகளைத் தேடிப்பிடிக்கும் முயற்சியிலும், பாட பேதங்களை ஆராயும் முயற்சியிலும் விசேஷ சிரத்தை காட்டி வந்திருக்கிறார்.

கம்பனைக் கற்று அநுபவித்துத் தாம் கண்ட உயர்ந்த கவியின்பத்தைப் பிறரும் துய்த்தின்புறவேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்து தமிழ் நாடெங்கும் பிரசாரம் செய்பவர் அன்பர் டி. கே. சி. இவரை யறியாதார்

கம்பனையும் அறியாதார் என்றே சொல்லிவிட லாம். மதத்தைப் பரப்புவதில் பாதிரிமார் காட்டுகின்ற அவ்வளவு ஆர்வத்தைக் கம்பனைப் பரப்புவதில் இவர் காட்டி வருகின்றார். பாட்டை இவர் படிக்கவேண்டியதுதான், கேட்பவர் மனத்தில்-உள்ளத்தின் ஆழத்திலே என்றும் சொல்லலாம்- பதிந்துவிடும். பாட்டின் வரிகளா? அந்த ஓசையின்பம் கவியுள்ளத்தோடு அப்படியே பதிவாகிவிடும்.

இவர்கள்தான் கம்பனைக் கண்டவர்கள்; எனவே, தமிழ்ப் பண்பையும் கண்டவர்கள். கண்டு தற்காலத்தமிழர்கட்கும் காட்டுகின்ற வர்கள்.

இக் குழாத்தில் ராவ்சாஹிப் வெ. ப. சுப் பிரமண்ய முதலியார், திரு. ஏ. ஸி. பால் நாடார் முதலானவர்களும் இடம் பெற்றிருக் கிறார்கள்.

இத்தகைய தமிழ்த் தொண்டர்களின் கருத் துக்களைத் திரட்டி ஒருநூலாக வெளியிடுவது கம்பனைப் பரப்புவதற்கு ஒரு நல்ல கருவியாக அமையுமென்பதைக் காரைக்குடியில் கம்பன் திருநாளைக் கொண்டாடக் காரணமாயிருந் தவர்கள் நன்குணர்ந்தார்கள். அவ்வுணர்ச்சியே ''கம்பன் கவிதை'' என்ற கட்டுரைத் தொகு தியாக உருப்பெற்றிருக்கின்றது.

ஒப்பீட்டாய்வில் பாசனும் கம்பனும்

திரு. மு. கு. ஜகந்நாதராஜா

உலக மகாகவிகளுள் முன்னணியில் நிற்கும் கவிச் சக்கரவர்த்தி கம்பனின் மேன்மையை உலகறிந்துள்ளது. கம்பனின் கவித்திறனை, கற்பனை வளத்தை, வருணனைத்திறனை, மேதா விலாசத்தை அனைவரும் பாராட்டியுள்ளனர். பாரதியார், வெ. ப. சு. முதலியார், வ. வே. சு. அய்யர், ரசிகமணி டி. கே. சி, கம்பன் அடிப்பொடி, சா. கணேசன், பி. ஸ்ரீ, அ. ச. ஞானசம்பந்தன், எஸ். ராமகிருஷ்ணன், முதலிய பேரறிஞர்கள் கம்பனின் மேன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். பூதலப்பட்டு ஸ்ரீ ராமுலு ரெட்டி (தெலுங்கு-செய்யுள்), மருபூரி கோதண்டராம ரெட்டி (தெலுங்கு-வசனம்), எஸ். கே. நாயர் (மலையாளம்), சங்கர ராஜுலு நாயுடு (ஹிந்தி), சேஷாத்ரி (ஹிந்தி) முதலியோர் பிற மொழிகளிலும் கம்பனின் கவிதையை அறிமுகப்படுத்தி பல நூல்கள் வந்துள்ளன. கம்பன் கழகங்கள் தமிழ் நாடெங்கும் பரவலாக கம்பன் புகழைப் பரப்பி வந்துள்ளன.

கம்பனை உலக மகா கவிகளில் சிறந்தவன் என்று நிரூபிக்க வ. வே. சு. அய்யர், வான்மீகி, ஹோமர், வர்ஜில், தாந்தே, மில்டன் போன்ற பழம்பெரும் கவிகளுடன் ஒப்பிட்டாய்வு செய்துள்ளார். கம்பனையும் துளசியையும் ஒப்பிட்டுச் சில நூல்கள் எழுந்தன. கம்பனையும் தெலுங்கு ராமாயணங்களையும் ஒப்பிட்டு டாக்டர். சல்லா ராதா கிருஷ்ண சர்மா ஒப்பிட்டாய்வு செய்து ஆங்கில நூல் ஒன்று வெளியிட்டுள்ளார்.

மேனாட்டிலக்கியங்களின் நோக்கும் போக்கும் நமது பாரத நாட்டிலக்கியத்தின் நோக்குக்கும் போக்குக்கும் முரண்பாடாக அமைந்துள்ளன. நமது இலக்கியத்தில் உடன் பாட்டு முறையில் நீதியை வலுயுறுத்துகின்றது. மேனாட்டிலக்கியங்கள் எதிர் மறை முறையில் தீமையின் சொருபத்தை விளக்கி நீதியைக் கூறுகிறது. மேலும் நமது கற்பனை நயம், வருணனைத்திறன், பாத்திரப்படைப்பு மேனாட்டிலக்கியங்களை விடச் சிறப்பாகவே அமைந்துள்ளன. ஆதலின் கம்பனை மேனாட்டிலக்கியங்களுடன் ஒப்பிட்டு அவன் சிறப்பினை மெய்ப்பிக்க முயலுவது சிறப்புடைத்தன்று.

ஆதி கவிகளாகிய, வான்மீகி, வியாசன், குணாட்யன், ஆகியவர்களது மூலப்படைப் புகளோடு ஒப்பிட்டு கம்பனைச் சிறப்பிக்க முயல்வதும் பொருத்தமன்று. இந்திய இலக்கியத்தின் மூல ஊற்றுக்களான இம்மூவரும் காலத்தாலும், சமுதாய அமைப்பாலும் மிகப் பழமையானவர்கள். அவர்களோடு மிகப்பிற்பட்ட கவிஞனை ஒப்பிடுவதும் சிறப்புக் கூறுவதும் தகுதியன்று. வான்மீகியோடு ஹோமரை ஒப்பிடலாம்: வியாசனை ஒப்பிடலாம்: கம்பனையும் துளசியையும் ஒப்பிடுவது பொருந்தாது.

கம்பனோடு மிகப் பிற்பட்ட கவிஞர்களும், அத்தியாத்மிக ராமாயணத்தை மொழி பெயர்த்தவர்களுமாகிய துளசியையும், மலையாளக் கவிஞன் எழுத்தச்சனையும் ஒப்பிடுவதும் சிறப்பன்று. இமயம் போல் நிற்கும் கம்பன் எங்கே? சாதாரண மலைகளாகத் தோன்றும் கவிஞர்கள் எங்கே?

ஒப்பீடு செய்வதற்குக் கிட்டத்தட்ட சமகாலத்தவராகவோ, அல்லது ஒரே பொருளைப்பற்றி எழுதியவர்களாகவோ, இருத்தல் வேண்டும். சமகாலத்திலும் ஒரே பொருளைப்பற்றியும் எழுதியவர்களாக இருந்தால் இன்னும் சிறப்பாக அமையும் அல்லவா?

இலக்கிய உலகில் சம காலம் என்பது ஒரே நூற்றுண்டாக இருக்க முடியாது. ஏனெனில் நமது கவிஞர்களின் காலம் எது என்பதே இன்னும் நிர்ணயமாகாத ஒன்று ஆகும்.

இளங்கோ, சாத்தனுர் இருவரையும் கி. பி. இரண்டு முதல் எட்டாம் நூற்ருண்டு வரைக்கும் இழுத்தடிக்கின்றனர். கம்பனை ஒன்பதாம் நூற்ருண்டு என்றும், பன்னிரண்டாம் நூற்ருண்டு என்றும் கூறுகின்றனர். இப்படித் தான் நமது கவிஞர்களின் கால எல்லை ஐநூறு ஆண்டுகளாவது ஐயப்பாட்டுக்குரியதாக அமைந்து விடுகிறது. ஆதலின், கம்பனை ஒப் பிடத்தகுந்த கால எல்லை கி. பி. ஐந்தாம் நூற் ருண்டிலிருந்து கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டு வரையிலான ஆயிரம் ஆண்டுகளை எடுத்துக் கொண்டு அக்கால எல்லையில் இருக்கும் கவிஞர்களோடு ஒப்பீடு செய்தல் வேண்டும். இக்கால எல்லையில் சமுதாய அமைப்பு கிட்டத் தட்ட ஒரே விதமாக இருந்தது. ஆதலின், இக் கால எல்லைக்குட்பட்ட கவிஞர்களையே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். கி. பி. ஐந்தாம் நூற்ருண்டுக்கு முன்பு சமண பௌத்த மதத்தாக் கத்தாலும், கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டுக்குப் பிறகு முகமதிய மதத்தாக்கத்தாலும், சமுதாய அமைப்பிலும், சிந்தனையிலும் பெருமாற்றங்கள் நிகழ்ந்தன என்பது அறிவோம்.

மகாவீரனும், புத்தனும் தோன்றுவதற்கு முன்னைய சமுதாய அமைப்பு வேறு. அப்பொழுது தோன்றிய வான்மீகி ராமாயணமும், வியாச பாரதமும், குணட்டியரின் பெருங்கதை (பிருஹத்கதா) யும் கூறும் சமுதாயமும், சமண பௌத்த மதச்செல்வாக்குக்குப் பிறகு எழுந்த சமு தாயமும் எவ்வளவோ மாற்ற மடைந்துள்ளது என்பதை இலக்கியங்களே எடுத்துக்கூறுகின்றன. சரித்திரமும் சான்று பகரும். ஆதலின், ஒரே சமுதாய அமைப்பில் எழுந்த இரு கவிஞர்கட் கிடையே ஒப்பிட்டால்தான் இருவரில் யார் எதில் சிறந்து விளங்குகிருர் என்பது எளிதில் புரியும்.

ஒருவர்தம் சிறப்பினை ஆய்வதற்கன்றி சாதா ரணமான ஒப்பீடுகள் யாரைப்பற்றியும் எக்காலத் தவராயினும் செய்யலாம். கம்பனும், மில்டனும், கம்பனும் பாரதியும், கம்பனும் வால்மீகியும், கம்பனும் காளிதாசனும், கம்பனும் காந்தியும், கம்பனும் காரல் மார்க்சும் என்பன போன்ற ஒப்பீடுகள் சாதாரணமானவை. இவற்றில், கருத்து, உவமை நயங்கள், கற்பனை முறைகள், சொல்லாட்சி, பாத்திரப்படைப்பு, தத்துவ நோக்கு போன்றவற்றில் இருவர்கட்கிடையே உள்ள ஒப்புமைகளைக் கண்டு சுவைக்கும் திறந்தன இவை. இவற்றுக்குக் கால இட மொழி எல்லைகள் எதுவும் தேவை இல்லை. ஆனல், ஒருவருடைய சிறப்பினையோ, மேன் மையையோ நிறுவவேண்டி ஒப்பீடு செய்யும் போது மட்டுமே, காலஎல்லை, சமுதாயஅமைப்பு கூறப்பட்ட பொருள், முறை ஆகியவற்றிலும் ஒரு பொதுத்தன்மை இருக்க வேண்டும் அப்போது தான் ஒருவர் சிறப்பினை தெளிவாக்க முடியும். இந்த வகையில் கம்பனைப்பற்றி ஒப்பீடு செய்து அவன் மேன்மையை யாரும் இதுவரை நிறுவியதாகத் தெரியவில்லை. அத்தகு ஆய்வுகள் வந்தால்தான் தர்க்க ரீதியாகவே கம்பன் மிக உயர்ந்த கவிஞன் என்று நிருபிக்கப்பட முடியும். உணர்ச்சி நிலையில், சுவை நோக்கில் அவனுக்கு இணை இல்லை என்று கூறுவதை விட, ஆய்வு நோக்கில் அதை நிருபித்தல் இன்றியமையாத தாகும்.

உண்மையில் கம்பனை இவ்விதம் ஆராய்ந்து பார்த்தாலும் அவனே உயர்ந்து நிற்பான் என் பதில் ஐயமில்லை. ஆனல், அத்தகு முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை என்று தெரிகிறது. இத்தகு நோக்கில் ஆராய்தற்குரிய மொழிகளே சிலதான். வடமொழி, (சமஸ்கிருதம்) பிரா கிருதம், கன்னடம், தெலுங்கு, முதலிய இலக்கிய வளமார்ந்த மொழிகளில் பல சிறந்த கவிஞர்கள் உள்ளனர். அவர்களுள் இராமாயணக் கதையை எழுதியவர்களும் பலர் உள்ளனர். சிலர் காவியமாகவும், சிலர் நாடகங்களாகவும் வரைந்துள்ளனர். இவற்றை எல்லாம் தொகுத்து ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். எல்லா இந் திய மொழிகளிலும் இராமாயணம் உள்ளது. எனினும், மிகச்சிறந்த பழமையான கவிஞர் களோடு தான் ஒப்பிட வேண்டும்.

முக்கியமாக கி. பி. இரண்டாம் நூற்ருண்டின ராகிய பிரவர சேனனின் 'சேதுபந்தம்' எனும் பிராகிருதமொழிக் காவியம், காளிதாசனின் 'ரகு வம்சம்', பாசனின் இராமாயணம் சார்ந்த நாடகங்கள், பிற வடமொழி இராமாயணம் சார்ந்த நாடகங்கள், தெலுங்கில் பதின்மூன்றும்

நூற்ருண்டைச் சேர்ந்த மொல்ல ராமாயணம், ரங்கநாத ராமாயணம், பாஸ்கர ராமாயணம்' பிற பல ராமாயணங்கள், கன்னடத்தில் ராம சந்திர சரிதம் எனும் நாகசந்திரனின் சமண மத ராமாயணம், தொரவெ ராமாயணம், அசாமியில் மாதவ கந்தலி ராமாயணம் (14 ம் நூற்ருண்டு) வங்காள கிருத்திவாச ராமாயணம் (15ம் நூற்ருண்டு) போன்றவற்றைக் கம்பனேடு ஒப்பிட்டாய்வு செய்து கம்பனின் தனிச் சிறப்பினை விளக்க வேண்டும்.

இத்தகு ஒப்பீட்டாய்வு மூலம் கம்பனின் குறைநிறைகள் தெற்றெனப் புலப்படும். அவனது தனிச் சிறப்பான கூறுகளும் தெளி வாகத் தெரியும். அத்தகு ஆய்வுக்குப் பல்கலைக் கழகங்கள் இணைந்து பணியாற்ற வேண்டும். பன்மொழிப் புலமையாளர்கள் இணைந்து தொண்டாற்ற வேண்டும். அவ்விதம் செய் தால் கம்பன் தன்னிகரற்ற மாபெரும் கவிஞன் என்பது உறுதியாகும்.

இவ்விதம் ஒப்பிட்டாய்வுக்குரிய ஒரு மாபெரும் கவிஞன் பாசன் வட மொழியில் நாட கங்கள் பல இயற்றிய மாபெரும் கவிஞன் ஆவான்.

பாசனின் காலம், பிறந்த இடம் முதலியன தெளிவாகத் தெரியவில்லை. காளிதாசன், பாணபட்டன் முதலிய பெருங் கவிஞர்கள் பாசனைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அறிஞர் கள் பாசனை ஐந்து அல்லது ஆரும் நூற்றண்டின ராகக் கருதுவர். அவனது படைப்புக்கள் வெகு காலம் உலகுக்குத் தெரியாமல் இருந்தது.

நற்பேருக, திருவனந்தபுரம் மன்னர் ஓலைச் சுவடி நூலகத்தில் சில அற்புதமான நாடகங் கள் கிடைத்தன. அதை மகா மகோபாத்தியாயர் டி. கணபதி சாஸ்திரிகள் 1912 ல் இந்நாட கங்களைக் கண்டெடுத்து வெளியிட்டார். இந் நாடகங்களில் எதிலும் பாசன் பெயர் குறிப்பிடப் படவில்லை. இன்னர் எழுதியது என்றும் தெரிய வில்லை; எனினும்; நாடகங்களின் மேன்மை, நடை, அலங்கார நூல்களில் மேற்கோளாக பாசனின் பெயரில் உள்ள சில சுலோகங்கள் முதலியவற்றைக் கொண்டு கணபதி சாஸ்திரி கள் பாச நாடகங்கள் என்று குறிப்பிட்டார். இது பற்றி அறிஞர்களிடையே முரண்பாடான கருத்து உண்டெனினும் பொதுவாக பாச நாட கங்கள் என்றே இலக்கிய உலகம் ஏற்றுக் கொண்டது.

கம்பனுக்கு முந்திய கவிஞன் பாசன் என் பதில் ஐயமில்லை. பாசனின் நாடகங்கள் பதின் மூன்று கிடைத்துள்ளன. இராமாயணக் கதை யைத் தழுவிய நாடகங்கள் பிரதிமா நாடகமும், அபிஷேக நாடகமும் ஆகும். பாரதத்தைத் தழுவிய நாடகங்கள் பஞ்சராத்ரம், ஊரு பங்கம் முதலிய எட்டு நாடகங்கள். பிருகத் கதையை தழுவியவை சுவப்ன வாசவதத்தம் சாருதத்தம் முதலிய நான்கு நாடகங்கள்ஆகும்.

இந் நாடகங்கள் அனைத்தும் மிகச் சிறந்த நடையில் கவித்திறனுடன் மிளிர்கின்றன.

ஈண்டு, பாசனின் பிரதிமா நாடகத்தை மட்டும் கம்பனுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அதிலும் மூலக்கதையை மாற்றும் வகையில் கம்பனும் பாசனும் எப்படி ஒன்றுபடுகின்றனர் என்பதை மட்டும் காண்போம்:

பாசனின் கவிதையழகு, உவமைநயம், சொல்லாட்சி போன்றவை ஒப்பிட்டாய்தற்கு இவ் விடம் போதாமையின் அவற்றைத் தனியாக ஆய்வு செய்தல் வேண்டும். ஆதலின் பாத்திரப் படைப்பின் பண்பு நலக் கண்ணோட்டத்தோடு மட்டுமே இங்கு ஒப்பிட விரும்புகிறேம்

வான்மீகி இராமனை ஒரு மானுடக் கதா பாத்திரமாகவே சிருஷ்டித்தான். மேலும், மனி தனுக்கியல்பான மனச் சஞ்சலங்களைப் பிரதி பலிக்கும் வகையில் ஆதிகவியின் படைப் புள்ளது. ஆனுல், பாசன் இராமனை உயர்ந்த பண்புடைய மானுடனைச் சித்தரித்துள்ளான். ஆனுல், கம்பனோ இராமனைத் தெய்வமாகவே வழிபட்டுத் தனது பாத்திரப் படைப்பைச் செய்துள்ளான்.

தீயளாகக் கருதப்பட்ட கைகேயியைக் கூட வான்மீகத்திலிருந்து வேறுபட்டு பாசனும், கம்பனும் கைகேயியைத் தியாக சித்திரமாகவும் தெய்வமாகவும் சித்தரித்துள்ளனர்.

வான் மீகத்தில் கைகேயி மரவுரியைத் தானே தருகிருள்.

''அத சீராணி கைகேயீ
ஸ்வயமாஹ்ருத்ய ராகவம்
உவாச பரிதத்ஸ்வேதி
ஜநௌகே நிரபத்ரபா''

எனும் வால்மீகி ராமாயணம்-பால காண்டம் 37 வது சருக்கச் சுலோகம் இக்காட்சியை விளக்குகிறது.

ஆனல், பாசன் தனது 'பிரதிமா' நாடகத்தில் சீதையின் தோழி ஒருத்தி மரவுரியை விளையாட்டாக ஒருவளிடமிருந்து கவர்ந்து வருவதாகவும், வழியில் எதிர்ப்பட்ட சீதை அவளைக் கண்டு பேசுவதாகவும், சீதையும் விளையாட்டாக மரவுரி தரிப்பதாகவும், அதே சமயம் இராமனும் மரவுரியுடன் வந்து நிற்பதாகவும், அதன் பின் நிலைமையை உணர்ந்து கொண்ட சீதைக்கு அந்த உடையே பொருத்தமாக அமைவதாகவும் மாற்றியுள்ளான்.

ஆனல், கம்பன் மூலக்கதையை மாற்ருமலும், கைகேயி குணநலனுக்கு ஊறு நேராமலும் தோழியர் மூலம் மரவுரி கொடுத்தனுப்பியதாக மட்டுமே கூறுகிருன்.

''......... நுடங்கிடையார்
மாயாப் பழியான் தர
வற்கலை ஏந்தி வந்தார்'' என்றும்
''பேரா இடர்ப்பட்டு அயலார்
உறு பீழை கண்டும்
தீரா மனத்தாள், தர
'வந்தன சீரம்' என்ருர்'' என்றும்
கம்பன் கூறுகிருர்.

சீதையும்-
''அணைய வேலை அகமணை எய்தினள்
புனையும் சீரம் துணிந்து புனைந்தனள்''
என்று கூறுகிருன் கம்பன்.

வான் மீகத்தில் சீதை மரவுரி தரிக்கத் தெரியாமல் மயங்குவதாகவும் இராமனே உடுத்துவதாகவும் காண்கிரேம்.

''க்ருத்வா கண்டே ச ஸா
சீரமேகம் ஆதாய பாணினா
தஸ்தௌ. ஹ்யகுசலா ஸீதா தத்ர
வ்ரீடிதா ஜனகாத்மஜா''

... ...

'சீரம் பபந்த' ஸீதாயா:
கௌஸேய யஸ்யோபரி ஸ்வயம்''
என்பது வான்மீகி வாக்கு.

இக்காட்சியைக் கம்பனும் பாசனும் தத்தம் பாத்திரப் படைப்புக் கேற்ப மாற்றியுள்ளனர். கைகேயி இராமனைக் காட்டிற்கு அனுப்பியதற்கு மூல காரணம் தயரதன் புத்திர சோகத்தினுல் இறப்பான் என்ற சாப விருத்தாந்தம் தெரிந்து வசிஷ்டனின் அனுமதியுடன் கைகேயி பழியேற்றுத் தியாகம் புரிவதாகப் பாசன் மாற்றியுள்ளான்.

அப்படிக் காட்டுக்கு அனுப்பாவிட்டால் சாப நிமித்தமாக இராமன் இறக்கும்படி ஏற்பட்டு, அந்த சோகத்தால்தான் தயரதன் இறக்க நேரும் என்பது அறிந்து இராமனின் நலனில் அக்கரை உடைய கைகேயி இவ்விதம் பழி ஏற்று நாடக மாடியதாகப் பாசன் வெகு அற்புதமாகச் சித்தரித்துக் காட்டியுள்ளான். பிரதிமா நாடகம் - ஆருவது அங்கத்தில் சீதை இராவணனுல் கவரப்பட்ட செய்தி யறிந்து பரதன் மிகவும் வருந்தித் தாயிடம் வந்து தூற்றுகிருன்.

''ய: ஸ்வராஜ்யம் பரித்யஜ்ய
த்வன் னியோ காத் வனம் கத
தஸ்ய பார்யா: ஹ்ருதா ஸீதா
பர்யாப்தஸ்தே மனோரத''

''யார் தன்னுடைய அரசினை உன் கட்டளையால் நீத்து வனம் புக்கரோ அவருடைய மனைவி சீதை கவரப்பட்டாள். உன் மனோரதம் நிறைவேறியது'' என்று பரதன் கூறுகிருன். கைகேயி (ஆத்மகதம்)

''பவது! இதானீ கால:
கதயிதும் (ப்ரகாசம்)
ஜாத! த்வ ந ஜானாஸி
மகா ராஜஸ்ய சாபம்''

''கைகேயி- (தனக்குள்) இதைச் சொல்லும் காலம் ஆயிற்று: (வெளிப்படையாக) மகனே! மாமன்னனின் சாபத்தைப் பற்றி உனக்குத் தெரியாது''

என்று கூறி சுமந்திரன் மூலம் உண்மையைக் கூறுகிருள். சுமந்திரனே வசிஷ்ட வாம தேவருக்கும் தெரியும் என்று கூறுகிருன்.

இதன் மூலம் வான்மீகத்தில் பழிக்கப்பட்ட கைகேயிகூட பாசன் நோக்கில் குறையற்ற வளாகக் காட்டப்படுகிருள். கம்பன்- வான் மீகத்தில் உள்ள கன்யாசுல்க விருத்தாந் தத்தைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டி கைகே யியைக் குறையிலிருந்தும் நீக்க முயலுகின்ருன்.

பதினேழாம் நூற்ருண்டின் மக்கள் கவியாகிய வேமனு தெலுங்கில் பெரிய சீர்திருத்தக் கவிஞனுவான். வேமனு கூறுகிருன்.

> ''கனக ம்ருகமு புவினி
> கத்'து' லேதனலேக
> தருணி விடிசி போயெ தாசரதியு
> தெலிவி லேனி வாடு
> தேவுடெட்ளா யொா
> விஸ்வ தாபி ராம
> வினுர வேம.''

''பொன்மான் உலகில் உண்டில்லை என்று தெரியாமல் பெண்ணை விட்டுப் பிரிந்தான் தசரதராமன்; தேர்ந்த அறிவில்லாதவன் தெய்வம் எப்படி ஆனுன்?'' என்று வினவுகிருன் வேமனு!

இதே கேள்வி பாசன் மனத்திலும் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே உதித்துள்ளது. மாயமான் விருத்தாந்தத்தை வான்மீகி விரிவாக இயல்புபட வருணித்திருக்கிருர். ரகுவம்சத்தில் இராமனின் கதை மிக மிகச் சுருக்கமாகக் குழந்தைகளுக்குச் சொல்வது போலக் காளிதாசன் சொல்லிச் செல்கிருன்:

> ''ராக்ஷஸா ம்ருகரூபேண
> வஞ்சயித்வா ச ராகவௌ,
> ஜஹார ஸீதாம் பக்ஷீந்த்ர
> ப்ரயாச க்ஷண விக்னித:''

என்று ரகு வம்சம் பன்னிரண்டாம் சருக்கம் 43 ஆம் சுலோகம் ஒன்றிலேயே மாய மான் கதை, ஜடாயு போர் புரிந்து இறந்தது, இரா வணன் கவர்ந்து சென்றது ஆகிய கதை சொல்லப்படுவதிலிருந்து அதன் சுருக்கம் புரி யலாம். பிரசித்தமான கதையை ஞாபகப் படுத்துவதே நோக்க மன்றி, இராமன் கதையை வருணிப்பது காளி தாசனின் நோக்கமல்ல. இராமனுக்கு முந்திய அஜன், திலீபன் கதை களில்தான் அவனுக்கு நாட்டம் என்று காவி யத்தை வாசித்தால் புரிகிறது. ஆனுல், பாசன் மாய மான் கதையை ஆழ்ந்து சிந்தித்து ஒரு மாற்றம் செய்திருக்கிருன்.

கம்பன் மாய மான் கதையை மாற்றவில்லை. இலக்குவன் 'மாரீசன் என்னும் ராட்சசனின் மாயை' என்று வால்மீகி கூறுவதை ஏற்காமல் பொதுவாக மாயை என்று கூறுகிருன்

> ''மாயம் எனலன்றி
> மனக் கொளவே
> ஏயும்; இறை மெய்
> அல என்ற அளவே'

இராமன் இலக்குவன் கருத்தை மறுத்துரைக் கின்ருன்:

> நில்லா உலகின் நிலை நீர்மையினல்
> வல்லாருண ணர்ந்திலர் மன்னுயிர்காம்
> பல் ஆயிர கோடி பரந்துள வால்.
> இல்லாதன இல்லை-இளங் குமரா!

என்று கூறி, மாயமானைப் பின் தொடர்ந்து செல்கிருன். சீதையின் வற்புறுத்தல், அவள் பேச்சுக்கு மதிப்புத்தந்து தம்பியின் பேச்சை மதியாத தன்மை, ஆகிய இரண்டுமே இராமன் சீதையின் குணச்சித்திரத்திற்குப் பொருந்துவ தாக இல்லை என்று பாசன் கருதுகிருன். அதனுல் தன் கருத்துக்கேற்ப கதையை மாற்று கிருன். பஞ்சவடியில் சீதையும் இராமனும் இருக் கின்றனர்; இலக்குவன் சமித்துக்களைக் கொண ரச் சென்றிருக்கிருன். தந்தை தயரதனின் சிரார்த்த தினம் மறுநாள் வருகிறது. இராமன் தந்தைக்குச் சிறந்த வகையில் சிரார்த்தம் செய்ய இயலவில்லையே எனவருந்துகிருன். சீதை இரா மனிடம் பரதன் சிறந்த முறையில் நாட்டில் சிரார்த்தம் செய்வதால் வருந்த வேண்டாம் எனக்கூறுகிருள். அப்பொழுது இராவணன் துற வியாக வந்து அதிதி(விருந்தாளி) என்று தன்னை அறிமுகப் படுத்துகிருன். சிரார்த்தத்துக்கு அதிதி கிடைத்ததில் இராமனுக்கு மகிழ்ச்சி.

மாயத்துறவி விருந்தில் பொன்மான்கறி படைத்தல் சிறந்தது என்று கூறுகிருன்: வேத நெறிப்படி மனு ஸ்மிருதியிலும் சிரார்த்தத்தில் மான் கறி அனுமதிக்கப்பட்டிருப்பது கவனத்திற்குரியது.

அப்போது மாரீச மாய மான் அங்கு உலாவுகிறது. அதைக்கொணர இராமன் மான் பின் தொடர்கின்ருன். இராவணன் தன் சொருபத்துடன் வஞ்சகமாகச் சீதையைக் கவர்ந்து செல்கின்ருன்.

இந்த மாற்றத்தின் மூலம் சீதை இலக்குவனிடம் கூறிய கூறத்தகாத சொற்களைப்பற்றிய சீதையின் பண்புக்கு விரோதமான—செய்தியே இடம் பெறவில்லை. இலக்குவனுக்குத் தெரியாமலேயே சீதையைக் கவரும் சூழ்நிலை ஏற்படுகிறது. தந்தையை மதிக்கும் தனயனுகிய இராமனுடைய குணநலனுக்கேற்பப் பொன் மான் கொணரச் செல்கிற காட்சியும், விருந்தினரை மதிக்க வேண்டும் எனும் சீதையின் குண நலனுக்கேற்பவும் பாசனின் கதை மாற்றம் நிகழ்ந்திருப்பது ரசிகர்கட்குச் சுவையூட்டுவதாக அமைந்துள்ளது.

கம்பன் சீதையைக் குடிலுடன் கவர்ந்து சென்றதாகக் கூறுகிருன். வான்மீகி தொட்டிழுத்துச் சென்றதாக சாதாரணப் பெண்ணைப் போலக் கூறியிருப்பதைக் கம்பன் மாற்றியது சுவையூட்டுகிறது. அத்யாத்ம ராமாயணப்படி துளசியும், எழுத்தச்சனும் மாயா சீதைக் கதையைப் படைத்துக் கற்பின் கனலிக்குப் புதுப் பொலிவூட்டியுள்ளனர். ஆனுல், பாசன் கவர்ந்து சென்ருன் என்று கூறுகின்ருனே தவிர எவ்விதம் என்று கூருமல் சாதுரியமாக நழுவி விடுகிருன்.

கம்பனும் பாசனும் குணசித்திரப் பாத்திரப் படைப்புக் கேற்ப தம் கதைகளைச் சிறிது மாற்றியுள்ளனர். கம்பன் வான்மீகியைத் தழுவியே செல்ல முயல்கின்ருன் என்பது தெளிவு. பாசனே வான்மீகியையும் மீறி நாடக உத்தியை நோக்கியும், பாத்திரப் படைப்பில் மெருகேற்றிச் சுவையூட்டுவதற்காகவும் சுதந்திரமாக மாற்றியிருக்கின்ருன். கம்பனுக்கு முன்னோடியாகப் பாசன் இருந்து கதை மாற்றத்திற்கு உதவியிருக்கிருன் என்பது கருதத்தக்கது. கம்பன் காளிதாசனைக் கற்றவனுதலின் பாசனைப் பற்றியும் தெரிந்திருக்கும் என்று கொள்வதில் தவறில்லை

கம்பன் புதிதாகப் புகுத்திய செய்திகளும் உண்டு. இராவணனின் மந்திராலோசனையில் வீடணன்- இரணியன் வதைக் கதையை எடுத்துக் கூறுவதாக அமைத்திருப்பது சுவை பயப்பதாகவும், பொருத்தமுடனும் அமைந்துள்ளது. ஆனுல், வான்மீகத்திலில்லாதபடி மாயா சனகப் படலம் அமைத்து, சனகன் தன் மகளை இராவணனுடன் இணையுமாறு கூறுவதாக அமைத்திருப்பது அத்துணைப் பொருத்தமாக இல்லை; ரசாபாசமாக அமைந்துள்ளது. மாயா சீதையை வதம் செய்த காட்சிபோல மாயா ராமனை வதை செய்ததாகக் காட்டியிருந்தாலும் சிறிது பொருந்தும். அவ்வாறின்றி மாயாசனகப் படலம் அமைத்திருப்பது திறனுய்வு நோக்கில் குறைபாடுடையதாகவே காணப்படுகிறது.

பாசன் தனது அபிஷேக நாடகத்தில். சீதையின் மனத்தை மாற்றுவதற்காக இராம இலக்குவணர்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் தலையைக் காட்டுவதாக ஒரு காட்சி அமைக்கின்ருன்.

இராவணன் ''ஸீதே! பஸ்ய பஸ்ய தயோ மானுஷயோர் ஸிரஸீ'' ''(சீதையே! பார்! பார்! அந்த மனிதர்களின் தலைகள்)'' என்று கூறுவதாக அமைத்துள்ளான்.

வான்மீகி யுத்த காண்டம் 64வது சருக்கத்தில் மகோதரன் இராமலக்குவணர்கள், இராக்கதரால் கொல்லப்பட்டு விட்டதாகக் கூறச் செய்ய வேண்டும் என்றும், அதனுல் சீதை மனம் மாறி எளிதில் வசப்படுவாள் என்றும் யோசனை கூறுவதாக அமைத்துள்ளான்

''ததோ அவகோஷய புரே
கஜஸ் கந்தேன பார்த்திய

ஹ தோ ராம: ஸஹ ப்ராத்ரா
ஸ சைன்ய இதி ஸர்வத:''
... ...
அகாமா த்வத்வசம் ஸீதா
நஷ்டநாதா கமிஷ்யதி
ரஞ்ஜனீயம் ஹி பர்த்தாரம்
விநஷ்டம் அவகம்ய ஸா
நைராஸ்யாத் ஸ்த்ரீ லகுத்வாச்ச
த்வத் வசம் ப்ரதி பத்ஸ்யதே.

வான்மீகி யோசனையாகக் கூறிய செய்தியை பாசன் நாடகப் பாங்கில் நடத்திக் காட்டி- கருணைச் சுவையை மிகுவிக்கின்றான்.

வான்மீகத்திலிருந்து முரண் பட்டாலும் பாசனும் கம்பனும் இராமனையும், சீதையையும் மிகச்சிறந்த மேன்மையுடைய குணநலன்களோடு சித்தரித்து பாத்திரப் படைப்பில் தமக்குள்ள செய் நேர்த்தியை விளக்கிக் காட்டுகின்றனர்.

கம்பன் காவிய நோக்கில் அமைக்கும்போதும் தழுவலாக அமைந்த காவிய மிகையாலும் மூலக் கதைக்கு அடியொற்றிச் செல்ல முயலு கிறான் என்றும், ஆனால் பாசன் சுதந்திர மாக நாடகங்களை அமைத்ததனால் தன் விருப்பப் படியே பாத்திரப் படைப்புக்கு மெருகூட்டிப் பொருத்தமாக அமையும் வகையில் வான்மீகி யிலிருந்து விலகிச் சென்று தன் படைப்புத் திறனைக் காட்டியுள்ளான் என்றும் தெரிகிறது.

ஒப்பீட்டாய்வில் பாசனையும், கம்பனையும் மூலக்கதையை மாற்றி அமைக்கும் உத்தியில் மட்டுமே நாம் பார்த்தோம். இது போலவே பிற நயங்களையும் ஒப்பீட்டாய்வு செய்து பார்ப்பது சுவைஞர்கட்குப் பெருவிருந்தாய் அமையும். அத்தகு முயற்சிகள் அறிஞர்கள் அதிகம் செய்ய வேண்டும்.

"விண்ணளவத் தமிழ் வளர்த்தோன்"

திரு. மா. வரதராஜன்

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
  திருமேனி வீழ்த்தி வாகைக்
கள்ளிருக்குந் தாரணியுங் காளைபெருங்
  காதையினைக் கவிதை யாக்கி
உள்ளுவந்து பயில்பவர்தம் ஊன்சிலிர்க்க
  உடல்சிலிர்க்க உயிர்ப்புக் கூட்டி
கொள்ளநமக் கூட்டியவக் குரிசிலினை
  கம்பனெனக் கூறுகின்றேம்.

இவ்வுலகம் உள்ளளவும் இயலிசையில்
  நாடகத்தில் இனிமை கூட்டும்
செவ்விநறுஞ் செந்தமிழின் சீர்த்திகளும்
  பரம்பொருளின் சிறப்பும் உள்ள
அவ்வரையில் கம்பனெனும் அம்புவியின்
  கவிதையும் ஆன ஒன்றே
செவ்வயிலுன் காப்பியமும் சீருடையுன்
  திருப்பெயரும் சிறக்கும் உண்மை.

விண்ணொளிறுந் தாரகையுள் வீசுமெழிற்
  றண்மதியம் வேந்தென் றேற்கும்
வண்ணமிந்த புவியிடையே வாய்ந்தபலர்
  பேசுமொழி வகையிலுற்ற
மண்ணகத்து மாந்தரெல்லாம் மண்டியிட்டுக்
  கைகூப்பி மகிழ்ந்து போற்றும்
கண்ணனைய கவிதைகளால் விண்ணளவத்
  தமிழ் வளர்த்தான் கம்பநாடன்.

பாற்கடலின் நடுவிலொரு பாம்பணையிற்
  துயில்பவனின் பண்டைக் காதை
போற்றலுறும் பொற்பினதே புவியிடையி
  லெனினுமதிற் புதுமை கூட்டி
நோற்றவருங் கண்டறியா நுண்மையெலாந்
  தண்டமிழால் நுழைத்துக் காட்டி
ஏற்றமுறச் செந்தமிழில் இன்பமிகப்
  புரிந்தவன்நம் ஏந்தல் அம்மா

ஆயத்த ரகசியங்கள்

திரு. ம. வே. பசுபதி

'அமைதியான உலகம்; ஆனந்தமான வாழ்க்கை' இது ஜீவர்களின் லட்சியம்! இந்த லட்சிய ஈடேற்றம் பலருக்கு வினாக்குறியாகவும், சிலருக்கு வியப்புக் குறியாகவும் அமைவதை நாம் பார்க்கிறோம்!

அமைதியை மனித மனம் விரும்பும் அதே நேரத்தில் அவன் அந்தராத்மாவிலிருந்து கூடப் போர்க்குரல் ஒலிக்கத்தான் செய்கிறது!

'போர் ஒடுங்கின் புகழ் ஒடுங்காது; போர் ஒடுங்காவிடில் புகழ் ஒடுங்கும்!'

சாந்தம், சமாதானம், சத்தியம், சமதர்மம் ஆகியவைகளை ஸ்தாபிக்க எடுத்த அவதாரமே இராமாவதாரம்! ஆனாலும் இராமன் கடுஞ் சமர்கள் பல கண்டான்!

நாம் இராமாயணத்தை வீரகாவியம் என்கிறோம். இராமாய்ணம் யுத்த காவியம் அல்ல என்பதே அதன் பொருளாகும்! வீரம் எல்லா நேரங்களிலும் புருஷ லட்சணமாகும்; யுத்தம் சிலருக்குச் சில நேரங்களில் மட்டுமே லட்சணமாகும்!

வீரம், யுத்தம் இரண்டும் குணங்களே. போர்க் குணம் என்பார்கள். வீரம் அழகானது. யுத்தம் கொடூரமானது.

ஆனால் நம் கவிச்சக்கரவர்த்தி கம்பன் யுத்தத்தை அச்சத்திலிருந்தும், கொடூரத்திலிருந்தும் மீட்டு அழகு படுத்தினான். அவனின் விரலசைவில் நிகழ்ந்த யுத்த மரணங்கள் அருவருப்பையும், ஆயாசத்தையும் கொடுப்பதற்குப் பதிலாக விஸ்ராந்தியையும், விடுதலை உணர்வையும் நல்கின.

பால காண்டத்திலேயே யுத்த ஆலாபனை பண்ணிய அந்த மகாகவி சுந்தர காண்டத்தில் பண்ணிய சில ஆயத்தங்கள் மிக முக்கியமானவையாகும்!

சுந்தர காண்டத்தின் கதை நிகழ்வைப் பற்றி நான் பேச வரவில்லை. கல்யாண விருந்துக்கு வாங்க வேண்டிய சரக்குகளைப் பட்டியல் போட்டதைப் போல யுத்தக் கருவிகளை அங்கங்கே அவன் பட்டியல் போடும் இடங்களை நாம் அலட்சியமாகப் பார்க்கக் கூடாது. காவிய விஸ்தாரங்களாகக் கருதி அவற்றைக் கடந்து சென்றுவிடக் கூடாது.

கம்பனில் சில வித்தியாசமான அடுக்குகள் உள்ளன. அவைப் புலமைக் கம்பீரயத்தின் ஊசிப் பட்டாசுகள்.

"வெகுண்டனர் வியந்தனர்
விழுந்தனர் எழுந்தார்
மருண்டனர் மயங்கினர்
மறிந்தனர் இறந்தார்
உருண்டனர் உலைந்தனர்
உறைந்தனர் பிழைத்தார்
சுருண்டனர் புரண்டனர்
தொலைந்தனர் மலைந்தார்

இந்தப் பாடலெல்லாம் விஸ்தாரக் கவியின் நெளிவு சுளிவுகள்! இவை சின்னச் சின்ன வித்தியாசமுள்ள சொற்களை அடுக்கிக் காட்டும் ஜாலங்கள்! அவன் கஷ்டப் பட்டுக் கட்டிய எட்டடுக்கு மாளிகைகள் அல்ல இவை. தரையில் கீறிய கீறல்கள் தாம்!

மகாகவிகளுக்கெல்லாம் நேரின மணியை நிரல்பட வைக்கும் இந்தப் பழக்கம்-அடுக்கியடுக்கிச் சொல்லி வியப்பிலாழ்த்தும் அற்புதமுண்டு.

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்,

செம்பொனடிச் சிறு கிங்கிணி
யோடு சிலம்பு கலந்தாட

திருவரை அரைஞாண் அரைமணி
யொடு மொளிர் திகழறைவடமாட
பைம்பொனசும்பிய தொந்தியொடு
சிறு பண்டி செறிந்தாட
பட்டநுதற்பொலி பொட்டொடு
வட்டச் சுட்டி பதிந்தாட
கம்பி விதம் பொதி குண்டலமும்
குழை காது மசைந்தாட
கட்டிய சூழியும் உச்சியும் உச்சிக்
கதிர்முத் தொடு மாட

என்று அணிகலன்களின் பட்டியலை அடுக்கினார். கம்பன் பறவைகளின் பெயர்களை அடுக்குகிறான்.

''உன்னம், நாரை, மகன்றில்,
புதா, உவில்,
அன்னம், கோழி வண்டானங்கள்
ஆழிப்புள்,
சின்னரம், குரண்டம்,
கிலுக்கம், சிரல்,
சென்னம், காகம்
குணாலம், சிலம்புமே,''

இந்தக் கவி விருத்தத்தில் பதினேழு பறவைகள் பிடித்து வைக்கப்பட்டுள்ளன.

இதோ நம் கவிச் சக்கரவர்த்தி யுத்தக் கருவிகளை அடுக்குகிறான்:-

''சூலம், மழு, வாளொடு, அயில்,
தோமரம், உலக்கை
கால வரி வில், பகழி,
கப்பணம், முசுண்டி,
கோல், கணையம், நேமி, குலிசம்
சுரிகை குந்தம்
பாலம்முதல் ஆயுதம்
வலத்தினர் பரித்தார்''
''அங்குசம், நெடுங்கவண்,
அடுத்துஉடல் விசிக்கும்
வெங்குசைய பாசம் முதல்
வெய்யபயில் கையர்''
''வேல்வாள், சூலம், வெங்கதை
பாசம், விளிசங்கம்
கோல்வாள் சாபம்
கொண்ட கரத்தார்''
''தோமரம் உலக்கை கூர்வாள்,
சுடர்மழு, குலிசம் தோட்டி
தாம்அரம் தின்ற கூர்வேல்,
தழல்ஒளிவட்டம், சரபம்
காமர்தண்டு, எழுக்கள், காந்தும்
கப்பணம் காலபாசம்
மாமரம், வலயம், வெங்கோல்,
முதலிய வயங்க மாதோ''

இப்பாடல்களிலும் இன்னும் சில பாடல்களிலும் படைக்கலன்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறான் நம் கவிச்சக்கரவர்த்தி. இது ஒரு ஆயத்தம். முன்னே கண்ட அடுக்கல்களுக்கும் இதற்கும் அநேக வித்தியாசங்கள் உள்ளன. இந்தப் பட்டியல் யுத்தத்தை வெளிப்படுத்தாமல் நெறிப்படுத்துகிறது: இந்தப் பாடல்களில்,

1. சூலம் 2. மழு 3. வாள் 4. அயில்வேல் 5. தோமரம் 6. உலக்கை 7. வில் 8: பகழி 9. கப்பணம் 10. முசுண்டி 11. கோல் 12. கணயம் 13. அம்பு 14. நேமி 15. குலிசம் 16. சுரிகை 17. குந்தம் 18. பாலம் 19. அங்குசம் 20. கவண் 21. பாசம் 22. கதை 23. சங்கம் 24. தோட்டி 25. தழல்வட்டம் 26. தண்டு 27. எழு 28. மரம் 29. வலயம் 30. கழு (சங்கம் ஆயுதம் அன்றெனினும் யுத்த கருவிகளின் பட்டியலிலே உள்ளதை நோக்க வேண்டும்.)

இந்த முப்பது கருவிகளுக்கும் படம் போட்டுப் பார்த்தால் தான் கம்பனின் புடம் போட்ட சிந்தனைபுரியும்.

முப்பது கருவிகளாலும் போர்த் தொழில் புரிய வல்லவர்கள் சுந்தர காண்டத்தில் அனுமனை எதிர்க்கிறார்கள். அது சமர். சமத்துவம் உள்ளவர்களிடைமே சமர் நடக்கும். அப்படியானால் அனுமானுக்கும் அந்த முப்பது கருவிகளாலும் போர் செய்யத் தெரியும்!

சுந்தர காண்டத்தில் அனுமான் இராமனுக்குத் துணையாக மட்டுமல்ல; இணையாகக் கூட ஆயத்தப்படுத்தப்படுகிறான். அதனால்தான் தாடகையை வதம்புரிந்த இராமனின் அதே தோற்றம், வசனம் இலங்காதேவியை எதிர்த்த அனுமானிடமும் அளிக்கப்படுகிறது.

தாடகையை வதம் புரியும் முன்பு இராமன் 'இவள் பெண்ணாயிற்றே, வதம் புரியலாமா?' என்று கவலை அடைந்ததுண்டு. இராமகாதை,

மாதரைக் கோறலும் மடந்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூயதன்று!

என்பதை ஏதுவிற் சிறந்தன கூறி எடுத்துக் காட்டும் மாதரார் எனையரேனும் வதையினுக்கு உரியரல்லர்' என்று யசோதர காவியம் பேசும். மாதரைக் கொல்லலாகாது என்பது உலகுடன் பட்டதர்மமாகும். சில தர்ம சாஸ்திரங்களில் உள்ளவை நியாய சாஸ்திரங்களில் இல்லாமற் போவதுண்டு. இந்தத் தர்மம் நியாய சாஸ்திர நூல்களிலும் அதிகம் சிதறுண்டு போகாத விஷயமாகும்.

தாடகை வதத்தில் இராமன் கருதிய அதே கருத்தை, இலங்கைமாதேவியை மண்ணிடை வீழ்த்தும் முன் அனுமான் கருதுகிறான்:-

''அடியா மின்னம் அம்கை
அனைத்தும் ஒருகையால்
பிடியா' என்னே? பெண் இவள்
கொல்லின் பிழை என்னா
ஒடியா நெஞ்சத்து ஓர் அடி
கொண்டான், உயிரோடும்,
இடி ஏறு உண்ட மால் வரைபோல்,
மண்ணிடை - வீழ்ந்தாள்''

தாடகையால் இராமன் நேரிடையாகப் பாதிக்கப் படவில்லை, அனுமனின் குறிக்கோள் பயணத்திற்கு இலங்கை மாதேவி குறுக்கே நின்றாள்.

இஃது ஓர் ஆயத்தம். இந்த ஆயத்தம் இராமனுக்கு ஒத்த நிலைக்கே அனுமனைக் கொண்டுவந்து இராம இராவண யுத்தத்தின் சூத்ரதாரியாகவே அவனை ஆக்குகிறது. இந்த இரகசியத்தை ஒட்டியே நம் கவிச் சக்கரவர்த்தி கம்பன் ''அறம் வெல்லும்; பாவம் தோற்கும்;'' என்னும் தீர்ப்புரையை இங்கே எழுதுகிறான்.

இராமன் குகப் பெருமான் அளித்த தேனும், மீனும் ஆகிய உணவை 'உண்டனம் ஆகும்' என்றதைப் போலவே, சுந்தர காண்டத்துள், மைந்நாகம் மானுட வடிவில் தோன்றி. விருந் துண்ணக என அனுமனை வேண்டும்போது, 'நின் அன்பு பிணித்த போதே இருந்தேன் நுகர்ந்தேன்' என்கிறான்.

குகன் கொடுத்த உணவு இராமனுக்குப் பொருந்தாத உணவு. மைந்நாகம் கொடுத்த உணவு பொருந்தாத நேரத்தில் கொடுக்கப் பெற்ற உணவு. ''என் ஆசை நிரப்பியல்லால் அருந்தேன் இனியாதும்' என்பான் அனுமன்.

இங்கே அவன் ஆசை என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லவில்லை. சீதையைக் கண்டு: வருதலா? கொண்டு வருதலா? இதை நம் அனுமானத்திற்கே விட்டு விடுகிறான்.

ஈண்டே கடிது ஏகி,
இலங்கை விலங்கல் எய்தி
ஆண்டான் அடிமைத் தொழில்
ஆற்றி என்ஆற்றல் கொண்டே
மீண்டால் நுகர்வென் நின்
விருந்து என்கிறான்

இங்கே அவன் ஆற்றல் என்று எதைக் குறிப்பிடுகிறான், என்பது தெளிவானால் சீதையைத் 'தோளில் ஏறிக்கொள்; இராமன் இடம் சேர்க்கிறேன்' எனப் பின்னே சொல் வதின் நயம்புரியும். ஒருவேளை இராவணனைக் கொன்று தேவியை மீட்பது என்பது இவன் ஆசையா? என்று ஐயப்படலாம். ஆனால் அதுவுமன்று. 'ஒன்று ஊக்கி ஒன்றிழைத்தல் உணர்வு உடைமைக்கு உரித்து அன்றால்' என்று இவனே பேசுவான்.

ஆக தேவியைக் காண்டல் மட்டிலுமே இவனின் அப்போதைய ஆசை.

'பெருந்தேன் பிழி சாலும்' என்ற அனுமனின் உரை குகனிடம் இராமன் கூறியதற்குப் பெரிதும் ஒத்தது. 'இருந்தேன் நுகர்ந்தேன்' என்பது ஒப்புமை, 'உண்டெனம் ஆகும்' என்ற இராமன் உரையுடன் ஒத்தது.

இந்த ஆயத்தமும் மனோரீதியாக இராமனுக்கு ஒத்த தெய்விகத்தை அனுமனுக்குக் காட்டுவதாகும்.

இப்படிச் சில ஆயத்தங்களால் பின்னர் நிகழவிருக்கும் பெரும் போரைக் கொண்டு செலுத்தும் அநுமதியைக் கம்பன் அனுமனிடம் அளிக்கிறான்.

பாதிக்கப்பட்ட இராமனின் சார்பில் இராமனையும் பணிகொண்டு-அனுமனே இப்போரைக் கொண்டு செலுத்தினான். அதற்குப் பொருத்தமுள்ளவனாக அனுமனை அடையாளம் காட்டும் ஆயத்தங்கள் சுந்தர காண்டத்துள் உள்ளன. இவ்வகையிலும் சுந்தரன் அனுமனேயாகிறான்.

கற்புடைப் பெண்டிரும் பிறர்நெஞ்சு புகாமையும்

'சித்தாந்த வித்தகர்' திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார்

ஒரு பெண் தன் கணவன் அல்லாத வேறு யாரையும் தன் மனத்தாலும் இச்சிக்காமல் இருப்பதே கற்புடைமையாகும். ஆனல் மணிமேகலைக் காவியமோ கற்புடைமைக்குப் புதியதோர் இலக்கணம் வகுத்துள்ளது.

''மண்திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிராயின் பிறர்நெஞ்சு புகார்'' —

என்பது அது கூறும் கற்பிலக்கணமாகும்.

தன் அளவில் ஒருத்தி பிறரை இச்சிக்காமல் இருப்பது மட்டும் முழுமையான கற்புடைமை ஆகாது. பிறஆடவரும் அவளைத் தன் மனத்தால் கூட இச்சிக்காமல் இருக்கவேண்டும். அதுதான் முழுமையான கற்புடைமை யாகும். கற்புடைய பெண்டிர் பிறர் நெஞ்சு புகார். புகுந்தால் அது அவர் கற்புக்கு இழுக்காகும். இவ்வாறு மணிமேகலை கற்பிலக்கணத்தை வரையறை செய்திருக்கிறது.

தன் அளவில் ஒரு பெண் தூய்மையாக இருக்கலாம்; இருக்க முடியும். ஆனல் அவளைப் பிறன் கண்டு மோகித்தால்- அதற்கு அவள் என்ன செய்ய மாட்டுவள்? அவள் கற்புக்கு அது இழுக்கு என்பது எவ்வாறு பொருந்தும்? என வினவலாம்.

கற்பும் ஒரு வகைத் தவமேயாகும். அத்தவ வலிமை காரணமாகக் கற்புடைப் பெண்டிர் முகத்தில் ஒரு தெய்வீக ஒளி வீசும். அவ்வொளி எத்தகைய இழிந்தவன் உள்ளத்திலும் காம உணர்வு தோன்ருதவாறு தடுத்துவிடும். அவளை அவன் தெய்வமாகவே காண்பான். அந்த அடிப்படையில்தான் மணிமேகலை கற்பிலக்கணத்தை வரையறை செய்திருக்கிறது

கம்பன் மணிமேகலைக் கருத்தை முழுதும் உடன்பட்டிருக்கிருன் என்பது ''கோலங்காண்'' படலத்தில் அவன் பாடி உள்ள ஒரு பாடலால் புலனுகிறது. மணிமேகலைத் தத்துவம் தமிழ்ப் பண்பாட்டின் உச்சநிலைக் கருத்தாக விளங்குவதால், அது கம்பனை ஈர்த்திருக்கிறது. மணிமேகலை பௌத்த சமயத்தைப் பரப்பும் நூலாக இருப்பினும் அது சீரிய செந்தமிழ் இலக்கியமாகும். தமிழையே மூலமாகக் கொண்டு தோன்றிய நூலாதலால் அதில் சொல்லப்படும் தத்துவம் தமிழ்ப் பண்பாட்டைச் சார்ந்தது என்பதைக் கூற வேண்டுவதில்லை. உலகில் உள்ள எந்த மொழி இலக்கியத்திலும் இந்த மாதிரியான ஒரு கருத்து இடம் பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

சீதா பிராட்டியாருக்குத் திருமணம் நிகழ இருக்கிறது. திருமணம் காண அயோத்தியிலிருந்து தசரதனை உள்ளிட்ட ஏராளமான மக்கள் திரண்டு வந்திருக்கின்றனர்; பெண்ணை அழைத்து வந்து அவையோருக்குக் காட்டுமாறு வசிட்ட முனிவர் பணிக்கின்ருர். மக்கள் அனைவரும் பேரழகு வாய்ந்த பிராட்டியாரைக் காண ஆவலோடு காத்திருக்கின்றனர். தோழிமார் சீதையை அலங்காரம் செய்து கூட்டிவருகின்றனர். சீதா பிராட்டியார் திருமண மண்டபத்தில் தோன்றுகிருள். அப்பொழுது

''நைவளம் நவிற்றுமொழி நண்ணவர லோடும்
வையம் நுகர்கொற்றவனும் மாதவரும் அல்லால்
கைகள் தலைபுக்கன; கருத்துளதும் எல்லாம்
தெய்வம்என உற்ற;உடல் சிந்தை வசம்அன்ருே''

எனக் கம்பன் பாடுகிருன்.

''மாமனுராகிய தசரதனும் குருமார்களாகிய முனிவர்களும் தவிர அங்குக் குழுமியிருந்த மக்கள் அனைவரும் சீதாபிராட்டியாரைத் தெய்வமெனக் கைகூப்பித் தொழுதனர்'' என்பது இப்பாடலின் பொருளாகும். இதிலிருந்து சீதா பிராட்டியாரின் அழகு தெய்வீக உணர்வையே அனைவர் உள்ளத்திலும் தோற்றுவித்திருக்கிறது என்பது புலனுகிறது. மணிமேகலைக் கருத்தையே

இப்பாடல் வாயிலாகக் கம்பன் உடன்பட்டு விளக்கம் செய்திருக்கிறான் என்பது தெளிவு.

மணிமேகலைக் கருத்தை மேலே கண்டவாறு உடன்பட்டு விளக்கம் செய்த கம்பன் பின்னே வரும் சிக்கலை எவ்வாறு விடுவிக்கப் போகிறான்? என்பதுதான் சிந்தனைக்குரியது. இராவணன் நெஞ்சில் சீதை இடம் பெறுகிறாள். அவன் அவளை மோகித்துத்தான் தூக்கிச்செல்கிறான். தெய்வீக ஒளிவீசும் திருமுகத்தை உடைய பிராட்டியார் இராவணன் இதயத்தில் எவ்வாறு புகுந்தாள்? மணிமேகலைக் கருத்துப்படி பார்த்தால் இஃது அவள் கற்புக்குப் பேரிழுக்காக முடிகிறதே? என்பன போன்ற ஐயப்பாடுகள் நம் உள்ளத்தில் எழுவது இயற்கை.

இராமாயணத்தில் கம்பன் எத்தனையோ மாறுதல்களைச் செய்திருக்கிறான். இராவணன் சீதாபிராட்டியாரைத் தீண்டித் தூக்கிச் சென்றான் என வான்மீகம் கூறுகிறது. அதனை மாற்றிப் பர்ணசாலையோடு அவளைத் தூக்கிச் சென்றான் என்று கம்பன் பாடுகிறான். அதுபோல இங்கே நிகழ்ச்சியை மாற்ற முடியாது. இராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற நிகழ்ச்சிதான் இராமாயணத்தின் உயிர் நாடியான பகுதியாகும். அதனை மாற்றினால் அப்புறம் இராமாயணமே நடக்காது. மாற்றாவிட்டால் மணிமேகலைக் கருத்து இடிக்கும். பாவம்! கம்பன் என்ன செய்வான்? சீதை—இராவணன் விவகாரத்தில் கதையை மாற்ற முடியா விட்டாலும் மணிமேகலைக் கருத்தைக் காப்பாற்றுவதற்காகக் கம்பன் காவிய உத்திகள் பலவற்றைக் கையாண்டு நிலைமையைச் சமாளித்திருக்கிறான். அவை இலக்கியம் கற்போருக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளன.

சூர்ப்பணகை காதும், மூக்கும் அறுபட்ட பின்னர் கரதூஷணர்களிடம் சென்று முறையிட அவர்கள் வந்து இராமரோடு போரிட்டு மடிகிறார்கள்; அதன்பின் ''அகம்பன்'' என்பவன் இலங்கை சென்று இராவணனிடம் விவரங்களைத் தெரிவிக்கிறான். அவன்தான் முதன்முதல் சீதாபிராட்டியாரைப் பற்றி இராவணனிடம் சொன்னவன் என்று வான்மீகம் பேசுகிறது. ஆனால், கம்பனோ அகம்பன் கரனுக்கு அறிவுரை கூறுகிறான் எனச் சொல்கிறானே அன்றி அவன் இலங்கை சென்று இராவணனைக் கண்டான் என்று கூறவில்லை. அகம்பன் ஆண்மகனாக இருப்பதால் அவன் சீதையின் அழகுபற்றி வர்ணிப்பது தகாது என்று கருதியே கம்பன் இப்பகுதியைச் சொல்லாமல் விட்டிருக்கிறான்.

கம்பராமாயணத்தின்படி சீதையைப் பற்றி இராவணனிடம் முதன்முதல் சொன்னவள் சூர்ப்பணகைதான். சீதாபிராட்டியாரின் அங்க அடையாளங்களை அபாரமாகச் சூர்ப்பணகை இராவணனிடம் விவரிக்கிறாள். பிராட்டியாரின் அழகைப் பற்றி அவள் சொல்லச்சொல்ல இராவணன் மனதில் ஒரு கற்பனைச் சீதை உதயமாகி விடுகிறாள். தங்கை உருவாக்கித் தந்த நங்கையைத்தான் இராவணன் மனச்சிறையில் வைக்கிறான். சீதாபிராட்டியாரைப் பாராமலே அவன் சூர்ப்பணகை சொன்ன வடிவை மனத்தில் உருவாக்கிக் கொண்டு மோக வயப்படுகிறான்!

''மயிலுடைச் சாயலாளை
வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்,
இதயம் ஆம் சிறையில் வைத்தான்;
அயிலுடை அரக்கன் உள்ளம்,
அவ்வழி, மெல்லமெல்ல,
வெயிலுடை நாளில் உற்ற
வெண்ணெய்போல் வெதும்பிற்று அன்றே,

''சீதா பிராட்டியாரை வஞ்சிப்பதற்கு முன்னமேயே இராவணன் சூர்ப்பணகை உருவாக்கிய சீதையை மனத்தில் வைத்து உருகலானான்'' என்பது இப்பாடலின் பொருளாகும்.

கற்புடைப் பெண்டிரை நேராகப் பார்த்தால் அவர் முகத்தில் வீசும் தெய்வீக ஒளி காம உணர்வை அழித்து விடும் என்னும் மணிமேகலைக் கருத்தை மனத்தில் கொண்டே இராவணன் அவன் தங்கை உருவாக்கித் தந்த நங்கை இடத்தேதான் மோகமுற்றான் என்று கம்பன் இவ்விடத்தில் தெளிவு செய்கிறான். சூர்ப்பணகை சீதையிடத்தே வெறுப்புற்றவளாதலால் அவள் முகத்தில் வீசும் தெய்வீக ஒளியைப் பற்றி இராவணனிடம் ஒன்றும் சொல்லவில்லை. இதனால் அவள் வடித்துக்

கொடுத்த வடிவம் சரியானதன்று என்பது தானே போதரும்.

இதுசரி; பர்ணசாலையில் சீதையை நேரடியாகத்தானே இராவணன் பார்க்கிறன்? அப்பொழுது அந்தத் தெய்வீக ஒளி ஏன் அவன் உள்ளத்தில் தோன்றிய காமஉணர்வை அழிக்கவில்லை என்று கேட்கலாம். இதற்காகவே மேலும் சில நிகழ்ச்சிகளைக் கம்பன் கூறத் தொடங்குகிறன்.

ஒரு தலைவனே, தலைவியோ ஒருவரை ஒருவர் சந்தித்த பிற்பாடுதான் விரக வேதனைப் படுவார்கள். தமிழில் உள்ள எல்லாக் காவியங்களிலும் தலைவன்—தலைவி சந்தித்த பிற்பாடுதான் விரகவேதனைப் படலம் துவங்கும். இங்கே கம்பன் ஒரு புரட்சி செய்கிறன். இராவணன் சீதையைப் பார்க்காத நிலையிலேயே விரக வேதனைப் படுவதாகக் கூறுகிறன்.

''சந்திரனைப் பழிக்கிறன்'' என்றும், ''இரவைப் பழிக்கின்றன்'' என்றும், ''தென்றலைச் சீறுகின்றன்'' என்றும் இராவணன் படும் விரக வேதனையைக் கம்பன் பலபாடல்கள் மூலம் விவரிக்கிறன். காம வேகம்,

''நூக்கல் ஆகலாத காதல்
நூறுநூறு கோடியாய்ப் பூக்கப்''

படுக்கையில் நெளிந்த வண்ணம் இராவணன் கிடக்கிறன்.

திடீரென அந்த நள்ளிரவில் சீதை அவனுக்கு நேராகத் தோன்றுவதைக் காண்கின்றன். இதனைத்தான் ''உருவெளித் தோற்றம் என்று நூற்கள் பேசும். சீதை காட்சி பட்டவுடன் இராவணன் சூர்ப்பணகையை அழைத்து, ''இவள் சீதையா?'' என வினவுகிறன். ''இவன் இராமன்'' என அவள் விடைகூறுகிறள்.

இராவணன் சீதைபால் மயங்கிக்கிடந்தமையால் அவன் கண்ட உருவைச் ''சீதை'' என்கிறன். சூர்ப்பணகை இராமன் பால் மயங்கிக் கிடந்தமையால் அவ்வுரு ''இராமன்'' என்கிறள். இது ஒருபுறம் இருக்கட்டும். ''உருவெளித் தோற்றம் என்றல் என்ன? என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும்.

கனவு நிலையை உருவெளித்தோற்றம் என்று சொல்வது பிழையாகும். கனவாக இருந்தால் சூர்ப்பணகையை அவன் அழைத்தவுடன் அது நீங்கிப் போயிருக்கும். உருவெளித் தோற்றம் என்பது ஒரு வகை ''அறிதுயில்'' நிலையாகும். இதனை ஆங்கிலத்தில் ''HYPNOTIC SLEEP'' என்று கூறுவார்கள். பிறரும் நம்மை அறிதுயில் படுத்தலாம். நமக்கு நாமே அறிதுயில் படுத்தியும் கொள்ளலாம். நமக்கு நாமே அறிதுயில் படுத்திக் கொள்வதை ஆங்கிலத்தில் ''Self Hypnotic Sleep'' என்று சொல்வார்கள். தமிழில் அதனைச் சுய அறிதுயில் என்று சொல்வதுண்டு.

சூர்ப்பணகை சொன்ன வடிவைத் திருப்பித் திருப்பி இராவணன் நினைத்ததால் அவ்வடிவு அவன் அடிமனத்தில் போய் ஒன்ற இந்த அறிதுயில் நிலை உண்டாகியிருக்கிறது. இதன் விளைவாகத்தான் இராவணன் சீதையை உருவெளியில் காண்கின்றன். இந்த அறிதுயிலைத்தான் சூர்ப்பணகை பின்வருமாறு விளக்குகிறள்.

''ஊன்றும் உணர்வு அப்புறம்
ஒன்றினும் ஓடல் இன்றி
ஆன்றும் உளதுஆம்
நெடிதுஆசை கனற்ற நின்றய்க்கு
ஏன்று, உன்எதிரே, விழிநோக்கும்
இடங்கள் தோறும்
தோன்றும், அணையாள்;
இதுதொல்நெறித்து ஆகும்'' என்றள்.

''சுய அறிதுயில்'' பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் பலநூற்கள் வெளிவந்துள்ளன. அவற்றைப் படித்துப் பார்த்தால் கீழ்க்கண்ட கருத்துக்கள் தெரியவரும் :-

சுய அறிதுயிலில் வீழ்ந்த ஒருவன் விழிப்பு நிலைக்கு வந்த பிற்பாடும் எந்தப் பொருள் அவன் மனத்தில் பதிந்துள்ளதோ அந்தப் பொருளைத் தான் வெளியிலும் காண்பான். அதாவது வெளியில் பார்க்கும் பொழுது மனத்தில் பதிந்துள்ள வடிவாகத்தான் அந்தப் பொருளைப் பார்ப்பான். உதாரணமாக ''லீலாவதி'' என்பவள் உண்மையில் சிவப்புநிறம் உள்ளவள் என்று வைத்துக் கொள்வோம். அவளைக் கரியநிறம் உள்ளவள் என்று நாம் ஒருவரிடம் மிக அழுத்தமாகச் சொன்னல் அந்த எண்ணம் அவர் மனத்தில்

அவன் மாரீசனைப் பார்க்கச் சென்றதாகத்தான் வான்மீகி சொல்கிறார். கம்பன்தான் மணிமேகலைத் தத்துவத்தைக் காப்பாற்றுவதற்காக இவ்வாறெல்லாம் பாடியிருக்கிறான். இதனை அறியும் போது நம் உள்ளம் பேருவகை கொள்கிறது.

கம்பனுக்குப் பின்னே வந்த துளசிதாஸர் அவன் வழியே மணிமேகலைத் தத்துவத்தை ஓரளவு அறிந்திருக்கிறார் என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது. ''இராமருக்கு ஏதோ ஆபத்து என்று சீதை நினைத்து இலக்குவனை விரைந்து போய்ப் பார்க்கும்படி சொல்கிறாள். அவன் அவளைத் தனிமையில் பர்ணசாலையில் விட்டு விட்டுச் செல்கிறான். அப்பொழுது சீதை அக்கினிப் பிரவேசம் செய்து தன்னை மறைத்துக் கொண்டு ஒரு மாயா சீதையை உருவாக்கிப் பர்ணசாலையில் வைக்கிறாள்; அந்த மாயா சீதையைத்தான் இராவணன் மோகித்துத் தூக்கிச் செல்கிறான். இதனால்தான் இராவண வதம் முடிந்த பின்னர் மாயா சீதையை அக்கினிப் பிரவேசம் செய்வித்து உண்மைச் சீதையை இராமர் வெளியே கொண்டு வருகிறார்,'' இவ்வாறு துளசிதாஸர் தம் இராமாயணத்தில் சொல்கிறார். ஆனால், இது முழுக்க முழுக்கப் பௌராணிகமாக இருக்கிறதேயன்றி இலக்கியமாக இல்லை.

கம்பன் இலக்கிய உத்திகளைக் கையாண்டு அற்புதமாக மணிமேகலைக் கருத்தை நிறைவு செய்திருக்கிறான். அவனின் அளவற்ற திறமைக்கு இதனைவிட வேறு சான்று வேண்டுவதில்லை.

கம்பன் வாழ்க! அவன் புகழ் வாழ்க.

உ
கம்பன் புகழ் வாழ்க!
கன்னித் தமிழ் வாழ்க.

அமரர் கம்பன் அடிப்பொடியே உடன்பட்ட சில திருத்தங்கள்

திரு. கம்பராமன்

திருவாய் மொழிக்கு அமைந்த உரைகளுள் தலைசிறந்தது முப்பத்தாறாயிரம் படியாகும். இத்தகைய பேருரை எந்த நூலுக்கும் அமையவில்லை. இப்பேருரையின் தவப்பயனாக ஸ்ரீமத் மணவாள மாமுனிகள் அவதரித்தனர். இப்பெருமகனாரின் சிறப்பைச் செங்கோலுடைய திருவரங்கச் செல்வரே உணர்வார்.

ஸ்ரீமத் மணவாள மாமுனிகள் முப்பத்தாறாயிரப் படியைப் பக்தர்கள் உள்ளத்தில் குடிபுகச் செய்தனர். இதனால் மனம் உவந்த திருவரங்கன் இவருக்கு ''முப்பத்தாறாயிரப் பெருக்கர்'', என்ற திருப்பெயரை வழங்கினான்.

இதுபோல் கம்பநாட்டாழ்வார் திருவாய் மலர்ந்த இராமாவதாரத்தை எங்கும் பரப்பிய அமரர் கம்பன் அடிப்பொடியை 'இராமாவதாரப் பெருக்கர்'' என்று கூறலாம்.

அமரர் கம்பன் அடிப்பொடியின் இலட்சியம் கம்பன் புகழைப் பரப்புவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தது. இந்தப் பெருமகனாரின் சலியா உழைப்பே, இராமாவதாரம் பலபல பதிப்புக்களாக வெளிவரக் காரணமாயிருந்தது.

''இராமாவதாரம் உலகமகா காவியம். இதற்குச் சிறந்த பதிப்பு வெளிவர வேண்டும்; சிறந்த உரை வெளிவர வேண்டும்; சிறந்த ஆய்வுரைகள் வெளிவர வேண்டும்'' என்று சந்தர்ப்பம் நேரும் போதெல்லாம் கம்பன் அடிப்பொடி கூறுவார்.

இப்பெருமகனார் யாராவது இராமாவதாரப் பாடலுக்குச் சிறந்த பாடமாவது சிறந்த விளக்கமாவது வழங்கினால் பேருவகை கொள்வார். அவர் தரும் விளக்கத்தையும், பாடபேதத்தையும் சிந்திப்பார். அவற்றுள் தக்கவற்றை மனத்திற் பதித்துக் கொள்வார்.

அடியேன் இராமாவதாரம் பயிலும் போதெல்லாம் சில ஐயங்கள் தோன்றும். அந்த ஐயங்கள் சில தொடர்களின் உண்மையான வடிவத்தை எனக்கு வழங்கின.

என் ஐயங்களைக் கம்பன் அடிப்பொடியின் திருமுன் சமர்ப்பிப்பேன். அவர் விளக்கம் தருவார். அவ்விளக்கம் கம்பன் புகழுக்கு அமைந்த திலகமாக இருக்கும்.

கம்பனடிப்பொடியின் முன்னர் பாட பேதங்களை ஆராய்ந்தே கூறுவேன். தவறான பாட பேதங்களைக் கூறினால் கம்பனடிப்பொடி சீறுவார். இப்படி எவன் எவனோ சுவடிகளில் புகுத்திய பாட பேதங்கள்தான் இன்று நமக்குத் தலைவலியைத் தருகின்றன என்பார்.

கம்பன் அடிப்பொடியின் சீற்றத்தைக் கருதாமல் நான் எனக்குத் தோன்றிய பாடபேதங்களைக் கூறுவேன். அவர் சிலவற்றை மறுப்பார்; சிலவற்றை ஏற்றுக் கொள்வார்.

பலமுறை ''நீகூறியபாடபேதம் நன்றாக உள்ளது; ஆனால், அதை எந்தச் சுவடியாவது உடன்பட்டால் நான் மகிழ்வேன்'' என்பார். ''நான் கூறும் பாடபேதம் வரைந்த சுவடி எங்கோ இருக்கும்'' என்பேன். அத்துடன், நான் ''கம்பன் காவியம் ஒளிபெற வேண்டும் என்று கருதுகின்றேனேயன்றி வேறு ஒன்றும் கருதவில்லை'' என்பேன்.

பிடிவாதத்தையே ஆபரணமாகப் பூண்ட அமரர் கம்பனடிப்பொடியே சில பாட பேதங்களை நான் கூறிய போது மிக்க உணர்வுடன் ''இப்பாட பேதத்தைச் சுவடிகள் உடன் படாமல் போனாலும் ஏற்றுக் கொள்கிறேன்'', என்று கூறியுள்ளார்.

இராமாவதாரப் பெருக்கர், அமரர் கம்பன் அடிப்பொடி உடன்பட்ட பாடங்களுள் இரண்டை வாசகர்கள் முன் சமர்ப்பிக்கிறேன். வாசகர்களே, யுத்த காண்டத்திற்கு வாருங்கள்.

இராமபிரான் அங்கதனை இராவணன்பால் (தூதனாக) அனுப்புகின்றான். அவனும் இலங்கை சென்று அரக்கர்கோனைக் காண்கிறான். அரக்கர் கோன் அங்கதனை நோக்கி ''மனிசனுக்காக அஞ்சாது இங்கு வந்து இதனைச் சொன்ன தூதன் நீ யாவன்?'' என்று வினவுகின்றான். அப்போது அங்கதன்,

இந்திரன் செம்மல்: பண்டு ஓர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடு
வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித்
திரிந்தவன்: தேவர் உண்ண
மந்திரப் பொருப்பால் வேலை
கலக்கினான் மைந்தன்''

என்று கூறுகிறான்.

எதிரே இருப்பவன் வாலியின் புதல்வன் என்று தெரிந்த இராவணன் உள்ளம் களிக்கிறது. இவனை நம் பக்கல் சேர்த்துக் கொண்டால் நல்லது என்று விரும்புகிறான். பிறகு கடந்து போனவற்றை ஆதாரமாகக் கொண்டு அங்கதன் மனத்தைக் கவர முடிவு கட்டுகிறான். உடனே இராவணன் மனதில் போலிப்பாசம் மலைமலையாகக் குவிகிறது. அந்தப் போலியன்பு திறமையாகப் பேசுகிறது. [போலியன்பு சொக்கத் தங்கம் போல் ஒளிவீசும். விழிப்பாக இருக்க வேண்டும்.]

இசைக்கலையில் வல்ல இராவணன் சுரபேதங்களுடன் பேசுகிறான். அப்பேச்சைக் கம்பன் நுட்பமாகத் தெரிவிக்கிறான். அப்பாடலில் உள்ள சொற்கள் யாவும் பன்முறை தேர்ந்து ஆராய்ந்து அமைக்க பெற்றவை. கவிதையைப் படியுங்கள்.

'உந்தை என் துணைவன் அன்றே
ஓங்கு அறச் சான்றும் உண்டால்:
நிந்தனை இதன் மேல் உண்டோ?
நீ அவன் தூதன் ஆதல்:
தந்தனன் நினக்கு யானே
வானரத் தலைமை: தாழா
வந்தனை நன்று செய்தாய்:
என்னுடை மைந்த' என்றான்.

''என் மகனே! உன் தந்தை என்னுடைய சகோதரன். இதற்கு ஓங்கிய தர்மமே சாட்சி. (வீரர்களின் புதல்வனான) நீ மனிதனுக்குத் தூதுவனாதல் இழிக்கத் தக்கதாகும்; (அவனை விட்டு) காலதாமதம் செய்யாமல் வந்து விட்டாய்; உனக்கு வானரங்களின் தலைமைப் பதவியைத் தந்துவிட்டேன். நீ நன்மை செய்தாய்;'' என்று கூறினான்.

இப்பாடலில் ஒரு கருத்து முரணாக உள்ளது. அறத்தையே கருதாதவன் இராவணன். வாலியும் அப்படியே. கொடியவனான இராவணன் ''உந்தை என் துணைவன் அன்றே; ஓங்கு அறச் சான்றும் உண்டால்'', என்று கூறுவானா? அணிமதில் இலங்கையைத் தாண்டி அறம்புகாது. கவிச்சக்கரவர்த்தி,

''திறம்பு காலத்து யாவையும்
சிதையினும் சிதையா
அறம்புகாது இந்த
அணிமதில் கிடக்கைநின் றகத்தின்''

என்று நயம்பெறக் கூறுவான்

அறத்தின் வடிவான வீடணன் இலங்கையில் இருப்பது ஓர் அதிசயம். தருமம் தனக்குரிய வெண்மை நிறத்துடன் இருப்பது கடினம் என்று கருதிக் கரிய நிறத்துடன் உள்ளது,'' என்று கம்பன் கூறியது அற்புதம். இதை அறியாதார் அறியாதாரே.

கருநிறத் தோர் பால்
வெளித்து வைகுவது அரிதென
அவருரு மேவி
ஒளித்து வாழ்கின்ற
தருமம் அன்னான்

என்னும் பகுதி பலமுறை படித்து அனுபவிக்கத் தக்கது.

அறமே நடமாடாத இலங்கையில் வாழும் இராவணன் அறத்தை நினைப்பானா?சிந்தித்தேன்; திகைத்தேன். இராமபிரான் கானகம் செல்லும் போது கோசலை 'நீ இதுவரை மேற் கொண்ட அறம் உன்னைப் பாதுகாக்கட்டும்' என்றாள். (வால்மீகம்) இம்மொழி கூறும் பாத்திரத்துக்கு ஏற்ப அமைந்துள்ளது. ஆனால் இங்கு...

எனக்குத் தோன்றிய ஐயம் பல்லாண்டுகட்கு முன்பு யாருக்கோ தோன்றிற்று. அவர் தன் னுடைய சுவடியில் ஒரு சிறு மாற்றம் செய்தார். "ஓங்கு நற்சான்றும் உண்டால்" என அமைத்து மகிழ்ந்தார். இராமாவதாரத்துக்குப் பேருரை கண்ட சான்றோர் இப்பாடத்தையே மேற் கொண்டார். இப்பாடம் அதற்கு ஏற்ப அமைக்கப்பட்டதாகும். (உண்மையில்லை)

வால்மீகம் ''இராவணனும், வாலியும் அழல் சான்றாக நட்புப் பூண்டனர்,'' என்று கூறும் இதை, வடமொழிப் புலவர்களும், தமிழ்ப் புலவர்களும் அறிவர்.

''ஓங்கறச் சான்றும் உண்டால்'' என்பதை ''ஓங்கழல் சான்றும் உண்டால்'' என மாற்றின் நல்லது. இக்கருத்தைக் கேட்ட கம்பனடிப்பொடி ''இப்பாடம் உண்மையான பாடம்; ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார். உடனே, ஒரு கடிதத் தில் குறித்துக்கொண்டார்.

''ஓங்கழற் சான்றும் உண்டால்'' என்னும் தொடர் பாட பேதத்தாலும், பிரதி பேதத்தாலும் ''ஓங்கறச் சான்றும் உண்டால்'' என மாறி வருவது இயற்கையே.

இராமாவதாரத்திலே உயர்ந்த காண்டம் சுந்தர காண்டம் என்பர். இக்காண்டத்தின் இதயம் போன்ற பகுதி அனுமன் பிராட்டியிடம் இராமபிரானின் திருமேனியை வருணிக்கும் இடமாகும். இங்கு ஒரு பாடலில் உள்ள சிறு பேதம் பெரும்பிழைக்குக் காரணமாய் உள்ளது. அப் பாடலைப்பாருங்கள்.

'புல்லல் ஏற்ற திருமகளும்
பூவும் பொருந்தப் புவி ஏழும்
எல்லை ஏற்ற நெடுஞ் செல்வம்
எதிர்ந்த ஞான்றும் அஃதின்றி
அல்லல் ஏற்ற கானகத்தும்
அழியா நடையை இழிவான
மல்லல் ஏற்றின் உளதென்றால்
மத்த யானை வருந்தாதோ'.

இப்பாடலை நூறு முறை படித்தாலும் பிழை யிருப்பதாகவே தெரியாது.

''திருமகளும் பூமகளும் தழுவிய காலத்திலும், எல்லாவற்றையும் இழந்து துன்பத்தை ஏற்றுக் கொண்ட கானகத்திலும், விகாரம் அடையாத (இராம பிரானின்) நடைக்கு உவமையாக அற்ப மான காளையைச் சொன்னால், யானை வருந்தாதா?'' என்பது அப்பாடலின் பொருள்.

இந்த உரை நடையை ஒருமாணவன் எழுதி யிருந்தால், ஆசிரியர் அம்மாணவனின் காதைத் திருகுவார். கட்டுரையைத் திருத்துவார். அத் திருத்தம் யாது?

மேலே கண்ட உரை நடையை நச்சினார்க் கினியர் சுருக்கினால் (சிந்தாமணியில் இங்ஙனம் வரைந்துள்ளார்) அது பின்கண்டபடி அமையும்.

''பெரும் செல்வம் எய்திய காலத்திலும், அதையிழந்த கானகத்திலும் அழியாத நடை என்க'' என்று இனியர் சுருக்குவார். இப்போது உங்கட்குப் பிழை தெளிவாகத் தெரியும் என்று கருதுகின்றேன். வேறு ஒருவிதமாக ஒரு தொடர் வரைகின்றேன்; பாருங்கள்; பிழை புரியும்.

''கம்பன் திருநாள் மகத்திலும் நாட்டரசன்
கோட்டையிலும் நடை பெறும்.''

இத்தொடர் பிழையில்லை என்றால், மேலே காட்டப் பட்ட சுருக்க உரைநடையும், பெருக்க உரை நடையும், இவற்றிற்கு மூலமான பாடலும் பிழையற்றனவாகும்.

வாசகர்கள் விழித்துக்கொள்வார்கள். உடனே கடைசியில் காட்டிய உரை நடையைப் பின்வருமாறு திருத்துவார்கள்.

''கம்பன் திருநாள் மகத்திலும் அத்தத்திலும் நடைபெறும், என அத்திருத்தம் அமையும். வாசகர்களைத் திருத்தியதற்குக் காரணம் கேட்டால் அவர்கள் ஒரு பகுதியில் காலமும்,

மற்றொரு பகுதியில் இடமும் வருவது பிழை என்பார்கள்.

மறுபடி மேலே காட்டிய இரு வகைத் தொடர் களை நோக்குவார்கள். வேகமாகத் திருத்துவார் கள். சுருக்கமாக உரைநடையை பெரும் செல் வம் எய்திய காலத்திலும், அதை இழந்த காலத் திலும் அழியா நடை என்று திருத்துவார்கள். உண்மையைக் கண்டவர்கள் கை, தொடக்கத்தில் வந்த உரை நடையைப் பின் வருமாறு திருத்தும்.

திருமகளும் பூமகளும் தழுவிய காலத்திலும், எல்லாவற்றையும் இழந்து, துன்பத்தை ஏற்றுக் கொண்ட காலத்திலும். விகாரம் அடையாத (இராமபிரான்) நடைக்கு உவமையாக அற்பமான காளையைச் சொன்னால் யானை வருந்தாதா?

இப்படி உரைநடைகளைத் திருத்த முனைந்த கரங்கள் பாடலைத் திருத்த முயலாமல் பின் வாங்கும்; பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு வேண்டாம் என்று கூறும்.

சான்றோர் ''தப்பைத்தானே திருத்துகின்றோம். மூலத்தைத் திருத்தவில்லையே'' என்று சிந்திப்பர். சான்றோர்கள், வாசகர்கள் கானம் என்ற சொல் லைக் காலம் என்று திருத்தியதைப் பார்த்துத் தேறிஅல்லல் ஏற்ற கானத்தும்,என்ற தொடரில், ஒரே ஒரு எழுத்தை மாற்றுவர். கானத்தும் என்பதைக் காலத்தும் என்று மாற்றுவர்.

இம் மாற்றம் சிறியதுதான். ஆனால், அதனால் ஒரு பெரிய இலக்கணப் பிழை நீக்கப்படுகிறது. சாதாரணமாக எனக்குத் தோன்றிய ஐயம் முன்னம் யாருக்கோ தோன்றிற்று. அவர் இப்பாட லைப் பலவிதமாக மாற்றியுள்ளார் (அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பைப் பாருங்கள்)

இப்பாட பேதத்தைக் கம்பனடிப்பொடி கேட்டு பேருவகை உற்றார். இவர் ''உன் அறிவு இதை உனக்குக் கூறவில்லை; நீ கம்பனைத் தெய்வமாக வழிபடுகிறாய். அவ்வழிபாடே இதை உனக்குத் தெரிவித்தது'' என்றனர்.

உலக மகா கவியான கம்பன் பாடல்களில் சிறு தூசுகூடப்படக்கூடாது என்று அடியேன் கருது கின்றேன். அந்த எண்ணத்தால் எழுதியதில் தவறு இருந்தால் அறிஞர் உலகம் அடியேனை மன்னிக்க வேண்டும். திருத்திய பாடலை மறு படியும் படியுங்கள்.

''புல்லல் ஏற்ற திருமகளும்
பூவும் பொருந்தப் புவி ஏழும்
எல்லை ஏற்ற பெருஞ்செல்வம்
எதிர்ந்த ஞான்றும் அஃதின்றி
அல்லல் ஏற்ற காலத்தும்
அழியா நடையை இழிவான
மல்லல் ஏற்றின் உள தென்றால்
மத்த யானை வருந்தாதோ?''

★

போர்க்களத்தில் ஒரு போக்குவரத்து நெரிசல்

திரு த. கி. நீலகண்டன்

''கம்பன் காவியம் காலத்தை வென்று நிற்பது எதனுல்?'' என்ற கேள்வி ஒரு விவாதத்தில் எழுந்தது. காவியம் எழுதப்படும் பல நூற்றுண்டுகள் கழிந்த பின்னும் அது மக்களால் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றுல் அதற்குரிய சிறப்பான காரணம் எதுவாக இருக்க முடியும்? மனிதர்கள், மனித இயல்புகள், மனித வாழ்க்கை சம்பந்தப்பட்டதாகத்தானே இருக்க வேண்டும்.

தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ சில அடிப்படைப் பண்புகள், உணர்வுகள், இயல்புகள் காலங்காலமாக மனித இனத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் எழுந்த கதைகளும் காப்பியங்களுமே காலத்தை வென்று நிற்கின்றன. சங்கிலித் தொடர் போல ஒன்றையொன்று தழுவிய தலைமுறைகளின் பழக்க வழக்கங்கள் மாறினுலும் பண்புகள் மாறுவதில்லை. காவியம் எழுதப்பட்டு பல முறை மண் புரண்டு, மனித நாகரீகம் புரண்டு விட்ட பிறகும் கூட, கம்பனது கதாபாத்திரங்களில் மனிதர்கள் தங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். கதை நிகழ்ச்சிகளில் தாங்கள் வாழும் சூழல்களை இனம் கண்டு கொள்ள இயலும். மனித உணர்வு, இதயப்பண்பு என்றதும் கண்ணுக்குப் புலப்படாத (Abstract) ஒன்றைக் கற்பனை செய்ய வேண்டியதில்லை. எல்லாம் நம் கண்முன் அன்றுடம் நடக்கும் நிகழ்ச்சிகள் தான். நகரங்களின் நெருக்கடியில் நமக்குத் தினமும் பழகிப்போன போக்குவரத்து நெரிசலையும் (Traffic Jam) அதோடு ஒட்டிய மனித இயல்புகளையும், உணர்ச்சிகளின் மோதலையும் கூட கம்பனுல் காணவும் பிறருக்குக் காட்டவும் முடிந்திருக்கிறது.

இப்போதைய அவசர யுகத்தில் நாம் காணும் ஒரு காட்சியைக் கம்பன் இவ்வளவு தத்ரூபமாக எழுதியிருக்கிருனே என்று நான் வியந்ததுண்டு. அலுவலக அவசரத்தில் நகரின் பிரதான சாலைகளில் போக்குவரத்து திடீரென்று ஸ்தம்பித்து விடும்போது படும் அவதி, அதில் மாட்டிக் கொண்டவர்களுக்கே தெரியும். வேலையின் நெருக்கடியில் உணர்ச்சிகள் மேலோங்கி மோதிக் கொள்ளும். என்ன நடந்தது? எதனுல் இப்படி ஓட்டம் தடைபட்டது? என்று யாருக்குமே தெரியாது. ''என்ன ஆயிற்று''? என்றுகேட்பவர்களிடமும் அதே கேள்வியைத் திருப்பிக் கேட்பார்கள் ஒருவரை ஒருவர். ஒரு வாகனத்தை இன்னொரு வாகனம் நெருக்கிக்கொண்டு நிற்கும் நெருக்கடியில் உடலும் உள்ளமும் ஒரு சேரப் புழுங்கும்.

அங்குமிங்கும் உள்ள இடைவழியில் யாரேனும் புகுந்து புறப்பட்டு வர முற்பட்டால் முன்னுல் இருப்பவர் வழிவிடமட்டார். இந்த நிலையில் முடிந்தால் ஆகாயத்திலே கூட எழும்பத் துடிக்கும் இயல்பு இன்று நேற்றல்ல; என்றுமே உண்டு. கம்பன் அழகாகக் காட்டுகிருன்.

சுந்தர காண்டத்தில் கிங்கரர் வதைப்படலக் காட்சி. இது கம்பராமாயணம் என்பதை மறந்து விட்டுப் படித்தாலும் மனதில் தைக்கிற காட்சி. அரக்கர் சேனை அனுமனேடு போரிடக் கிளம்புகிறது. சண்டைக்குப் போகிறவன் அவசரமும் சாப்பிடப் போகிறவன் அவசரமும் வேறு யாருக்கும் வராது. (என்னைப் பொருத்தவரை உண்மையான வீரனுக்குப் ''படைக்குப் பிந்து'' என்கிறது பொருந்தாது) அந்த அவசரத்தில் ஓடும் அரக்கர்களின் கூட்டத்திலும் ஓட்டத்திலும் ஏற்பட்ட தடையினுல் உண்டான ''போக்குவரத்து நெரிசலைக்'' கம்பன் காட்டுகிருன். நமக்கு வேண்டியது மூன்றே மூன்று பாடல்கள்.

''பொன் நின்று கலுலும் தெய்வப்பூணினர்;
பொருப்புத் தோளர்;
பின்னின்ற படையும் கண்ணும் வெயில்
விரிக்கின்ற மெய்யர்''

ஆடை ஆபரணங்களும், ஆயுதங்களுமாக மின்னிக்கொண்டு மினிக்கிக்கொண்டு ஓடும் அரக்கர் சேனையின் ஓட்டம் திடீரெனத் தடைபடுகிறது. 'என்ன ஆயிற்று? ஏன் நின்றது ஓட்டம்? யாருக்குத் தெரியும்''? ஒருவரையொருவர் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டு விடைபெறுது விழிக்கின்றனர்.

என் என்றுர்க்கு என்? என்? என்றுர்;
எய்தியது அறிந்திலாதார்
முன் நின்றுர் முதுகு தீயப் பின்னின்றுர்
முடுகுகின்றுர்.

முன்னுல் நிற்பவர் நகராது நிற்க, பின்னுல் வருபவர்மேலும் நெருக்க, நிலைமையில் சிக்கல் அதிகமாகித் தீர்வு யாருக்குமே தெரியாமல் போகிறது. எல்லோரும் ஒரே நிலையில் இருக்க யார், யாருக்கு வழிகாட்டுவது? யார், யாருக்குப் பதில் சொல்வது? போக்கு வரத்துக் காவல்துறை இல்லாத இடத்தில் (அல்லது போக்கு வரத்துக் காவல்துறை தூங்கிவிட்ட இடத்தில்) உண்டாகும் நெருக்கடி, தலைவனில்லாத அல்லது எல்லோருமே தன்னைத் தலைவன் என்று கூறிக்கொள்ளும் இடத்தில் உண்டாகிறது.

இப்படிப்பட்ட நெருக்கடியில் முன்னுல் நிற்பவரை இடித்துத் தள்ளிக்கொண்டு இடைவழியில் நுழைந்து போகத் துடிக்கும் ஒருவனை யார்தான் விடுவார்கள். அப்படி முறைமீறிச் செல்பவனுக்கு மற்றவர்கள் வழிவிட மறுக்கிறுர்கள். ஆனுல், எல்லோருமே அப்படி முறைமீறிச்செல்ல முயற்சி செய்கிறுர்களாம்.

ஒருவரின் ஒருவர் முந்தி முறைமறுத்து
உருக்கின்றுரும்
வரிவிலது இலங்கை என்று வழிபெரு
விழிக்கின்றுரும்.

சில அரக்கர்கள் வான வழியிலே செல்லவும் முற்படுகிறுர்கள்.

தெரு இடம் இல் என்று எண்ணி வானிடை செல்கின்றுரும் என்று மனித இனத்தின் ஆதங்கத்தோடு பாடலை ஆரம்பிக்கிறுர் கம்பர்.

தெரு இடம் இல் என்று எண்ணி,
வானிடை செல்கின்றுரும்
புருவமும் சிலையும் கோட்டி புகை
உயிர்த்து உயிர்க்கின்றுரும்
ஒருவரின் ஒருவர் முந்தி முறைமறுத்து
உருக்கின்றுரும்
விரிவிலது இலங்கை என்று வழிபெறுர்
விழிக்கின்றுரும்.

புகை உயிர்த்து உயிர்க்கின்றுரும் என்ற வரியில் இக்காலத்து புகை உமிழும் வாகனங்களும் உயிர்பெற்றுக் கவிதையில் தெரிகின்றன.

முன்னே செல்ல வழி இருக்கும் என்ற நம்பிக்கையில் இடம் பெயர்ந்து விட்டவர்கள், அந்த வழி அடைபட்டுப் போன ஏமாற்றத்தில் பழைய இடத்துக்கே திரும்ப முற்பட, அந்த இடத்தை இன்னொருவன் அடைத்துக்கொள்ள, ''இது என் இடம்'' என்று வரட்டு அதிகாரத்துடன் மிரட்டுகிறுர்களாம்.

''தாள் பெயர்த்து இடம் பெறுது
தருக்கினர் நெருக்குவாரும்'' என்று

முத்தாய்ப்பு வைக்கிறுன் கவிஞன். கவிதையைப் படிக்கும்போது இன்றைய சூழல் கண்முன் விரிகிறது. மனிதர்களின் இரைச்சல், வாகனங்களின் ஒலியோடு சேர்ந்து காதில் விழுகிறது.

இது மிகச் சாதாரணமான நிகழ்ச்சி. ஏன்? அற்பமானதாகக்கூடப்படலாம். ஆனுல் இங்கு தோன்றும் உணர்ச்சிகளும் கோபதாபங்களும் யதார்த்தமானவை. நியாயமானவைகூட. மனித இயல்பு அப்படி. இந்தச் சாதாரண நிகழ்ச்சி கூட கம்பனின் மெருகை ஏற்று புதிய கோணத்தில் பளிச்சிடுகிறது. இன்றைய சூழலிலும் உண்மையாக பாடலை அனுபவிக்க முடிகிறது. ஏன்—இப்படிப்பட்ட நெருக்கடியில் மாட்டிக்கொள்ளும்போது அந்த நெருக்கடியும் ரசிக்கும் படியாக இருக்கிறது — கம்பனின் கைவண்ணத்தால்.